விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள் உறவுகளுக்கு தரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2048 மார்கழி 16 ஞாயிற்றுக்கிழமை (31.12.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 012

## தமிழ் மக்களின் தலைவராக முதலமைச்சர் இருப்பதால்தான்

# விக்னேஸ்வரன் மீது தமிழரசு சாடுகின்றது

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்) தமிழ் மக்கள் மட்டத்தில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைவராக இருப்பதால் தான் தமிழரசுக் கட்சி அவர் மீது சேறு பூசும் நடவடிக்கைகளில் ஈடுபட ஆரம்பித்துள்ளது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடுமையாகச் சாடியுள்ளது.

மேலும் தமிழரசு கட்சியின் செயலாளர் கூறுவது போன்று முதலமைச்சருக்கு பதவி ஆசை இருந்திருந்தால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தவறுகளை சுட்டிக்காட்டியிருக்கமாட்டார் எனவும் தெரிவித்துள்ளது. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் மற்றும் பொது அமைப்புகள் இணைந்து தமிழ்த் தேசிய பேரவை எனும் பெயரில் உள்ளூராட்சித்தேர்தலில் களமிறங்குகின்றன.

இதில் வட்டுக்கோட்டை தொகுதி வேட்பாளர்களை அறி 15☛

## யாழில் இவ் வருடத்தில் 5,783 பேர் டெங்கால் பாதிப்பு

### சுகாதார பணிப்பாளர் நந்தகுமார்

(யாழ்ப்பாணம்)

இந்த வருடத்தில் டெங்கு காய்ச்சலால் யாழில் 5 பேர் மரணம் அடைந்துள்ளதாக தெரிவித்துள்ள யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கே.நந்தகுமார், 5 ஆயிரத்து 783 பேர் டெங்கு தொற்றுக்கு 15☛



## மக்களின் ஆதரவை பெறவே தமிழரசுக்கட்சி துரோகத்தனம்

### சட்டத்தரணி சுகாஸ் காட்டம்

(யாழ்ப்பாணம்)

ஒற்றையாட்சி அரசியலமைப்பை சமஷ்டி அரசியலமைப்பாக மக்களிடத்தே கூறி மக்களுடைய ஆதரவை பெறுவதற்காக தமிழரசுக் கட்சி துரோகத்தனம் செய்ய ஆரம்பித்துள்ளது.

இனியாவது தமிழ் மக்கள் விழிப்படையா விட்டால் தமிழ் மக்களை கடவுளாலும் காப்பாற்ற முடியாது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் சட்டத்தரணியுமான சுகாஸ் கனகரத்தினம் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய பேரவையின் வேட்பாளர்களை அறிமுகம் செய்து வைக்கும் நிகழ்வும் பத்தி 15☛

## மார்ச் 31—ம் திகதி வரை நாணயத்தாள் மாற்றலாம்

(கொழும்பு)

சேதமடைந்த நாணயத்தாள்களை மாற்றிக்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கி வழங்கியிருந்த கால எல்லை மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்படவுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

சேதமடைந்த நாணயத் 16☛

## சுகாதார உத்தியோகத்தர்களாக பாசாங்கு செய்து தாலிக்கொடி அறுப்பு

### நாவற்குழியில் நேற்று காலை சம்பவம்

(கரணவாய்)

யாழ்ப்பாணம் கைதடி நாவற்குழி தெற்கு பகுதியில் ஏழு பவுண் தாலிக்கொடி அறுக்கப்பட்ட சம்பவம் ஒன்று, நேற்று காலை இடம்பெற்றுள்ளது.

சுகாதார உத்தியோகஸ்தர்கள் என தெரிவித்து கழுத்துப்பட்டி, சப்பாத்து அணிந்து, மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் வீட்டுக்குள் நுழைந்து ஏழு பவுண் தாலிக் கொடியை அறுத்துச்சென்றுள்ளனர்.

நேற்று காலை.9.20 மணிக்கு நாவற்குழி தெற்கு கோவிலாக்கண்டிப்பகுதியில் இராமையாபிள்ளை பிள்ளையம்மா என்ற 58 வயதுடைய குடும்பப் பெண்ணின் தாலியையே இவ்வாறு அறுத்துச்சென்றுள்ளனர்.

குறித்த வீட்டுக்குச் சென்றவர்கள சுற்றாடலில் நுளம்புப் பெரு 15☛

## புதிய பேருந்து நிலையத்துக்கு செல்லுமாறு நிர்ப்பந்தித்தால்

### பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடுவோம்

(வவுனியா)

புதிய பேருந்து நிலையத்திற்கு செல்லுமாறு தம்மை கட்டாயப்படுத்தினால் முதலாம் திகதி தொடக்கம் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடப்போவதாக இலங்கை போக்குவரத்து சபையின் இணைந்த தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று இலங்கை போக்குவரத்து சபையின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தொழிற்சங்கத்தின் தலைவர் வாமதேவன் இருந்து தெரிவிக்கும்போது இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவித்த அவர், பேருந்து நிலையம் 15☛

### காணி விடுவிக்கப்படாதவர்கள்

## வீதியிலிருந்து கண்ணீர் விட நாங்கள் எவ்வாறு வாழமுடியும்

### கேப்பாப்பிலவு மக்கள்

(பனிக்கன்குளம்)

நாங்கள் எங்கள் காணிக்கு போக மற்றவர்கள் வீதியில் இருந்து கண்ணீர்விட நாங்கள் எவ்வாறு வாழமுடியும் அனைவரின் காணியும் விடுவிக்கவேண்டும் என காணிகளை பார்வையிட்டு வந்த கேப்பாப்பிலவு மக்கள் தெரிவித்தனர்.

கேப்பாப்பிலவு மக்களுக்கு சொந்தமான காணிகளில் படையினர் அபகரித்துள்ள காணிகளில் இருந்து 133.4 ஏக்கர் காணிகள் 28-ம் திகதி மக்கள் முன்னிலையில் படைத்தரப்பில் இருந்து மாவட்ட அர 15☛

## வைரஸினால் பாதிக்கப்பட்ட பெண் முல்லையில் மரணம்

(பனிக்கன்குளம்)

வைரஸ் காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவைச் சேர்ந்த 44 வயதுடைய பெண்ணொருவர் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண்ணை சிகிச்சைக்காக முல்லைத்தீவு வைத்தியசாலையில் அனுமதித்து, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் அனுமதித்திருந்த நிலையில் அவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

வைரஸ் காய்ச்சலினால் வடக்கில் இதுவரை 21 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு வட்டுவாகல் பிரதேசத்தை சேர்ந்த 44 வயதான முருகானந்தன் ஜெயனி என்ற இரு பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார். 15☛

## இன அழிப்புக்கு தி.மு.க துணை

### ஓ.பி.எஸ் தெரிவிப்பு

(சென்னை)

இலங்கையில் தமிழினம் அழிக்கப்பட்டபோது வாய்மூடி மௌனித்திருந்து அழிவிற்குத் துணைபுரிந்தவர்களே தி.மு.க. அரசு என தமிழக துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

மறைந்த தமிழக முதல 16☛

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## Spoken /Business English/ ICT

For those working, migrating & Students 3rd Batch பயிற்சி நெறிகள் காலம்:-Jan-Feb நேரம 08.30 மு.ப-12.30 பி.ப (திங்கள்-வெள்ளி)

1. நுண்திறனும் தொழில்வழிகாட்டியும்
2. Business / Spoken English
3. MS Office. ICT equivalent to NVQ level 3

முதல் 2 நெறிகளுக்கும் கட்டணம் ரூபா: 4000/-
3ம் நெறிக்கு கட்டணம் ரூபா:6000/-

நேரடித்தேர்வுக்கு 3, 4 Jan 2018 திகதிகளில் காலை 10.30இக்கு சமுகமளிக்கவும். மேலதிகவிபரங்களுக்கு இயக்குனர், NTI, 077 650 5580

**Northern Technical Institute. NTI**

**YMCA Building, 107, 2/1 Kandy Rd, Jaffna.**

(1979)



## Beacon A/L வர்த்தகப் பிரிவு- 2020, Day Class

(வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை-யாழ்)

யாழ்.பிரபல ஆசிரியர் குழாமுடன்

கணக்கீடு — சுகிர்தன்

பொருளியல் — பிரதீபன்

வணிகக் கல்வி — தீசன்

**காலம்:06.01.2018 சனிக்கிழமை**

**நேரம்:-காலை 08.00 மணி**

**0770690654**

அனுமதிகளை இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்

(சி-1016)



## A/L 3 passes உடன் BIT degree

கொழும்பு பல்கலைக் கழகத்திடமிருந்து

Semi 1,3 & 5 classes starts on 06.01.2018

By: T.Tharmmendra(BIT,MCSE,MBCS)

BIT 12 years experiences ☎0779785796

2017 இல் 7 பேர் உட்பட இதுவரை 77 பேர்

Project: A+ 2nd Upper உட்பட BIT பெற்றுள்ளனர்

Anyone can register @ www.bit.lk before 15.1.2018

#28/23, Manaltharai Lane, Kandarmadam, Jaffna

(1994)


# கேரள கஞ்சா கடத்திய நான்கு மீனவர்கள் கைது

கேரள கஞ்சாவை இலங்கைக்கு கடத்த முற்பட்ட ஒரு இந்தியர் உள்ளிட்ட நான்கு மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டதுடன் அவர்களிடமிருந்து 39 கிலோ கேரள கஞ்சாவையும் கடற்படையினர் மீட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை கச்சைதீவை அண்மித்த கடற் பரப்பில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இரகசிய தகவலிற்கமைவாக யாழ் காரைநகர் கடற்படையினர் மேற்கொண்ட தேடுதலின்போது படகொன்றில் கஞ்சா இலங்கைக்கு கடத்தப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. (ம)


## அலுவலக வேலைவாய்ப்பு

வவுனியாவில் இயங்கும் சேவை நிறுவனத்திற்கு Billing Staffs/ Cashier தேவை. மோட்டார் வாகனம் இருந்தால் மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும்.

வயது எல்லை 18-40

**தொடர்புகளுக்கு:-**

**0770696816, 0766776934**

(சி-1006)



## நாய்க்குட்டி விற்பனைக்குண்டு

45 நாட்கள் நிரம்பிய கிறேட்டென் குட்டிகள் விற்பனைக்குண்டு.

**தொடர்புகளுக்கு:-**

**0777126536**

(1986)



## வேலையாட்கள் தேவை

17, சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள அச்சகமொன்றிக்கு கணினி வடிவமைப்பாளர் உடன் தேவை.

**நேரில் வரவும் 0777165589**

(1990)



## A/L Day Class

அரசியல் விஞ்ஞானம் — N.பாபு

வரலாறு — S.பிரபா

**ஆரம்பம்:ஜனவரி**

**06 சனிக்கிழமை 9.00 am**

Economics Hall

யாழ்நகர்

**ஐடியல் அக்கடமி**

**சண்டிலிப்பாய்**

**தரன் கல்வியியற் கல்லூரி**

(1989)



## வாகன சுத்திகரிப்பு நிலையம் விற்பனைக்கு

யாழ்.நகருக்கு அண்மையில் விசாலமான நிலப்பரப்புடன் வாகன சேவிஸ் ஸ்டேசன் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு:-0759426609**

(1992)



## கல்வி - தொழில் வழிகாட்டி சேவைக்காக FCCISL விருது வென்ற வடக்கின் 1வது நிறுவனம்

9 வது ஆண்டில் தடம் பதிக்கும்

SIKARAM ACADEMY

Business • Hospitality • Media

FAST TRACK to CAREERS

கொழும்பின் முன்னணி நிறுவனங்களுடன் இணைந்து

**100% உடனடி வேலைவாய்ப்பு, விரும்பிய நாட்டுக்கான விசா உத்தரவாதத்துடன்**

**Business, Tourism Marketing & Hotel Management**

வணிகம், சந்தைப்படுத்தல், சுற்றுலா மற்றும் ஹொட்டேல் முகாமைத்துவம்

Crash Course - Fast Track - Entry Level - Diploma With Cambridge ENGLISH and Sinhala

| சிங்கப்பூர் | மலேசிய | அவுஸ்ரேலிய | நியூசிலாந்து |
|---|---|---|---|
| SDH College இல் வேலைவாய்ப்புடன் கூடிய ஹொட்டேல் கற்கைநெறி | LINCOHN College இல் ஹொட்டேல் பயிற்சியும், வேலைவாய்ப்பும் | Tafe College இல் வேலை, PR ஏற்பாட்டுடன் ஹொட்டேல் கற்கை | NISA இல் வேலை, PR ஏற்பாட்டுடன் ஹொட்டேல் கற்கை |
| **கனடா** | **சுவிஸ்** | **ஜேர்மன்** | **Dubai, Qatar, Kuwait, Saudi** |
| FANSHAWE College வேலை, PR ஏற்பாட்டுடன் ஹொட்டேல் கற்கை | BHMS இல் வேலைவாய்ப்புடன் கூடிய ஹொட்டேல் கற்கைநெறி | உல்லாச கப்பலில் அதிகூடிய சம்பளத்துடன் வேலைவாய்ப்பு | நாடுகளின் உயர் நட்சத்திர ஹொட்டேல், வர்த்தக நிறுவனங்களில் வேலைவாய்ப்பு |

100% வரையான புலமைப்பரிசில்கள்

கற்கைநெறியில் இணையும் அனைவருக்கும் இலவச கொழும்பு சுற்றுலா

**மேலதிக விபரங்களுக்கு:**

**077 36 16 798 / 0777 324 004 / 021 222 00 11**

www.sikaram.lk

(சி-1019)

**Sikaram Academy**

தொழில் பயிற்சி - தொழில் வங்கி வெளிநாட்டு கல்வி - வேலைவாய்ப்பு - விசா

இல.175, 1ம் குறுக்குத்தெரு (லேம்படி வீதி), யாழ்ப்பாணம்


# மரண அறிவித்தல்

## திருமதி ரஞ்சனாதேவி பேரின்பநாதன்

(ஓய்வுநிலை ஆசிரியை சென்சாள்ஸ் வித்தியாலயம் யாழ்ப்பாணம்)



*காரைநகர் நந்தாவில் களபூமியைப் பிறப்பிடமாகவும் இல.03, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரஞ்சனாதேவி பேரின்பநாதன் நேற்று (30.12.2017) காலமானார்.*

*அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் (ஆறுமுகம் ரெக்ரைல்ஸ்) மற்றும் மனோன்மணி தம்பதியினரின் புதல்வியும், இராசரத்தினம்-விசாலாட்சி தம்பதியரின் மருமகளும், பேரின்பநாதன் (யாழ் பான்சி மஹால் பெரியகடை யாழ்ப்பாணம்) அவர்களின் பாசமிகு மனைவியும், பிரசாந்தன் (வர்த்தகவங்கி-வவுனியா), பிரசன்னா (மாணவன் புனித பரியோவான் கல்லூரி யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், நல்லைநாதன், உமாதேவி, சறோஜினிதேவி, கோடீஸ்வரன், கோபாலகிருஷ்ணன், அருள்ஜோதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், இந்திராதேவி, பாக்கியநாதன், பற்பநாதன், சத்தியநாதன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.*


*அன்னாரின் இறுதிக்கிரியைகள் 31.12.2017 ஞாயிற்றுக்கிழமை இன்று முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் இந்துமயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

**இல.03, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.** (சி-1014)

**தகவல்: கணவன், பிள்ளைகள்**

# பிணை முறி ஆணைக்குழுவின் இறுதிஅறிக்கை ஜனாதிபதியிடம்

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



இலங்கை மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பில் விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுவின் இறுதி அறிக்கை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நேற்று நண்பகல் கையளிக்கப்பட்டது. ஜனாதிபதி செயலகத்தில் வைத்து குறித்த அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக் கப்பட்டதாக அந்த ஆணைக் குழுவின் செயலாளர் உடுகம் சூரிய தெரிவித்தார். (இ-7)

## ஜோனுக்கு அஜித் பதிலடி

# அரசாங்கத்தின் தீர்மானங்களில் சுதந்திரக்கட்சிக்கும் பங்குண்டு

(கொழும்பு)

அரசாங்கத்தின் அனைத்து முடிவுகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சி மட்டுமல்லாது அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் பொறுப்புக்கூற வேண்டும் என பிரதியமைச்சர் அஜித் பி.பெரேரா தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தின் பொருளாதார முடிவுகளை ஐக்கிய தேசியக் கட்சி எடுப்பதாகவும், அவை கடும் தோல்வி தன்மையை கொண்டிருப்பதாகவும் அமைச்சர் ஜோன் செனவிரத்ன கூறியிருந்தமைக்கு பதிலளிக்கும் வகையிலேயே பிரதியமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

அரசாங்கத்தின் அனைத்து தீர்மானங்களையும் அமைச்சரவையே எடுக்கின்றது. அந்தவகையில் அமைச்சரவையின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

அமைச்சரவையில் எடுக்கப்படும் கூட்டு தீர்மானங்களே நாட்டில் அமுல்படுத்தப்படுகின்றன. நாட்டை ஆட்சி செய்வது ஐக்கிய தேசியக் கட்சிதான்.

இது யதார்த்தமானது. தீர் மானங்கள் வெற்றியளிக்கும் போது எமது என்பார்கள்.

தவறும் போது தம்முடையதல்ல என்பார்கள் என அஜித் பீ.பெரேரா தெரிவித்தார். (இ-7)


## மார்கழி உற்சவம்

## இசை நிகழ்ச்சி

காரைநகர் சிதம்பராமூர்த்தி வைரவர் கோவிலில் ஏவிளம்பி வருடம் (31.12.2017) ஞாயிற்றுக்கிழமை பி.ப 5.30 மணியளவில் விசேட பூஜைகள் இடம்பெற்று வெற்றிநாதன் அரங்கில் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும். அத்தருணம் ரசிக பெருமக்கள் அனைவரும் வந்து நிகழ்ச்சியை கண்டுகளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**மாலை 6.00 - வேணுகான இசை**

புல்லாங்குழல் :- **இசைஞானமணி பு.நக்கீரன்**
கீபோட் :- **இசைக்கலைமணி N.செல்வசந்திரன்**
மிருதங்கம் :- **இசைக்கலைமணி S.வேல்மாறன்**
தபேலா :- **கலாவித்தகர் S. பிரபாகரசர்மா**
கடம் :- **N. கேதாரநாத்**

**இரவு 7.30 - சொற்பொழிவு**

"தாயிற்சிறந்த ஒரு கோவிலும்இல்லை
தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை"
எனும் பொருள் பற்றி **"சர்வசாதக சக்கரவர்த்தி" "சபரிமலை குருஸ்சுவாமிஜி" Dr. அருள்ஜோதி ஸ்கந்த ஆரம்பசிவ ஜெகதீஸ்வர சிவாச்சாரியார் JP** அவர்கள்


**இரவு 8.00 விசேட மேளக்கச்சேரி**

நாதஸ்வரம் :- **K. பவப்பிரியன்** (பல்லவிவேந்தன்)
**தேவிவரப்பிரசாத்** (ஆந்திரா மாநிலம்)
தவில் :- **மேட்டுப்பாளையம் ரவிக்குமார்** (தவில் மேதை)
**ஆந்திரப் பிரதேசம் மனோகரன்** (தவில் அரசு)
**N. நந்தகுமார்** (தவில் ஞானச்சித்தர்)

**விழா அமைப்பாளர்கள்**
(C-1017) **077 603 3259**


## மரண அறிவித்தல்

## சிவசம்பு கணபதிப்பிள்ளை



மண்கும்பான் 4ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் சாவகச்சேரி வடக்கு, டச்சுவீதி, சோலையம்மன் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு கணபதிப்பிள்ளை 30.12.2017 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி மாணிக்கம் தம்பதிகளின் அருமை மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பிள்ளைமுத்து, ஆறுமுகம், செல்லத்தம்பி, நாகராசா, இராசம்மா மற்றும் சிவப்பிரகாசம், தங்கம்மா, சின்னம்மா, சிவகுருநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், குமாரசாமி மற்றும் காலஞ்சென்றவர்களான இலகுநாதன், கமலாதேவி ஆகியோரின் மைத்துனரும், திருச்செல்வம், சந்திரலீலா, இராஜலக்ஷ்மி, இராஜகுலசிங்கம், அருளானந்தராசா, அகிலேஸ்வரி, கருணாமூர்த்தி, பரமேஸ்வரன், கணேசமூர்த்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், சித்திராதேவி, கலைலிங்கம், சூரியகுமார், தயாரூபி, ரட்ணரூபா, தயாளன், சிவறஞ்சினி, அபர்ணா, அசந்தா ஆகியோரின் மாமனாரும், கிருசாந்தன்-தனுசியா, கிருஸ்ணானந்தன்-கௌசிகா, செந்தூரன்-சிவலக்சுஷி, குருபரநாத்-டினோத், கபில்நாத் மற்றும் சுமனேந்திரா, சிவகுமார்-சுகன்யா, கஜந்தினி, வக்ஷ்சினி, கயூரன், சங்கீர்த்தனா, கபிலேசன், தட்ஷாயினி, மொனுசா, யனுசா, விதுசா, வக்சன், சனுசன், வானுசன், நவீனா, பிரணவன், தனுஸ்காந், சாரூஸ்காந், சாஜிகா, சாருக்ஷன், விதுஜீவ், பவிஷ்ணன் ஆகியோரின் அன்புப் பேரனும், நெவிஸ்ரா, திலக்ஷி, அனுஷ்கா, கேசவ், வர்ணிகா, டிமோசிகா ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2017) ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணியளவில் சாவகச்சேரி வடக்கு டச்சுவீதி, மண்டுவிலில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாவகச்சேரி வடக்கு,
டச்சுவீதி, மண்டுவில்.

தகவல்: குடும்பத்தினர்
(அருள் விநாயகர் மோட்டோர்ஸ்)
(அருள் நிலா நகைமாடம்)
0779179427, 0774146425, 0773053030, 0777106042

(இ-1013)

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 20 - 08 - 1946 இறப்பு: 11 - 01 - 2017

அமரர் திருமதி

## சிதம்பரநாதன் அன்னலட்சுமி

அன்பின் சின்னமாய் அரவணைத்து
பண்பின் பாதையில் வழிநடாத்தி
ஆயிரம் உறவையும் அரவணைத்த நீங்கள்
ஆறாத் துயரில் எமை விட்டுப் பிரிந்ததேனோ

கடந்த 11.01.2017ஆம் திகதி புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் திருமதி சிதம்பரநாதன் அன்னலட்சுமி அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுநாள் பிரார்த்தனை 31.12.2017 இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்களின் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.9/3, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

(2209)

# மரண அறிவித்தல்

**மலர்வு**

04 • 06 • 1949



**உதிர்வு**

29 • 12 • 2017

## கணபதிப்பிள்ளை கந்தசாமி

**(உரிமையாளர்: காந்தன் களஞ்சியம், யாழ்ப்பாணம்)**

காரைநகர் பலகாட்டினை பிறப்பிடமாகவும், 174, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கந்தசாமி அவர்கள் நேற்று முன்தினம் (29.12.2017) வெள்ளிக்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - விசாலாட்சி தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் கோவளம் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், விஜயலட்சுமி அவர்களின் ஆருயிர் கணவரும் காந்தரூபன் (காந்தன் களஞ்சியம்), கிருஸ்ணரூபன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவதருஜினி, கவிதா (லண்டன்), ஆகியோரின் அன்பு மாமனாரும், மதுரி, ரம்மியா, வசிகரன், கவிகரன், பவிகரன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான பரஞ்சோதி, காசிநாதன் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற கனகசுந்தரம் மற்றும் புவனேஸ்வரி, திரிபுரகல்யாணசுந்தரி, காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் சிவசோதி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2017) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**174, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி-1009)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர். ஐயாத்துரை ஜெயச்சந்திரன்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1983 - 08 - 29 | 2015 - 12 - 31 |



எங்கள் அன்புச் செல்வமே
உனை இழந்து ஈராண்டு ஆனதுவோ
என்றும் எம்முடன் சேர்ந்திருப்பாய் என்று எண்ணினோமே
எமை தவிக்கவிட்டு தனியாக சென்றதேனோ
சேர்ந்து மகிழ்ந்திருந்த பொழுதுகள் மறைந்திடுமோ
செம்மையாம் சிரிப்பு செந்தளிப்பாம் பூவதனம்
உள்ளுக்குள்ளே நோயும் தீயாய் எரிந்த போதும்
பனிக்குள்ளே பூத்த பூவாய் முகம் மலர்த்திக் காட்டினாயோ
உனைக் காக்க உழைத்தோம் முடியவில்லை
ஒவ்வோர் பொழுதும் இங்கு உன் நினைவில் வாடுகின்றோம்.

(சி-1007)

சோளங்கன்,
கரணவாய் மேற்கு.

குடும்பத்தினர்.

# அமைச்சர் விஜிதமுனியின் உணவுத் தட்டில் புழு!



(கொழும்பு)

அமைச்சர் விஜித் விஜய முனி டி சொய்சாவின் உண வுத் தட்டில் புழுவொன்று காணப்பட்டதாகத் தெரிவிக் கப்படுகிறது.

கொழும்பு கோட்டே பகுதி யில் அமைந்துள்ள உணவ கம் ஒன்றில் அமைச்சர் விஜ யமுனி டி சொய்சா நேற்று முன்தினம் உணவு உட் கொள்ளச் சென்றுள்ளார்.

இதன்போது, அமைச்சரு க்கு வழங்கப்பட்ட உணவில் பாரிய புழுவொன்று காணப் பட்டுள்ளது.

சிங்கள தொலைக்காட்சி சேவையொன்றில் நடைபெ றும் அரசியல் நிகழ்ச்சி ஒன் றில் பங்கேற்பதற்காக செல் லும் வழியில் அமைச்சர் இந்த உணவகத்திற்கு சென்று இரவு உணவை உட் கொள்ள முயற்சித்துள்ளார்.

மீளவும் இவ்வாறான சம் பவங்கள் இடம்பெறாமல் இருக்க நடவடிக்கை எடுக்கு மாறு அமைச் சர் உணவகப் பணியாளர்களுக்கு தெரி வித்துள்ளார்.

இவ்வாறான ஓர் புழு வெளி நாட்டு சுற்றுலாப் பயணிக ளின் உணவில் காணப்பட் டிருந்தால் அது நாட்டின் சுற் றுலாத்துறையை மிக மோச மாக பாதிக்கும் என சுட்டிக் காட்டியுள்ளார். (இ-7)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர். துரைச்சாமி இராஜரஞ்சன்

(யாழ்/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை, ஆசிரியர்)



"அன்னைக்கே
அன்பானவராயும்
மகவுக்கோ
பாசமானவராயும்
மனைவிக்கே
உற்றதுணையாகவும்
உடன்பிறப்புகளுக்கோ
வழிகாட்டியாகவும்
உறவுகளுக்கு
அரவணைப்பவராகவும்
மாணாக்கருக்கோ
அறிவு புகட்டும்
ஆசானாகவும்
மண்ணிலே
வாழ்ந்து
விண்ணுக்குச் சென்று
இரண்டு ஆண்டுகள்
ஆனாலும்
மனம் ஆறாதையா...

ஆனாலும்
உம் ஆத்மா சாந்தியடைய
இறைஞ்சி நிற்கும்

(1868)

அன்பு மனைவி, மகள்.

பாடசாலை வீதி,
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.


## காலுறை (Socks) பாவனையாளர்களுக்கு அரிய வாய்ப்பு!




கடந்த 30 ஆண்டுகளாக தரச்சிறப்பு மிக்க காலுறைகள் (Socks)

Silver shield Socks

பாடசாலை மாணவர்களுக்கும்
அலுவலக ஊழியர்களுக்கும்
சகல தரத்திலும் சகல அளவுகளிலும்

01 IN ONE FREE

1 இற்கு 1 இலவசம்

10.01.2018 வரை மட்டுமே

பாடசாலைகளுக்கும் வியாபாரிகளுக்கும்
விசேட விலைக்கழிவு

விஜயம் செய்யுங்கள்

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம், 303, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். 021 222 5392


# இராசி பலன்



**மீனம்** – உடன் பிறப்புக்களின் ஆதரவு பெருகும் நாள், பயணங்க ளால் பலனுண்டு, சுப செய் திகள் வந்து சேரலாம், எடுத் காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும்.

**மேடம்** – எண்ணங்கள் எளிதில் கைகூடும், காரியத்தில் கண்ணும் கருத்து மாக இருப்பீர்கள்,குடும்பத் தேவைகள் எளிதில் பூர்த்தியா கும், பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு.

**இடபம்** – குடும்பப் பொறுப்புக்கள் கூடும் நாள், எந்தவொரு வேலையையும் நாளையென தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில பூர்த்தியாகும்.

**மிதுனம்** – வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், காரிய அலைச்சல்கள் ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள், சுப செலவுகள் கூடும் நாள்.

**கும்பம்** – உறவினர் வழியில் மனதிற் கினிய செய்தியொன்று வந்து சேரலாம், புண்ணிய காரியங் களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள், பயணங்கள் கைகூடும்.

| | | | |
|---|---|---|---|
| | | சந் | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>விசாகம்,அனுசம்<br>இரவு 3.27 மணிக்கு<br>மிதுன-சந் | | ராகு |
| கேது | | | |
| சூரி சுக் சனி | புத | செவ் குரு | |

31.12.2017
(மார்கழி 16, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.27 மணிக்கு
திரயோதசி பிற்பகல் 1.53 மணிக்கு
ரோகினி பிற்பகல் 4.49 மணிவரை
சுபநேரம் 9.29-10.59 மணிவரை
இராகுகாலம் 4.59-6.29 மணிவரை

வளவன்

**கடகம்** – வருமானம் பெருகி வளம் காணும் நாள், பயணங்களால் பலனுண்டு, உற்சாகத்துடன் பணபுரிவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெற லாம், போசன நன்மையுண்டு.

**மகரம்** – மறைமுகப் போட்டிகள் மாறும், உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.

**சிம்மம்** – முன்னேற்றப் பாதையில் அடி யெடுத்து வைப்பீர்கள், நண் பர்கள் நம்பிக்கைக்குரிய வர்களாக நடந்து கொள்வர், தூரதேசத்திலிருந்து சுப தக வல்கள் வந்து சேரலாம்.


**தனுசு** – இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆற்றல் மிக்க வர்கள் உங்களுக்கு பின்னணி யாக செயற்படுவர்.

**விருச்சிகம்** – உறவினர் வருகையால் உற் சாகம் அடையும் நாள், தொலைபேசி வழியில் அனு கூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**துலாம்** – கவனக் குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம், பொது வாழ்வில வீண் பழி கள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, வரவும் செலவும் சமமாகும் நாள்.

**கன்னி** – பற்றாக்குறை தீர்த்து பண வரவு கிடைக்கும் நாள், போட்டியாக செயற்பட் டவர்கள் மனம் மாறுவர், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம்.

# 21 ஆவது பிறந்தநாளும் 16 ஆம் மாத நினைவஞ்சலியும்



**மலர்வு** 31.12.1996

**உதிர்வு** 31.08.2016

எங்கள் குலவிளக்கே! உனக்கின்று அகவை நாள்!!
ஆனால் நீ இங்கு இல்லையம்மா!!
எங்கள் செல்லம் பிரசாந்திக்குட்டி
அகவை இருபத்தொன்றில் நாம் எண்ணியிருந்த
நினைவுகள் எல்லாம் கனவாகி போய்விட்டதம்மா!!
அதற்கிடையில் எங்கு நீயும் சென்றாயம்மா?
இருபத்தொன்றென்ன? எத்தனை ஆண்டுகள்
ஆன போதும் உன் நினைவுகள்
என்றும் மறவாதம்மா!! கடைக்குட்டிச் செல்லமே
கண்ணீரால் நிறைந்த எங்கள் பிறந்தநாள்
வாழ்த்துக்கள் அம்மா

## அமரர் பிரசாந்தி வெற்றிவேலு

(யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவி
க.பொ.த.உயர்தரம் கணிதப்பிரிவு- 2015)

"பிரசாந்தி வாசா" எல்லை ஒழுங்கை
தும்பளை, பருத்தித்துறை.

குடும்பத்தினர்
021 205 6096

(சி/1001)

# கண்ணீர் அஞ்சலி



அமரர்

## கணபதிப்பிள்ளை கந்தசாமி

கள்ளமில்லா நல்லுள்ளமும்
கனிவான நின்பார்வையும்
புன்னகைபூத்த பொன்முகமும்
அன்போடு அனைவரையும்
அரவணைக்கும் பண்பையும் உமையிழந்தபோது
இனியாரிடம் நாம் காண்போம்......!
மின்னியது செய்தி விம்மினோம் - நெடிதுயர்
பின்னியதுநெஞ்சில் - கலங்கினோம்
என்னது இது? ஏன் மறைந்தீர்?
எம் பாரினில் உமக்கேற்ற இத்துன்பமோ
யாராலும் ஏற்றிடமுடியுமோ?
இறைவனுக்கு உம்மை அழைக்கும் அவசரம் ஏன்?
அன்பரீர் உங்கள் ஆத்மா இளைப்பாற
விண்ணவனைப் பணிகின்றோம் நாம்.
**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!**

52, 54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

E.S.P. நாகரத்தினம்
அன் கோ

(சி/6663)

# வேலணை பிரதேச சபை

# பொது அறிவித்தல் - 2018

**01) படவரைஞர்களை பதிவு செய்தல்:-**

2018ஆம் ஆண்டு சபையின் படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2018 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் பதிவுகளைசெய்து கொள்ளவும், புதுப்பித்துக்கொள்ளவும், வேலணை பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் மேற்கொள்ளவும்.

**02) வியாபார உரிம அனுமதிப்பத்திரம்:-**

வேலணை பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் பிரதேசத்திற்குள் பொருட்களை விநியோகிப்போர் உரிய விண்ணப்பப்படிவத்தை நயினாதீவு, புங்குடுதீவு, வேலணை, அல்லைப்பிட்டி, மண்டைதீவு, உப அலுவலகங்களில் பெற்று அதனை பூரணப்படுத்தி சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.3.2018 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளவும். 31.3.2018 ஆம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**03) சூழல் பாதுகாப்பு உரிமம்:-**

வேலணை பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் சிறிய மற்றும் நடுத்தர வியாபார தொழில் முயற்சிகளில் ஈடுபடும் சகலரும் உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். சூழல் பாதுகாப்பு உரிமத்தை பெற்றுக்கொள்ளாது 2018 ஆம் ஆண்டில் மேற்குறிப்பிட்ட வியாபார தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**04) துவிச்சக்கரவண்டி விலங்கு உரிமம்:-**

வேலணை பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் துவிச்சக்கர வண்டிகள், வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 31.3.2018 ஆம் திகதிக்கு முன்னர் சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களைச் செலுத்தி 2018 ஆம் ஆண்டிற்கான வாகன, விலங்கு உரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும்.

**05) வீடுகள், கட்டடங்கள், மதில்கள், மலசலகூடங்கள், கிணறுகள், அமைத்தலும் புதுப்பித்தல்/ திருத்த வேலைகள் செய்தலும்:-**

**5.1** எமது நிர்வாகத்திற்கு உட்பட்ட பிரதேசத்தில் மேற்படி கட்டட அமைப்பு புனரமைப்பு வேலைகள் அனுமதியின்றி மேற்கொள்ளல் வீடமைப்பு நகர சீர்திருத்த கட்டளைச்சட்டம் பிரிவு -268இன் பிரகாரம் தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே உரிய விண்ணப்பப்படிவங்களை சம்பந்தப்பட்ட உரிய உப அலுவலங்களில் பெற்று சபையின் முன்னனுமதியினை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின் றேன். அவ்வாறு முன்னனுமதி பெறப்படாத கட்டடங்கள் யாவும் எவ்வித நட்டஈடும் வழங்கப்படாது. அனுமதியற்ற கட்டடமாக கருதி சபையினால் அகற்றப்படுவதுடன் அதற்கான தண்டப்பணத்தையும் சபைக்குச் செலுத்த வேண்டும்.

**5.2** ஏற்கனவே அனுமதி பெற்று ஒரு வருடகாலத்தில் கட்டட வேலைகள் பூர்த்தியாகாதவிடத்து அவ்விண்ணப்பதாரிகள் அனுமதியினை புதுப்பித்துக்கொள்வதோடு கட்டடத்தினை பூர்த்தி செய்து விண்ணப்பதாரிகள் உரிய அமைவுச்சான்றிதழை உரிய காலத்தில் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**06) வீதி ஒழுங்கினைப் பேணல்:-**

வேலணை பிரதேசத்தின் போக்குவரத்து அதிகரித்துள்ள நிலையில் விபத்துக்களை தவிர்த்துக் கொள்ளும் முகமாக வியாபார நிலையங்களுக்கு முன்னால் பொருட்களை வெளியே வைத்து விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வறிவித்தலை பின்பற்றி செயற்படுமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு அறியத்தருகின்றேன்

**07) விளம்பரப் பலகைகளை அமைத்தல்/காட்சிப்படுத்தல்**

வேலணை பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பொது வீதிகளின் இரு மருங்கிலும் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்படும்/காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கு 31.3.2018 ஆம் திகதிக்கு முன்னர் உரிய கட்டணத்தைச் செலுத்தி சபையின் அனுமதியினை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அனுமதி பெறப்படாத முகவர்கள்/வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அவ்விளம்பரங்களை உரிய நிலையங்களிலிருந்து 1.4.2018 ஆம் திகதிக்கு பின் அகற்றுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**08) பொது இடங்களில் கழிவுகள் போடுதல் தொடர்பான அறிவித்தல்:-**

வேலணை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவுப்பொருட்களை அனுமதியின்றி கொண்டு செல்லல், கொட்டுதல் ஆகியன பொதுச் சுகாதாரத்தினை கருத்தில் கொண்டு தடை செய்யப்பட்டுள்ளது. தவறின் பிரதேச சபையின் சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் போன்றவற்றின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். உணவகங்களை நடத்துவோர் தமது கழிவு நீரை வீதியில் திறந்து விடுவதனால் பொதுமக்களுக்கு அசௌகரியமும் டெங்கு பரவும் அபாயமும் காணப்படுவதனால் மேற்படி செயற்பாட்டை மேற்கொள்பவர்களின் உணவகங்கள் பூட்டப்படுவதுடன் சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும்.

**09) ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல்:-**

2018 ஆம் ஆண்டுக்கான நிர்மாணப்பொறியியல் வேலைகளைச் செய்து வழங்குவதற்கு தேசிய நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் பதிவை வைத்திருக்கும் ஆர்வமுடைய மனுதாரர்களை பதிவை மேற்கொள்ள முடியும்

**10) ஆதன உரிமம் :-**

வேலணை பிரதேச சபையின் எல்லைக்குள் உள்ள ஆதன உரிமையாளர்கள் எம்மிடம் பதிவினை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் சுகாதாரத்திற்கு ஒவ்வாத பராமரிப்பு இன்றிக் காணப்படும் காணிகள், கட்டடங்களை, அவ் உரிமையாளர்கள் துப்புரவினை மேற்கொள்ள வேண்டும்.

**ஆ.குருநாதன்**
**செயலாளர்**
**பிரதேச சபை**
**வேலணை.**

(அ-989)

# எனக்கு பிறகு சுதந்திரக் கட்சி எனது குடும்பத்திற்கு அல்ல

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



(கொழும்பு)

பெப்ரவரி 10 ஆம் திகதிக்குப் பின்னர் இந்த நாடும் சுதந்திரக் கட்சியும் உங்கள் பொறுப்புக்கு வருகின்றது எனவும் எனக்குப் பிறகு இந்தக் கட்சி எனது குடும்பத்தினருக்கு அன்றி உங்களுக்கே பொறுப்பாகும் எனவும் கட்சியின் சார்பில் போட்டியிடும் உள்ளூராட்சி சபை வேட்பாளர்களிடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நீங்களே இந்நாட்டில் நகர சபை தலைவராகவும் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் அமைச்சரவை அமைச்சர்களாகவும் பிரதமராகவும் ஜனாதிபதியாகவும் பதவிகளைப் பொறுப்பேற்கவுள்ளீர்கள்.

நீங்கள் ஒரு புறத்தில் அரசியல்வாதியாகவும் மறுபுறத்தில் இந்நாட்டு மக்களின் சகோதரனாகவும் தந்தையாகவும் உங்கள் பயணத்தை தொடரவுள்ளீர்கள், நீங்கள் வெற்றி பெறுவது நிச்சயம் எனவும் ஜனாதிபதி சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார். (இ-7)

# பேரனுடன் சபாநாயகர் கரு



(கொழும்பு)

சபாநாயகர் கருஜெயசூரியவின் மகளின் மரணம் உலகளாவிய ரீதியில் அதிகம் பேசப்பட்டது.

தாய்மையை வெளிப்படுத்தும் வகையில் அவரின் மரணம் உலக மக்களின் மனங்களை நெகிழச் செய்தது.

புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருந்த இந்திரா ஜெயசூரிய, அவரது மகன் வயிற்றில் இருக்கும் போதே மோசமான நிலைக்கு தள்ளப்பட்டிருந்தார்.

புற்றுநோயால் பீடித்திருந்த இந்திரா கர்ப்பமுற்ற நிலையில் சத்திரசிகிச்சை செய்து குழந்தையை வெளியே எடுக்க மறுத்திருந்தார். தனது குழந்தை சரியான வளர்ச்சி யோடு பிறக்க வேண்டும் என பிடிவாதமாக இருந்தார்.

நீண்ட போராட்டத்தின் பின்னர் பிள்ளையைப் பெற்ற இந்திரா ஜெயசூரிய சிகிச்சை பலனின்றி கடந்த வருடம் நவம்பர் மாதம் 2 ஆம் திகதி உயிரிழந்தார்.

இந்நிலையில் இந்திரா வின் மகனின் தற்போதைய நிலை தொடர்பில்தகவல்வெளியாகியுள்ளது.

சபாநாயகர்கருஜெயசூரிய தனது பேரனை தூக்கி வைத் திருக்கும் புகைப்படங்கள்சமூக ஊடகங்களில் வெளியாகி உள்ளன. இது குறித்து பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

தேவி பாலிகா மகா வித்தியாலயம் மற்றும் புனித பிரிட்ஜட் கன்னிமடம் ஆகிய பாடசாலைகளில் இந்திரா ஜெயசூரிய ஆரம்பக்கல்வியை பயின்றார். லண்டன் பிரட் பொர்ட் பல்கலையில் பொருளியல் கற்கைக்கான பட்டப்படிப்பை நிறைவு செய்திருந்ததோடு, பிரித்தானியாவில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வந்தார்.

பிரித்தானியாவைச் சேர்ந்த மார்ட்டின்டிக்சர்என்பவரை இந்திரா ஜெயசூரிய திருமணம் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மாகாணசபைகளுக்கான எல்லை நிர்ணயப் பணிகள் இறுதிக் கட்டத்தை அடைந்தது

(கொழும்பு)

மாகாணசபைகளுக்கான எல்லை நிர்ணயப் பணிகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. எதிர்காலத்தில் நடத்தப்படவுள்ள மாகாணசபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணயம் குறித்து நியமிக்கப்பட்ட குழு அறிக்கை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் அளவில் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மாகாண சபைகளுக்கான எல்லைகளை நிர்ணயம் செய்யும் நோக்கில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆணைக்குழு ஒன்றை நிறுவியிருந்தார். இந்த ஆணைக்குழுவின்பணிகள்கடந்த ஒக்டோபர் மாதம் ஆரம் பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 10 நாட்களாக படுக்கையிலிருக்கும் நான் எவ்வாறு அரச தரப்புடன் பேச முடியும்

## கெஹலிய ரம்புக்வெல் கேள்வி



(கொழும்பு)

நான் கடந்த 10 தினங்களாக சுகவீனமுற்று படுக்கையில் கிடக்கின்றேன். இந்நிலையில் எவ்வாறு நான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து அரசாங்கத்துடன் இணைவது குறித்து பேச்சுவார்த்தை நடத்த முடியும் என்று கூட்டு எதிரணியின் முக்கியஸ்தரும் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கெஹலிய ரம்புக்வெல கேள்வி எழுப்பினார்.

மூழ்கிக்கொண்டிருக்கும் கப்பலில் யாரும் ஏறமாட்டார்கள். அதேபோன்று மக்களின் செல்வாக்கை இழந்துகொண்டிருக்கும் இந்த அரசாங்கத்துடன் நான் இணைந்துகொள்ளமாட்டேன் என்றும் கெஹலிய ரம்புக்வெல சுட்டிக்காட்டினார்.

கூட்டு எதிரணியை பிரதிநிதித்துவம் செய்யும் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அரசாங்கத்தில் இணைந்து ஊடகத்துறை இராஜாங்க அமைச்சுப் பதவியை பெற்றுக்கொள்ளப் போவதாக வெளிவரும் தகவல்கள் குறித்து கேட்டபோதே அவர் இந்த விடயங்களை கூறினார்.

நான் அரசாங்கத்தில் இணைந்து அமைச்சுப் பதவியை பெற்றுக் கொள்ளப்போவதாக ஊடகங்கள் செய்திவெளியிட்டுவருகின்றன. ஆனால் அவ்வாறு நான் இணைந்துகொள்ளப் போவதில்லை. மேலும் நான் ஜனாதிபதியை சந்திக்கவிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நான் கடந்த 10 நாட்களாக சுகவீனமுற்று படுத்த படுக்கையில் இருக்கின்றேன். இன்றுதான் தற்போது சற்று குணமடைந்து தேர்தல் பணிகளில் ஈடுபட ஆரம்பித்திருக்கின்றேன். இந்நிலையில் கடந்த 10 நாட்களாக படுக்கையில் இருந்த நான் அரச தரப்புடன் இணைவது தொடர்பில் எவ்வாறு பேச்சுவார்த்தை நடத்த முடியும். அதுமட்டுமன்றி எந்தவொரு மனிதனும் மூழ்கிக் கொண்டிருக்கின்ற கப்பலில் ஏறப்போவதில்லை.

அதேபோன்று மூழ்கிக் கொண்டிருக்கின்ற கப்பல்போன்று காட்சியளிக்கின்ற அரசாங்கத்தில் இணைந்துகொள்ளும் எண்ணம் எனக்கில்லை. இதனை நான் மிகவும் உறுதியாக தெரிவித்துக் கொள்கின்றேன். அரசாங்கம் நாளுக்கு நாள் மக்களின் செல்வாக்கை இழந்து வருகின்றது.

கடந்த தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. எனவே அரசாங்கம் தொடர்பில் மக்கள் பாரிய அதிருப்தியுடன் உள்ளனர். அந்த விடயத்தை வைத்தே நாங்கள் தேர்தலில் ஈடுபடுகின்றோம். எனவே அவ்வாறான நிலையில் நான் அரசாங்கத்தில் இணைந்து கொள்வேனா என்று கேள்வி எழுப்பினார். (இ-7)

## குடியிருப்பு பகுதியில் பாரிய கற்பாறைகள்



அக்கரப்பத்தனை ஆகுரோவா தோட்டத்தில் நேற்று முன்தினம் 29 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் பாரிய கற்பாறைகள் சரிந்து விழுந்துள்ளன. இப்பகுதியில் 21 குடும்பங்களைச் சேர்ந்த 150 இற்கு மேற்பட்டவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

குடியிருப்பு பகுதியில் சுமார் 150 அடி உயரத்திலிருந்து இக்கற்பாறைகள் சரிந்து விழுந்துள்ளன. கடந்த காலங்களிலும் கற்பாறைகள் விழுந்ததாக மக்கள் தெரிவித்தனர். தொடர்ந்து இப்பகுதியில் மண்சரிவு ஏற்படுமோ என்ற அச்சம் காணப்படுவதாக இவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-7)

# அமைச்சர் பாலித ரங்கே பண்டாரவை அலரிமாளிகையில் கட்டிப்போடுங்கள்

## ஆனந்த சாகர தேரர் காட்டம்



(கொழும்பு)

அமைச்சர் பாலித ரங்கே பண்டாரவுக்கும் மலிக் சமரவிக்ரமவுக்கும் அரச வனங்களிலுள்ள மரங்கள் டொலர்களாகவே தென்படுவதாகவும் இதுவே இந்த அரசாங்கத்தின் பச்சை வீட்டுச் சிந்தனை எனவும் தேசிய சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் பாஹியங்கல ஆனந்தசாகர தேரர் தெரிவித்தார்.

வில்பத்து தேசிய வனப் பிரதேசத்துக்குரிய காணியில் மரம் செடிகளை அழித்து கிராமம் ஒன்றை உருவாக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் பாலித ரங்கே பண்டார மீது ஆனந்த சாகர தேரர் தொடர்ந்தும் குற்றஞ்சாட்டி வருகின்றார். இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே தேரர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நாட்டின் பிரதமர் என்ற வகையில் ரணில் விக்கிரமசிங்கவிடம் நாம் ஒரு வேண்டுகோளை விடுக்கின்றேன். இந்த பாலித ரங்கே பண்டாரவை உடனடியாக இழுத்து வந்து அலரிமாளிகையில் எங்காவது ஒரு மூலையில் கட்டிப்போடுங்கள்.

பாலித ரங்கே பண்டார வில்பத்து காடழிப்பில் நேரடியாகத் தொடர்பு பட்டுள்ளார். இவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என நாம் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கின்றோம் எனவும் தெரிவித்த சாகர தேரர், ஜனாதிபதி வில்பத்து பிரச்சினை தொடர்பில் எடுத்துள்ள முன்னெடுப்புக்களைப் பாராட்டுவதாகவும் தெரிவித்தார். (இ-7)

# 12.2017 31 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1492 - சிசிலியில் இருந்து 100,000 யூதர்கள் வெளியேற்றப்பட்டனர்.
- 1599 - பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனி இந்தியாவுக்கான தனது கப்பல் பயணத்தை ஆரம்பித்தது.
- 1687 - நன்னம்பிக்கை முனையை அடைவதற்காக ஹியூகெனாட் எனப்படும் புரட்டஸ்தாந்தர்களின் முதற் தொகுதியினர் பிரான்சை விட்டுப் புறப்பட்டனர்.
- 1695 - இங்கிலாந்தில் பலகணி வரி அறிமுகப்படுத்தப்பட்டதை அடுத்து பல அங்காடி உரிமையாளர்கள் தமது அங்காடிகளின் பலகணிகளை செங்கல் கொண்டு மூட ஆரம்பித்தார்கள்.
- 1879 - வெள்ளொளிர்வு விளக்கு முதற்தடவையாக தொமஸ் எடிசனால் காட்சிப்படுத்தப்பட்டது.
- 1881 - இலங்கை முழுவதும் கடுமையான நிலநடுக்கம் உணரப்பட்டது.
- 1909 - மான்ஹாட்டன் பாலம் திறக்கப்பட்டது.
- 1923 - லண்டனின் பிக் பென் மணிக்கூண்டின் மணியொலி மணிக்கொரு தடவை பிபிசியில் ஒலிபரப்பு செய்ய ஆரம்பிக்கப்பட்டது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: ஹங்கேரி ஜேர்மனி மீது போரை அறிவித்தது.
- 1946 - அமெரிக்க அதிபர் ஹரி ட்ரூமன் இரண்டாம் உலகப் போரில் ஐக்கிய அமெரிக்காவின் பங்கு முடிவுக்கு வந்ததாக அதிகாரபூர்வமாக அறிவித்தார்.
- 1847 - ஆறுமுக நாவலர் தனது முதலாவது பிரசங்கத்தை வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் ஆரம்பித்தார்.
- 1963 - மத்திய ஆப்பிரிக்கக் கூட்டமைப்பு சாம்பியா, மலாவி, ரொடீசியா என மூன்று நாடுகளாகப் பிளவுற்றது.
- 1981 - கானாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் அதிபர் ஹில்லா லிமான் பதவியிலிருந்து அகற்றப்பட்டார்.
- 1984 - ராஜீவ் காந்தி இந்தியப் பிரதமரானார்.
- 1986 - புவேர்ட்டோ ரிக்கோவில் சான் ஜ/வான் நகரில் உணவுசாலை ஒன்றில் இடம்பெற்ற தீ விபத்தினால் 97 பேர் கொல்லப்பட்டு 140 பேர் காயமடைந்தனர்.
- 1994 - பீனிக்ஸ் தீவுகள், மற்றும் லைன் தீவுகளில் நேரமாற்றம் நடைமுறைப்படுத்தப்பட்டதை அடுத்து, கிரிபட்டியில் இந்நாள் முற்றாக விலக்கப்பட்டது.
- 1999 - போரிஸ் யெல்ட்சின் ரஷ்யாவின் ஜனாதிபதி பதவியிலிருந்து விலகினார்.
- 1999 - 1977 ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கு அமைய, ஐக்கிய அமெரிக்கா பனாமா கால்வாயின் அதிகாரத்தை பனாமாவிடம் ஒப்படைத்தது.
- 1999 - 155 பயணிகளுடன் இந்திய விமானம் ஒன்றைக் கடத்திய ஐந்து கடத்தல்காரர்கள் தாம் விடுவிக்கக் கோரிய இரண்டு இஸ்லாமிய மதகுருமார்கள் விடுவிக்கப்பட்டதை அடுத்து விமானத்தைக் கைவிட்டு வெளியேறினர்.
- 2004 - உலகின் மிக உயரமான வானளாவியான தாய்வானின் 509 மீட்டர் உயர தாய்பே 101 அதிகாரபூர்வமாகத் திறக்கப்பட்டது.
- 2006 - ஐக்கிய அமெரிக்காவிடம் இரண்டாம் உலகப் போரின் போது பெற்ற கடன்களை ஐக்கிய இராச்சியம் முழுவதுமாக கட்டி முடித்தது.

பிறப்புகள்

- 1491 - இழ்சாக் கார்ட்டியே, பிரான்சிய கடற்படை அதிகாரி, நாடுகாண் பயணி (இ. 1557)
- 1815 - ஜார்ஜ் கார்டன் மீடு, அமெரிக்க இராணுவ அதிகாரி, பொறியியலாளர் (இ. 1872)
- 1864 - இராபர்ட் கிராண்ட் ஐத்கென், அமெரிக்க வானியலாளர் (இ. 1951)
- 1869 - ஆன்றி மட்டீசு, பிரான்சிய ஓவியர், சிற்பி (இ. 1954)
- 1878 - எலிசபெத் ஆர்டன், கனடிய தொழிலதிபர் (இ. 1966)
- 1910 - டி. எஸ். துரைராஜ், தமிழக நாடக, திரைப்பட நடிகர் (இ. 1986)
- 1929 - ச. வே. சுப்பிரமணியன், தமிழறிஞர்
- 1943 - ஜான் டென்வர், அமெரிக்கப் பாடகர், நடிகர் (இ. 1997)
- 1943 - பென் கிங்ஸ்லி, ஆங்கிலேய நடிகர்
- 1947 - நாஞ்சில் நாடன், தமிழக எழுத்தாளர்

# ஐக்கிய தேசியக் கட்சி எடுக்கும் தீர்மானங்களில் மகிழ்ச்சியில்லை

## அமைச்சர் செனவிரத்ன தெரிவிப்பு



(கொழும்பு)

பொருளாதாரம் தொடர்பில் ஐக்கிய தேசிய கட்சி எடுக்கும் தீர்மானங்களில் மகிழ்ச்சியில்லை என தொழில்துறை அமைச்சர் டபிள்யூ.டி.ஜே. செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

ரக்வானை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

# உரக்கப்பல் 3ம் திகதி நாட்டை வந்தடையும்

## அமைச்சர் துமிந்த தகவல்

(கொழும்பு)

ஜனவரி 3 ஆம் திகதி உரத்தை ஏற்றிய கப்பல் நாட்டை வந்தடையும் என விவசாயத்துறை அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் உரப்பிரச்சினை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது ஏற்பட்டுள்ள உரப் பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்காக பாகிஸ்தானிடம் இருந்து உரத்தை இறக்குமதி செய்ய திட்டமிடப்பட்டது.

இதற்கமையவே குறித்த உரத்தை ஏற்றிய கப்பல் எதிர்வரும் 3ஆம் திகதி இரவு இலங்கையை வந்தடையும்.

இதனையடுத்து நாளொன்றுக்கு 3000 மெற்றிக்தொன் உரத்தினை துறைமுகத்தில் இருந்து நேரடியாக அனைத்து மாவட்டங்களுக்கும் விநியோகிக்க திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கைக்கு ஏற்றுமதி செய்வதற்காக பாகிஸ்தானில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த உரம், திடீரென பாகிஸ்தான் அரசாங்கத்தினால் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்படவில்லை.

இதனால் நாட்டில் உரத்தட்டுப்பாடு ஏற்பட்டது.

இருப்பினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பாகிஸ்தான் பிரதமருடன் கலந்துரையாடி குறித்த உரத்தினை நாட்டிற்கு ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார். (இ-7)

# அமெரிக்காவின் ஜி.எஸ்.பி.சலுகை இழப்பால் பெரிய தாக்கம் இல்லை

## இலங்கை அரசு தெரிவிப்பு

(கொழும்பு)

அமெரிக்காவின் ஜி.எஸ்.பி. வரிச்சலுகை இழப்பு இலங்கையின் ஏற்றுமதிகளில் குறிப்பிடத்தக்க பாதிப்பை ஏற்படுத்தாது என்று தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கை உள்ளிட்ட 120 நாடுகளுக்கான ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை அமெரிக்க காங்கிரஸ் நீடிக்கவில்லை. இதனால் இன்றுடன் இந்த நாடுகள் அமெரிக்காவுக்கான ஏற்றுமதி களின் போது பெற்று வந்த வரிச் சலுகையை இழக்கவுள்ளன.

இதுகுறித்து கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டுள்ள தேசிய கொள்கைகள், மற்றும் பொருளாதார விவகார பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா,

"அமெரிக்காவின் ஜி.எஸ்.பி. சலுகை மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை ஆகியன தொடர்பாக பலரும் குழப்பமடைந்துள்ளனர்.

2016இல் அமெரிக்காவுக்கான இலங்கையின் மொத்த ஏற்றுமதி 2.8 பில்லியன் டொலராகும். இதில், 173 மில்லியன் டொலர் பெறுமதியான, சுமார் 6.2 வீதமான ஏற்றுமதியே ஜி.எஸ்.பி.சலுகைத் திட்டத்தின் கீழ் ஏற்றுமதி செய்யப்பட்டன.

இதில் ஆடை ஏற்றுமதி, சுமார் ஒரு வீதம் (27 மில்லியன் டொலர்) மாத்திரமே. எனவே ஜி.எஸ்.பி.சலுகை இழப்பு நாட்டின் ஏற்றுமதியில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தாது.



அமெரிக்காவின் ஜி.எஸ்.பி. திட்டத்தின் கீழ் இறப்பர் பொருட்கள் தான் அதிகளவில் ஏற்றுமதி செய்யப்பட்டன.

நாட்டின் மொத்த ஏற்றுமதி 11,000 மில்லியன் டொலர்களாக இருக்கும் நிலையில், 173 மில்லியன் டொலர் பெறுமதியான பொருட்கள் தான் அமெரிக்காவுக்கு ஜி.எஸ்.பி. சலுகைத் திட்டத்தின் கீழ் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. இது ஒரு பெரிய தொகை அல்ல. இந்த இழப்பு குறைவான தாக்கத்தையே ஏற்படுத்தும்.

அமெரிக்காவின் ஜி.எஸ்.பி. சலுகையை விட, ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகைத் திட்டமே, மிகவும் முக்கியமானது. 28 ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கான ஏற்றுமதிகளைச் செய்வதற்கு இலங்கை உள்ளிட்ட 9 நாடுகளுக்கே ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகை அளிக்கப்பட்டுள்ளது.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை 10 தொடக்கம் 20 வீதம் வரை கிடைக்கிறது. 2016இல் ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இலங்கையின் ஏற்றுமதி 3.1 பில்லியன் டொலராக இருந்தது. இதில் 2 பில்லியன் டொலர் பெறுமதிக்கு ஆடைகளே ஏற்றுமதி செய்யப்பட்டன.

எம்மால் ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையைத் தொடர்ந்து பெற முடிந்துள்ளது. ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையினால், இலங்கையின் மீன் ஏற்றுமதி அண்மையில் 47 வீதம் அதிகரித்துள்ளது. எனவே இது தான் முக்கியமானது.

ஜி.எஸ்.பி.சலுகையைப் பெற்று வந்த இலங்கை உள்ளிட்ட 120 நாடுகள், அமெரிக்காவுக்கான ஏற்றுமதிகளின் போது அடுத்த ஆண்டு தொடக்கம் செலுத்த வேண்டிய தொகை 3 வீதத்தினால் அதிகரிக்கும்.

ஜெருசலேம் விவகாரம் தொடர்பாக ஐ.நாவில் நடத்தப்பட்ட வாக்கெடுப்புக்கும் இதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. ஐ.நா. வாக்கெடுப்பில் பங்கேற்காத நாடுகளும் கூட, அமெரிக்காவின் இந்தச் சலுகையை இழந்துள்ளன.

இது அமெரிக்காவின் கொள்கை ரீதியான முடிவு என்பதால், ஜி.எஸ்.பி.சலுகை தொடர்பாக அமெரிக்காவுடன் அரச மட்டத்திலான பேச்சுக்களை நடத்த வேண்டியதேவை இல்லை" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## பொலிஸாரின் செயற்பாடுகளில், பவ்ரல் அமைப்பு திருப்தி-ரோஹண

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வன்முறைகளைத் தடுக்க, பொலிஸார் எடுத்துவரும் நடவடிக்கைகள் திருப்தியளிப்பதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

அதன் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுவரையில் தேர்தல் சட்டத்தை மீறிய 103 சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் சட்டங்களை மீறாது மக்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.



அத்துடன் வேட்பாளர்கள் தேர்தல் சட்டத்தை மீறாது முறைப்படி செயற்படும் போது, மக்கள் வேட்பாளர்கள் மீது நம்பிக்கை கொள்வார்கள் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## குமார வெல்கமவின் கல்வித் தகைமையை ஆராய்ந்தால் யார் ஜோக்கர்? யார் கழுதை? என்பது தெரியவரும்


### டிலான் பெரேரா பகிரங்க சவால்

குமார வெல்கம முடியுமானால் தனது கல்வித்தகைமையை கொண்டு வந்து காட்டட்டும் எனவும் அப்போது யார் ஜோக்கர், யார் கழுதை என்பது மக்களுக்குத் தெரியவரும் எனவும் இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா சவால் விடுத்தார்.

சூதுக் கார்ட் கூட்டத்தில் பல பெயர்களைக் கொண்ட கார்ட் அட்டைகள் உள்ளதாகவும் அதில் மேலதிகமாக இரு ஜோக்கர் கார்ட் அட்டைகள் காணப்படுவதாகவும் அந்த ஜோக்கர் போன்றவர்தான் டிலான் பெரேரா என கடந்த இரு தினாங்களுக்கு முன்னர் பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் டிலான் பெரேரா இவ்வாறு சவால் விடுத்துள்ளார்.

குமார வெல்கம என்னைப் பற்றிக் கருத்துத் தெரிவித்த இடம் கிரிந்த ஆகும். இந்த பிரதேசத்துக்கு மின்சாரத்தைக் கொடுத்தவன் நான் எனத் தெரிவித்த டிலான் இது குமார வெல்கமவுக்குத் தெரியாது எனவும் கூறினார். (இ-7)



## மகிந்த அணிக்கு 'செக்' வைத்த தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவின் படங்களை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி பயன்படுத்த முடியாத வகையில், தேர்தல்கள் ஆணைக்குழு புதிய உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல்களின் போது, தமது கட்சியைச் சாராத அரசியல் வாதிகளின் படங்களை அரசியல் கூட்டங்களிலோ, கட்சி பணியகங்களிலோ பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படாது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

"கட்சித் தலைவர்களுக்கும், தேர்தல் ஆணைக் குழுவுக்கும் இடையில். கடந்த திங்கட்கிழமை நடந்த கலந்துரையாடலின் போதே, தமது கட்சியைச் சாராத அரசியல் வாதிகளின் படங்களை பரப்புரைகளின் போது பயன்படுத்துவதற்கு அனுமதிக்கக் கூடாது என்று முடிவெடுக்கப்பட்டது.

வேட்பாளர்கள் தமது கட்சியின் தலைவரின் படங்களைப் பயன்படுத்தவே அனுமதி அளிக்கப்படும். தமது கட்சியின் உறுப்பினர் அல்லாத அல்லது இன்னொரு கட்சியின் உறுப்பினரான எவரினதும் படங்களை வேட்பாளர்கள் பரப்புரைக்குப் பயன்படுத்தக் கூடாது" என்றும் இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டதாக சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஒரு கட்சியைச் சேர்ந்த தேசிய மட்ட தலைவர்களின் படங்களை மற்றொரு கட்சியின் வேட்பாளர்கள் தமது பரப்புரைக்காக பயன்படுத்துவது குறித்த சம்பவங்கள் தொடர்பாக பொலிஸார் எழுப்பிய கேள்வியை அடுத்தே, இந்த முடிவு எடுக்கப்பட்டது என்று இந்தக் கலந்துரையாடலில் ஜே.வி.பி. சார்பில் பங்கேற்ற சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

வேட்பாளர்கள் தம்து கட்சியின் தலைவர்களின் படங்களை மாத்திரமே பயன்படுத்த முடியும் என்றும், ஏனைய கட்சிகளின் அரசியல் வாதிகளின் படங்களைப் பயன்படுத்தும் வேட்பாளர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறும் பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.


இதன்மூலம் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் வேட்பாளர்கள், அந்தக் கட்சியின் உறுப்பினரல்லாத, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவரான மகிந்த ராஜபக்ஷவின் படங்களைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியினர், அந்தக் கட்சியின் தலைவர் ஜி.எல். பீரிஸின் படங்களையே பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 160 | 200 | 100 | 220 |
| உருளைக்கிழங்கு | 100 | 60 | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 250 | 180 | 350 | 300 | 350 |
| தக்காளி | 180 | 120 | 140 | 120 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 60 | 40 | 50 |
| கோவா | 120 | 70 | 120 | 120 | 140 |
| கரட் | 220 | 120 | 200 | 200 | 180 |
| பூசணி | 50 | 40 | 60 | 80 | 50 |
| புடோல் | 140 | 60 | 80 | 100 | 140 |
| வாழைக்காய் | 60 | 65 | 70 | 120 | 80 |
| சின்ன வெங்காயம் | 500 | 350 | 400 | 400 | 350 |
| பெரிய வெங்காயம் | 200 | 120 | 160 | 150 | 140 |
| பாகற்காய் | 400 | 200 | 240 | 300 | 350 |
| வெண்டிக்காய் | 120 | 80 | 120 | 160 | 160 |
| கருணைக் கிழங்கு | 120 | 40 | 80 | 80 | 60 |
| பயற்றங்காய் | 250 | 200 | 140 | 160 | 180 |
| லீக்ஸ் | 300 | 220 | 240 | 200 | 240 |
| பீற்றூட் | 250 | 130 | 200 | 160 | 140 |
| கறிமிளகாய் | 250 | 220 | 300 | 280 | 300 |
| முருங்கைக்காய் | — | — | — | — | — |
| போஞ்சி | 300 | 110 | 200 | 200 | 240 |
| கத்தரிதம்புள்ள | 150 | 160 | 150 | 160 | 200 |
| கீரை - 1பிடி | 50 | 40 | 50 | 60 | 40 |
| தேசிக்காய் | 20 | 40 | 60 | 80 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 70 | 80 | 75 | 100 |
| இராசவள்ளி | 300 | 250 | 250 | 280 | — |
| வெங்காயப்பூ | — | 300 | — | — | — |
| முள்ளங்கி | — | 70 | 200 | 120 | 120 |
| பொன்னாங்காணி | — | 40 | 50 | 40 | 40 |
| வல்லாரை | — | 15 | 20 | 20 | 35 |
| ஈரப்பலா | — | — | 50 | 120 | 80 |

# தில்லைக் கூத்தனே ஈழத்துச் சிதம்பரத்தில் எழுந்தருளி அடியார்களுக்கு அருள்புரிகிறார்



மார்கழி மாதம் தட்சணாயனத்தின் இறுதி மாதமாகும். தேவர்களுக்கு இம்மாதம் அதிகாலைப் பொழுது. இக்காலத்தில் (வைகறையில்) சுவாமி தரிசனம் செய்வது உத்தமமாகக் கருதப்படுகிறது. மார்கழி மாதத் தில் தில்லைச் சிதம்பரத்தில் கோயில் கொண்டருளுகின்ற நடராஜப் பெருமானைத் தரிசிக்கத் தேவர்கள் ஒன்று கூடுவதாக ஐதீகம் உண்டு. மனிதர்களாகிய எமக்கும் இக் காலமே இறைவழிபாட்டிற்கு மிக உகந்தது. "மாதங்களில் நான்மார் கழி" என்றார் பகவத்கீதையில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா. "மார்கழி நீராடேலோரெம்பாவாய்" என வேண்டி நின்றார் மணி வாசகப்பெருமான். "மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால் நீராடப் போதுவீர்! போது மினோ நேரிழையீர்!!" என அழைத்தார் வைணவ ஆண்டாள். ஆதிரையான் என அழைக்கப் பெறும் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானுக்கு உகந்த திருவாதிரை நாளும், திரு மாலுக்கு உகந்த வைகுண்ட ஏகாதசியும் மார்கழி மாதத்தில் வருவது அதன் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது. மார்கழி மாதம் ஒருநாளில் நடக்கும் ஒரு காலப் பூசையைப் பார்த்த பலனுக்கு ஏனைய ஆயிரம் நாட் பூசையைப் பார்த்த பலன் சமம் என்பது ஆகம விளக்கமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருவாதிரைத் திருவிழா மார்கழி மாதத்தில் பூரணையை அடுத்து வரும் திருவாதிரை நட் சத்திரத்தை முடிவாகக் கொண்டு பத்து நாட்கள் நடைபெறும். "ஆர் திரை நாளுகந் தானுமாரூ ரமர் ந்தஅம் மானே" என்று திருவா திரை நாள் சிவனுக்கே உகந்தது என திருநாவுக்கரசு நாயனாரும் "ஆர்திரைநாள்காணாதே போதியோ பூம்பாவாய்" என்று திருஞானசம்பந்தப் பெருமானும் பாடியுள்ளார்.

இவ்விழா சிவபெருமானுக்குச் சிறந்ததாயினும் அப்பெருமானது அருள் மூர்த்தங்களுள் நடராஜ மூர்த்திக்கே சிறப்புடையதாகும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த திருவாதிரைவிழா, கூத்தப்பிரான் எழுந்தருளியிருக்கும் திருத் தலங்களுள் மேம்பட்டதாகிய சிதம்பரத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகின்றது. அங்கு நடை பெறுவது போலவே திண்ணபுரம் ஈழத்துச் சிதம்பரத்திலும் திருவா திரை விழா சிறப்பாக நடைபெற்று வருகிறது.. தில்லைக்கு வந்து என்னைத் தரிசிக்க முடியவில்லையே என்று கவலைப்பட வேண்டாம். திண்ணபுரத்தில் (ஈழத்துச் சிதம்பரம்) வந்து என்னைத் தரிசிக்கலாம் என்று சில அடியவர்கள் கனவில் தில்லைக்கூத்தன் தோன்றியருளியுள்ளார்.

இவ்வாண்டு திருவாதிரைத் திருவிழா 24-12-2017 ஞாயிற் றுக்கிழமை ஆரம்பமாகி நடை பெற்று வருகிறது. காலையிலும் மாலையிலும் சிவபெருமான் சந் நிதானத்தில் இருந்து மணிவாச கப் பெருமானை எழுந்தருளப் பண்ணி நடராஜப் பெருமான் சந்நிதானத்தில் திருவெம்பாவை ஓதுதல் நடைபெறும். கிட்டத்தட்ட 200 ஆண்டுகளுக்கு முன் ஆலய ஸ்தாபகர் அம்பலவிமுருகர் அவர்களால் பனை ஓலையில் எழுதப்பட்ட திருவாசக ஏடு நடராஜப் பெருமான் முன் வைக்கப்பட்டு பூஜை செய்யப்பட்டு பின்னர் மணி வாசகப் பெருமானின் பீடத்தில் வைக்கப்பட்டு திருவெம்பாவை ஓதப்படுதல் தொன்று தொட்டு இன்றுவரை நடைமுறையில் உள்ளது.

திருவாதிரைத் திருவிழாவின் ஒன்பதாம் நாளாகிய 01-01-2018 அன்று திங்கட்கிழமை தேர்த்திருவிழா நிகழும். நட ராஜப் பெருமான் திருநடனம் ஆடிக்கொண்டு சிவகாம சுந்தரி அம்மையாருடனும், விநாயகர், முருகன், ஐயனார், மணிவாசகர் என்னும் மூர்த்திகளுடன் எழுந்தருளி ஐந்து தேர்களில் வீதிவலம் வரும் காட்சி தனிச் சிறப்பினை உடையது. அன்று இரவு ஒரு மணியளவில் சிவன், அம்மன், ஐயனார் ஆகிய மூல மூர்த்தி களுக்கு அபிஷேகம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து வசந்த மண்டபத்தில் நடராஜப் பெருமானுக்கும் சிவகாம சுந்தரி அம்பாளுக்கும் ஆருத்திரா அபிஷேகம் ஆரம்பமாகி நடைபெற்று சூரிய உதயத்தில் ஆருத்திரா தரிசனம் நிகழும். பின்னர் அன்று மாலை திருவூடலும், தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

நாமெல்லாம் ஈழத்துச் சித ம்பரத்தை அடைந்து நடராஜப் பெருமானை வழிபட்டுப் பேரா னந்தப் பெருவாழ்வு அடைவோமாக.

மா.கனகசபாபதி

## தபால் திணைக்கள ஊழியர்கள் யாரும் புறக்கணிப்பில் ஈடுபடமாட்டார்கள்!

(கொழும்பு)

தபால் திணைக்கள உழியர்கள் யாரும் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட மாட்டார்கள் என் எதிர்பார்ப்பதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட மாட்டார்கள் என கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

தேர்தல் சட்டத்தின் பிரகாரம் சில பணிகள் தபால் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே தபால் ஊழியர்கள் நிலைமைகளை புரிந்து கொண்டு தொழிற்சங்கப் போராட்டங்களுக்கு செல்ல மாட்டார்கள் என நம்புகின்றோம்.

தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டால் வேறு மாற்று வழி ஒன்றின் ஊடாக அதற்கு தீர்வு காண அனைவரும் முயற்சிக்க நேரிடும் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, சேவைக்கு அமர்த்தல் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் காரணமாக பெரும்பாலும் ஜனவரி மாத முதல் வாரத்தில் பணிப் புறக்கணிப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்படலாம் என தபால் திணைக்கள ஒன்றிணைந்த தொழிற்சங்கத்தின் இணை அழைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்துள்ளார்.(இ-7)

## மகிந்த தரப்புடன் இணையாததால் தமிழ், முஸ்லிம் மக்கள் கைகோர்ப்பு

### சு.க.அமைச்சர் கூறுகிறார்



(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவின் கூட்டு எதிரணியுடன் நாங்கள் இணையாததன் காரணமாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் தமிழ், சிங்கள மக்கள் அதிகளவில் இணைந்து வருகின்றனர். இது எமக்கு மிகப்பெரிய பலமாக அமைந்திருக்கின்றது என்று சுதந்திரக்கட்சியின் பேச்சாளரும் இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா தெரிவித்தார்.

ஒருவேளை நாங்கள் மகிந்த தலைமையிலான கூட்டு எதிரணியுடன் இணைந்திருந்தால் இவ்வாறு தமிழ், முஸ்லிம் மக்கள் அதிகளவில் எம்முடன் இணைந்திருக்கமாட்டார்கள் என்றும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அரசியல் மற்றும் தேர்தல் நடவடிக்கைகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பது தொடர்பில் விபரிக்கும்போதே டிலான் பெரேரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மிகவும் வெற்றிகரமான முறையில் தேர்தல் செயற்பாடுகளை முன்னெடுத்து செல்கின்றது. தற்போது தமிழ், முஸ்லிம் மக்கள் சுதந்திரக் கட்சியுடன் அதிகளவு இணைந்து வருவதுடன் எமக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

இனவாதக் கட்சிகளுடன் கூட்டு சேராமையின் காரணமாகவே இவ்வாறு தமிழ், மற்றும் முஸ்லிம் மக்கள் எம்முடன் இணைந்து வருகின்றனர். குறிப்பாக இனவாதிகள் குவிந்து கிடக்கின்ற கூட்டு எதிரணியுடன் இணைந்து கொள்ளவில்லை என்ற காரணத்தினாலேயே தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் எம்முடன் கைகோர்த்திருக்கின்றனர்.

நாங்கள் ஒருவேளை மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணியுடன் இணைந்திருந்தால் தமிழ், மற்றும் முஸ்லிம் மக்கள் எம்முடன் கைகோர்த்திருக்கமாட்டார்கள் என்றே நம்புகின்றோம். தற்போதைய நிலைமையில் ஐக்கிய தேசியக்கட்சியை விட சுதந்திரக் கட்சியுடனேயே தமிழ்,முஸ்லிம் மக்கள் அதிகளவு இணைந்து வருவதை காண முடிகின்றது. அந்தவகையில் நாங்கள் தமிழ், முஸ்லிம் மக்கள் உள்ளிட்ட அனைத்து மக்களுடனும் இணைந்து வெற்றிவாகை சூடுவோம்.

இதேவேளை தேர்தலின் பின்னர் நாங்கள் எந்தக் கட்சியுடன் கூட்டு சேர்ந்து ஆட்சி அமைப்போம் என்று இப்போது கூற முடியாது. காரணம் தேர்தல் முடிவுகள் எவ்வாறு அமையும் என்பதை தற்போது எதிர்வுகூறுவது கடினமாகும். நாங்கள் அதிகமான சபைகளை கைப்பற்றுவோம் என்பது உறுதியாக இருக்கிறது.

ஆனால் எவ்வாறான வீதத்தில் முடிவுகள் அமையும் என்று கூற முடியாது. அதனால் நாங்கள் தேர்தலின் பின்னர் ஐ.தே.கவுடனா அல்லது கூட்டு எதிரணியுடனா இணைந்து ஆட்சி அமைப்போம் என்பதை எதிர்வுகூற முடியாது. எவ்வாறெனினும் நாங்கள் அதிகமான சபைகளில் ஆட்சி அமைப்போம் என்பதை உறுதியாக தெரிவிக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## அம்பாந்தோட்டையில் கைத்தொழில் வலயம் கண்காணிக்க வழி நடத்தல் குழு நியமனம்

(கொழும்பு)

அம்பாந்தோட்டை கைத்தொழில் வலயத்தை அமைப்பதற்குத் தேவையான நில அளவீடுகள் தொடர்பில் கண்காணிக்க வழிநடத்தல் குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது.

குறித்த குழு அனைத்து மட்ட நிபுணர் குழுக்களுடன் தொடர்பை மேற்கொண்டு தேவையான ஆலோசனைகளை வழங்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை கைத்தொழில் வலயத்துக்குத் தேவையான நில அளவை தொடர்பில் ஏற்கனவே மஹரம் ருஹுணுபுர சர்வதேச தொடர்பாடல் மையத்தை அரசு அமைத்திருந்தது.

சீன பொறியியலாளர்கள் கூட்டுறவு நிறுவனம் மற்றும் இலங்கையின் முதலீட்டு நிறுவனம் ஆகியன இணைந்தே குறித்த அபிவிருத்தித் திட்டத்தை செயற்படுத்தி வந்தது.

தற்போது முதற்கட்ட கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், சீன நிறுவனங்கள் பலவும் முதலீடுகளை ஆரம்பித்துள்ளன.

அதில் 55 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான நிதி முதற்கட்டப் பணிகளுக்கு முதலிடப்பட்டுள்ளது. அத்தோடு கைத்தொழில் வலய கட்டுமானப் பணிகளுக்காக 1,235 ஹெக்டேயர் நிலம் தற்போது ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# உள்வீட்டுப் பிரச்சினையைத் தீர்க்க முடியாதவர்கள் அடுத்த வீட்டுப் பிரச்சினையில் தலையிடுகின்றனர்

## ஜெருசலேம் விவகாரத்தில் அரசின் தலையீடு தொடர்பில் சரத் வீரசேகர கடும் விசனம்



(கொழும்பு)

ஜெருசலேம் விவகாரத்தில் அரசின் தலையீடு தேவையற்றதாகும் என்வும் உள்வீட்டுப் பிரச்சினையை தீர்க்க முடியாதவர்கள் அடுத்த வீட்டுப் பிரச்சினையில் தலையிடுவதாகவும் முன்னாள் கடற்படைத் தளபதி ரியல் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். அத்துடன், ஜெருசலேம் விடயத்தில் காட்டும் அக்கறையை அரசு ஏன் ஜெனிவாவில் காட்டவில்லை என்றும் கேள்வியெழுப்பியுள்ளார்.

இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை அமெரிக்கா அறிவித்துள்ள முடிவுக்கு உலகில் 128 நாடுகள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

இலங்கையும் இதற்கு எதிர்ப்பை வெளியிட்டதுடன், ஐ.நாவில் அமெரிக்காவின் முடிவுக்கு எதிராகவே வாக்களித்திருந்தது. இது குறித்து கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவசர அவசரமாக ஜெருசலேம் விடயத்தில் அரசு செயற்பட்டு வருகிறது. ஜெருசலேம் விடயத்தில் அக்கறை காட்டும் அரசு ஏன் இலங்கைக்கு எதிராக ஐ.நாவில் முன்னெடுக்கப்பட்டுவரும் செயற்பாட்டில் அக்கறை காட்டுவதில்லை.

இறுதி யுத்தத்தின்போது 7ஆயிரம் வரையிலான மக்களே உயிரிழந்திருக்கக் கூடும் என்று நெஸ்பி பிரபு அண்மையில் தெரிவித்திருந்தார்.

ஆனால், அரசு இந்த விடயத்தைக் கண்டுகொள்ளவில்லை என்பதுடன், ஐ.நாவிடம் இது குறித்து எந்தவொரு கருத்தையும் வலியுறுத்தியிருக்கவில்லை.

இராணுவத்தைத் தண்டிக்க முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளுக்கு துணைபோகும் வகையிலேயே ஐ.நாவில் அரசு தமது செயற்பாட்டை முன்னெடுத்து வருகிறது.

ஜெருசலேம் விவகாரத்தில் அரசின் அவசர அவசரமான முன்னெடுப்புகள்தேவையற்றதாகும். நமது நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாதவர்கள் சர்வதேச விவகாரங்களில் தலையிட்டு வருகின்றனர் என்றும் தெரிவித்தார்.

கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்றுக்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7)

## அமெ.ஜி.எஸ்.பி.சலுகை நீக்கத்தால் பாரிய பாதிப்புகள் ஏதும் ஏற்படாது

### அமைச்சர் றிசாத் தெரிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய அமெரிக்காவின் ஜி.எஸ்.பி சலுகை நீக்கம் காரணமாக பாரிய பாதிப்புகள் ஏதும் ஏற்படாது என்று கைத்தொழில், வர்த்தக அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.


ஐக்கிய அமெரிக்க குடியரசு இலங்கைக்கு வழங்கி வந்த ஜி.எஸ்.பி. சலுகையை இம்மாதம் 31 ஆம் திகதியுடன் நிறுத்திக் கொள்வதாக அறிவித்துள்ளது.

இந்நிலையில் அது குறித்து செய்தியாளர்களுக்கு விளக்கமளிக்கும் சந்திப்பொன்று அமைச்சர் றிசாத்தின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது கருத்து வெளியிட்ட அமைச்சர், கடந்த வருடம் அமெரிக்காவுக்கான மொத்த ஏற்றுமதியின் பெறுமதி 2.1 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இவற்றில்பெரும்பாலானவை ஆடை ஏற்றுமதிகளாகும்.

ஆடைகளுக்கு அமெரிக்காவினால் ஜி.எஸ்.பி சலுகை வழங்கப்படுவதில்லை. அந்த வகையில் குறித்த சலுகை நீக்கம் காரணமாக கூடிய பட்சம் 20-25 வீத ஏற்றுமதிகளே பாதிக்கப்படும் என்றும் அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார். (இ-7)

## 17 மாமூடைகளை வாயால் தூக்கி 30 மீற்றர் சுமந்து கின்னஸ் சாதனை




(கொழும்பு)

இலங்கை துறைமுக அதிகார சபையின் ஊழியரான ஜனக காஞ்சன முதன்நாயக்க பார்வையாளர்கள் முன்னிலையில் ஒவ்வொன்றும் 50 கிலோ நிறை கொண்ட 17 மா மூடைகளை 30 நிமிடங்களுக்குள் 30மீற்றர் தூரம் கொண்டு சென்று கின்னஸ் உலக சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

ஏற்கனவே இரண்டு கின்னஸ் உலக சாதனைகளை நிலைநாட்டியுள்ள அவருக்கு இது மூன்றாவது கின்னஸ் உலக சாதனையாகும்.

தனது தந்தை ஏற்கனவே ஏழு கின்னஸ் உலக சாதனைகளை நிலைநாட்டியிருப்பதாக கூறிய அவர் அதனிலும் அதிகமாக 18 கின்னஸ் உலக சாதனைகளை நிலைநாட்டி தாய நாட்டுக்கு பெருமை சேர்ப்பதே தனது இலட்சியம் என்றும் அவர் கூறினார்.

சமூக வலுவூட்டல் நலன்புரி அமைச்சர் எஸ்.பி திசாநாயக்க உள்ளிட்ட பெருந்திரளான மக்கள் இந்நிகழ்வை மகிழ்ச்சியுடன் கண்டு களித்தனர்.

எவ்வாறாயினும் இரண்டு 50 கிலோகிராம் நிறை கொண்ட மா பைகளை அவரால் முழுமையாக 30 மீற்றர் தூரம் கொண்டு செல்ல முடியாமையினால் அவை சாதனையாக கருதப்படவில்லை. (இ-7)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 27<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L/அரச தொழில்<br>தொ.இ: B/6149 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: பட்டதாரி மாணவி<br>தொ.இ: G/6448 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 50 சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/Lலண்டன் PR<br>தொ.இ: B/6150 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 74 செவ் 7 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: B.COM/ அரச தொழில்<br>தொ.இ: G/6450 |
| பிறப்பு: 1984 RC<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 65 செவ் 1 இல்<br>உயரம்: 172CM<br>தகைமை/தொழில்: BCS/அரச தொழில்<br>தொ.இ: B/6151 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 41 செவ் 1 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSc/ஆசிரியர்<br>தொ.இ: G/6457 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 09<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BA/ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் அசைவமும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/1338 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 30 செவ் 1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்<br>தொ.இ: G/6459 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



மன்னார் மறைமாவட்டத்தின் மூன்றாவது ஆயராக நியமிக்கப்பட்டுள்ள பேரருட் கலாநிதி பிடெலிஸ் லயனல் இம்மானுவேல் பெனாண்டோ நேற்று சனிக்கிழமை காலை தனது பணியை பொறுப்பேற்றுக் கொண்டார். மன்னார்-தள்ளாடி சந்தியில் வைத்து மன்னார் மறை மாவட்டத்தின் புதிய ஆயரான பேரருட் கலாநிதி பிடெலிஸ் லயனல் இம்மானுவேல் பெனாண்டோ வரவேற்கப்பட்டு மன்னார்-தூய செபஸ்தியார் பேராலயத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அதனைத் தொடர்ந்து புதிய ஆயரின் தலைமையில் திருப்பலி நடைபெற்றது.
(படங்கள்: பனிக்கன்குளம் செய்தியாளர்)

# முல்லைத்தீவில் பேருந்து நிலையம் அடுத்தாண்டில் அமைக்கப்படும்

## மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு நகருக்கான பேருந்து நிலையம் புதிய ஆண்டிலே அமைக்கப்படுமென முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.





முல்லைத்தீவு நகரத்திற்கான பேருந்து நிலையம் அமைக்கப்படாது காணப்படுகின்றது.

இதனால் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த 2010ஆம் ஆண்டு மீள் குடியேற்றத்தின் பின்னர் ஏனைய உட்கட்டுமான வசதிகள் ஏற்படுத்தப்படுகின்ற போதும் நகருக்கான பேருந்து நிலையம் அமைக்கப்படாது காணப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரனிடம் தொடர்பு கொண்டு வினவிய போது.

முல்லைத்தீவு நகருக்கான பேருந்து நிலையம் அடுத்த ஆண்டிலே அமைக்கப்படவுள்ளது. அதற்கான வேலை த்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பேருந்து நிலையத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில் நகரத்திட்டமிடலுக்கு அமைவாக மாதிரி கடைத்தொகுதி அமைக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார். (2-315)




# வற்றாப்பளை-கேப்பாப்பிலவு வீதி

## ஜனவரி முதலாம் திகதியில் இருந்து மக்கள் பாவனைக்கு திறக்கப்படும்

### முல்லை. மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(கண்டாவளை)

இராணுவத்தின் கட்டுப்பாட்டு பகுதிக்குள் உள்ள வற்றாப்பளை - கேப்பாப்பிலவு வீதி புதுவருடப் பிறப்பில் இருந்து மக்களுடைய பாவனைக்காக திறந்து விடப்படும் என்று முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஆர்.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு மற்றும் சீனியாமோட்டை பகுதியில் இராணுவ கட்டுப்பாட்டில் இருந்த 133. 34 ஏக்கர் காணிகள் மீள் குடியேற்றத்திற்காக கையளிக்கும் நிகழ்வு கேப்பாப்பிலவில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு விடுவிக்கப்பட்ட காணிகளை பொறுப்பேற்று மக்கள் மத்தியில் உரையாற்றும்போதே முல்லை. மாவட்ட அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வற்றாப்பளை-கேப்பாப்பிலவு வீதியில் சுமார் 6 கிலோ மீற்றர் தூர வீதி இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. இதனால் மக்கள் பல கிலோ மீற்றர் தூரம் சுற்றிச் செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இந்நிலையில் தற்போது ஒரு தொகுதி காணி விடுவிக்கப்படுகின்ற நிலையில் வற்றாப்பளை -கேப்பாப்பிலவு வீதி முழுமையாக விடுவிக்க இராணுவம் இணங்கியுள்ளது.

இதன்படி எதிர்வரும் வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி அவ்வீதி மக்களுடைய பாவனைக்காக திறந்து விடப்படும் என்றார். (2-315)

# ஆற்று மணலுடன் உழவு இயந்திரங்கள் கைப்பற்று; சாரதிகள் கைதாகினர்

(மல்லாவி)

தருமபுரம் பொலிஸ் பிரிவிலுள்ள கல்லாறுப் பகுதியில் அனுமதிப்பத்திரத்திற்கு முரணான வகையில் ஆற்று மணலை ஏற்றி பயணித்த இரண்டு உழவு இயந்திரங்களைக் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் அதன் சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி/ முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல்2.30. மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

கிளிநொச்சி/ முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் விசேட உத்தரவுக்கு அமைய தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் வகையில் விசேட ஊர் சுற்றுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த கிளிநொச்சி/ முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான போதைப் பொருள் தடுப்பு மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் படைப்பிரிவின் பொலிஸ் அணியினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து, தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள கல்லாறுப் பகுதியில் அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் ஆற்று மணலை ஏற்றிப் பயணித்த உழவு இயந்திரங்களைக் கைப்பற்றியுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் அதன் சாரதிகள் இரண்டு பேரையும் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களையும் கைதான சந்தேக நபர்களையும் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணைகளுக்காகவும், அதன் பின்னரான நீதி மன்ற நடவடிக்கைகளுக்குமாக ஒப்படைத்துள்ளதாக கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் -2017

முு/வித்தியானந்தாக் கல்லூரி

உயிரியல்

பரஞ்சோதி பிரணவி- 2ஏபி (மாவட்ட நிலை - 01), சிங்கநாயகம் றஜனன்-ஏ2பி( மாவட்ட நிலை - 02), சோமநாதன் கவுசிகன்- ஏபிசி (மாவட்ட நிலை - 06), மோகனதாஸ் சரணியா- 2ஏசி (மாவட்ட நிலை - 08), தில்லைநடேசன் பிரியங்கா- ஏபிசி (மாவட்ட நிலை - 09)

கணிதம்

ஜெயரூபன் சதுர்ஜன்- 2ஏபி (மாவட்ட நிலை - 02), பிரான்சிஸ் தேவராஜா கௌசிகன்-பி2சி (மாவட்ட நிலை - 08)

பொருளியல்

தொழில்நுட்பம்

பாகன் சஜீவன்- பி2சி, (மாவட்ட நிலை - 01), பிரபாகரன் சதுர்ஜன்- பிசி, எஸ் (மாவட்ட நிலை - 04) செல்வரத்தினம் வித்தியாயினி -பிசிஎஸ் (மாவட்ட நிலை - 06)

உயிரியல்

தொழில்நுட்பம்

தர்மகுலசிங்கம் கேசனா- ஏ2பி (மாவட்ட நிலை - 01) சிங்கநாயகம் - நிசாந்தினி- பி2சி (மாவட்ட நிலை-04), சிவச்செந்திவேல் டிலோஜி- பிசிஎஸ் (மாவட்ட நிலை - 07) , சோதீஸ்வரன் சாருஜி- 2சிஎஸ் (மாவட்ட நிலை - 10)

வர்த்தகம்

லோறன்ஸ் தனுசியா- 2ஏபி (மாவட்ட நிலை - 10)

மு/மல்லாவி மத்திய கல்லூரி

பொறியியல்

தொழில் நுட்பம்

சிவலிங்கம் இளநிலவன்- ஏ2சி (மாவட்ட நிலை - 03)

கணிதம்

விஜராசா நிறோசன்- பி2சி (மாவட்ட நிலை - 09)

உயிரியல்

சஜீபரன் அஜீவிதா- ஏபிசி (மாவட்ட நிலை - 11)

வர்த்தகம்

அரவிந்தன் குந்தவை- 2ஏபி (மாவட்ட நிலை - 09), புஸ்பராசா பிரவீனா- 2ஏபி, வேதநாயகம் நவசுதன்- 2 பி

(2-15)

# மக்களின் நலனுக்காக சேவையாற்றுவதே எனது எதிர்கால இலட்சியமாகும்

## மன்னார் மாவட்ட நிலையில் முதலிடம் பெற்ற மாணவி தெரிவிப்பு



(மன்னார்)

உயிரியல் முறைமை தொழில் நுட்பவியல் துறையில் நிபுணத்துவ மிக்கவராக உயர்வதோடு எனது கிராம மக்களினதும் ஏனைய மக்களினதும் நலனுக்காக சேவை செய்வதே எனது எதிர்கால இலட்சியம் என உயிரியல் முறைமை தொழில்நுட்பவியல் பிரிவில் மன்னார் மாவட்ட ரீதியில்முதலாம் ஆம் இடத்தை அகில இலங்கை ரீதியில் 9 வது இடத்தையும் பெற்ற மன்/முருங்கன் மகா வித்தியாலய மாணவி சரோன் அல்போன்ஸ் தெரிவித்தார். குறித்த மாணவி மேலும் தெரிவிக்கையில்,

உயிரியல் முறைமை தொழில் நுட்பவியல் துறையில் 3 ஏ சித்திகளை பெற்று மாவட்ட மட்டத்தில் முதல் நிலையை அடைந்துள்ளேன்.

விசேட விதமாக எல்லாம் வல்ல இறைவனின் ஆசீர்வாதமும் எனக்கு கிடைத்துள்ளது. உயிரியல் முறைமை தொழில் நுட்பவியல் துறையில் நிபுணத்துவ மிக்கவராக உயர்வதோடு எனது கிராம மக்களினதும் ஏனைய மக்களினதும் நலனுக்காக சேவை செய்வதே எனது எதிர்கால இலட்சியம். இதன் மூலம் எனது கிராம மக்களுக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் என்னால் முடிந்த உதவிகளை செய்வேன் என தெரிவித்தார். (2-4)

# இயற்பியல் கணிதப்பிரிவில் சிறந்த நிபுணத்துவம் பெற வேண்டும்

## மாவட்ட நிலையில் இரண்டாமிடம் பெற்ற மாணவன் தெரிவிப்பு

(மன்னார்)

இயற்பியல் கணிதப் பிரிவில் சிறந்த நிபுணத்துவம் பெற வேண்டும் என்பதே தனது எதிர்கால இலட்சியம் என இயற்பியல் கணிதப்பிரிவில் மாவட்ட ரீதியில் 2 ஆம் இடத்தை பெற்ற மன்/சித்தி விநாயகர் தேசிய இந்துக் கல்லூரி மாணவன் ஐ.அன்று சன்குருஸ் தெரிவித்தார்.

அம்மாணவன் மேலும் தெரிவிக்கையில், இயற்பியல் கணிதப்பிரிவில் 2 ஏ.பி.சித்தி பெற்று மாவட்ட ரீதியில் இரண்டாம் இடத்தை பெற்றுள்ளேன்.

நான் இந்நிலைக்கு முன்னேறக் காரணமாய் இருந்த



ஆசிரியர்கள், அதிபர்,நண்பர்கள் குறிப்பாக பெற்றோர், சகோதரர்கள் ஆவார்கள்.

இயற்பியல் கணிதப் பிரிவில் சிறந்த நிபுணத்துவம் பெற வேண்டும் என்பதே தனது எதிர்கால இலட்சியம் என குறித்த மாணவன் தெரிவித்தார். (2-4)

அக்கினிக்குஞ்சொன்று கண்டேன்
ஆங்கொரு மரப்பொந்திடை வைத்தேன்
வெந்து தணிந்தது காடு... – மகாகவி பாரதியார்

வலம்புரி

T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் மக்களின் பலத்தை உடைக்க கடும் முயற்சி நடக்கிறது

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வடக்கின் முதலமைச்சர் தனியான ஒரு அமைப்பை தேர்தல் களத்தில் இறக்கி இருந்தால் எவரும் வெற்றி பெற முடியாது என்ற நிலைமை ஏற்பட்டிருக்கும்.

அத்தகைய ஒரு சூழ்நிலை இருந்த போதிலும் அதனைச் செய்வதற்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் ஒருபோதும் தயாராக இல்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் வேட்பாளராக் நின்று முதலமைச்சர் பதவியில் இருக்கும்போது அப்படியான ஒரு வேலையைச் செய்யக்கூடாது என்ற அடிப்படையிலேயே முதலமைச்சர் விக்னேஸ்ரன் தனக்கு சாதகமான சூழ்நிலையை பயன்படுத்தவில்லை எனக் கூறலாம்.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் தவிர்ந்த வேறு யாருக்கும் இப்படியானதொரு சந்தர்ப்பம் ஏற்பட்டிருந்தால் அவர்கள் அதனை விட்டு வைத்திருக்க மாட்டார்கள் என்று அடித்துக் கூற முடியும்.

எனினும் இலங்கைத் தமிழரசுக் கட்சி முதலமைச்சர் விக்னேஸ்வரனை எப்பாடு பட்டும் தமிழ் மக்களிடமிருந்து அந்நியப்படுத்திவிட வேண்டும் என்பதில் மிகவும் உறுதியாக இருக்கிறது. இதற்கு அந்தக் கட்சியின் தலைவர்கள் ஆற்றுகின்ற உரைகளும், விடுக்கின்ற அறிக்கைகளும் தக்க சான்றாகும்.

அதிலும் தமிழரசுக் கட்சியின் செயலாளரும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவருமான துரைராஜசிங்கம் அவர்கள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தொடர்பில் விடுக்கின்ற அறிக்கைக்குள் தமிழ் மக்களின் பலத்தை உடைக்க வேண்டும் என்ற நோக்கம் தெரிகிறது.

கருணாவை வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்தி தோற்கடித்தது போல இப்போது துரைராஜசிங்கத்தை வைத்து வடக்கு – கிழக்கு தமிழ் மக்களின் ஒற்றுமைப் பலத்தை உடைப்பதற்கான சதி முயற்சிகள் நடக்கின்றனவோ என்றும் அந்தச் செயலைச் செய்வதற்கு துரைராஜசிங்கம் உடன்பட்டு விட்டாரோ என்றும் எண்ணத்தோன்றுமளவில் சமகாலச் சூழ்நிலை உள்ளது. அந்தளவுக்கு தமிழரசுக் கட்சியின் செயலாளர் துரைராஜசிங்கம் விடுக்கின்ற அறிக்கைகள் உள்ளன.

வடக்கின் முதலமைச்சராக சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் பதவி ஏற்ற பின்னர் வடக்கு கிழக்குத் தமிழ் மக்கள் மட்டுமன்றி புலம்பெயர்நாடுகளில் உள்ள எங்கள் தமிழ் உறவுகளும் தமிழ் மக்களின் தலைவர் முதலமைச்சர் விக்னேஸ்வரன் என்பதை ஏகமனதாக ஏற்றுள்ளனர்.

இதன் அடிப்படையில் உருவான தமிழ் மக்கள் பேரவை வடக்கு கிழக்கு தமிழ் மக்களையும் புலம்பெயர் தமிழ் உறவுகளையும் ஒன்றுபடுத்தி தமிழர்களின் ஒற்றுமையை பலமாக்கி உள்ளது.

இதனைத் தமிழ் மக்கள் பேரவை முன்னெடுத்த அகிம்சைப் போராட்டங்களும் கிழக்கில் விசேடமாக நடத்திய முத்தமிழ் விழாவும் சான்றுப்படுத்தும்.

இந்நிலையில் தமிழ் மக்கள் மீண்டும் பலமடைந்து விடுவாரோ என்று பயந்தவர்கள் தமிழரின் ஒற்றுமையைக் குலைக்க தமிழர்களைப் பயன்படுத்துவதே பொருத்தமான இராஜதந்திரம் எனக் கருதினார் போலும். அதன் அடிப்படையிலேயே துரைராஜசிங்கத்தின் அறிக்கைகள் அமைந்துள்ளன என்ற தீர்மானத்துக்கு நாம் வருவது தவறில்லை.

எது எவ்வாறாயினும் தமிழரசுக் கட்சியின் செயலாளர் நாயகம் என்ற உயர்ந்த பதவி நிலையில் இருந்து கொண்டு தமிழ் மக்களின் ஒற்றுமைப்பலத்தை உடைக்கின்ற வகையில் அவர் செயற்படக்கூடாது என்பதே நம் தாழ்மையான கோரிக்கை.

அதிலும் குறிப்பாக வடக்கின் முதலமைச்சர் தொடர்பில் அவர் விடுக்கின்ற அறிக்கைகள் பிரதேசவாதக் கருத்துக்களாக அமைந்துள்ளன என்பதை தமிழ் மக்கள் புரிந்து கொள்ளும்போது அதன் விளைவு மிக மோசமாக இருக்கும் என்பதால், இதுவிடயத்தில் தமிழரசுக் கட்சியில் இருக்கக்கூடிய ஆரம்பகால உறுப்பினர்களும் நலன்விரும்பிகளும் துரைராஜசிங்கத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பதன் மூலம் எங்கள் தமிழினத்துக்கு உதவி செய்வதாக இருக்கும். அதனை அவர்கள் செய்வார்கள் என நம்புவோம்.

## அரசுடன் இணைந்து சுகபோகங்களை அனுபவிக்கும் தரப்புக்களை இனங்கண்டு மக்கள் வாக்களிக்க வேண்டும்

### தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம்

(யாழ்ப்பாணம்)

மக்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதாக வாக்கு கேட்டு பதவிக்கு வந்த பின்னர் அரசுடன் ஒட்டியிருந்து சுகபோகங்களை அனுபவிக்கும் தரப்புக்களை இனங்கண்டு மக்கள் வாக்களிக்க வேண்டும் என தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கமும் வலி.வடக்கு இடம்பெயர்ந்தோர் மீள்குடியேற்ற குழுவும் கேட்டு கொண்டுள்ளது. யாழ்பாடி விடுதியில் நேற்றைய தினம் பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

யுத்தம் முடிவடைந்து 8 வருடங்களாகின்றன. மக்களுடைய மீள்குடியேற்றம். அரசியல் கைதிகளுடைய விடுதலை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் ஆகிய பிரச்சினைகள் உட்பட பெருமளவிலான பிரச்சினைகள் முடிவின்றி தொடர்ந்து வருகின்றன. இதற்கிடையில் எமது மக்கள் பல தேர்தல்களை கண்டு விட்டனர்.

ஆட்சியாளர்களும் அரசியல் தலைமைகளும் பிரச்சினைகளை தீர்ப்பதாக கூறி மக்களை ஏமாற்றி வாக்கு பெற்று வருகின்றனர்.

ஆனால் மக்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு இல்லை. இதேபோன்றுதான் எமது அரசியல் தலைமகளும் அரசின் சூழ்ச்சிக்கு துணை போகின்றனர். இந்த நிலையில்தான் உள்ளூராட்சி தேர்தல் நடைபெற போகின்றது. ஆகவே கடந்த காலங்களில் விட்ட தவறுகளை தமிழ் மக்கள் இனியும் விட்டுவிட கூடாது. இந்த ஏமாற்றுக்காரர்களை மக்கள் இனங்காண வேண்டும். தங்கள் பிரச்சினைகளை தீர்க்க கூடியவர்களை அதற்காக போராடுபவர்களை இனங்கண்டு வாக்களிக்க வேண்டும்.

இந்த தேர்தல் அபிவிருத்திக்கான தேர்தலாக இருந்தாலும் ஆட்சியாளர்களுக்கும் ஏமாற்றும் தமிழ் தலைமைகளுக்கும் தமது பலத்தை உணர்த்தும் தேர்தலாக இந்த தேர்தலை மக்கள் பயன்படுத்த வேண்டும். பிரச்சினைகளை தீர்ப்பதாக கூறி வாக்கு கேட்டவர்கள் இன்று அரசுடன் ஒட்டியிருந்து சுக போக வாழ்க்கை அனுபவித்து வருகின்றனர். ஆனால அவர்களுக்கு வாக்களித்த மக்கள் இன்றும் வீதியின் கரையோரங்களில் இருந்து 300 நாட்களாக போராடி வருகின்றனர்.

மக்களுடைய இந்த அவல நிலைக்கு எமது அரசியல் தலைவர்களே காரணம். ஆகவே மாசி மாதம் 25ஆம் திகதிக்குள் வடக்கு மக்களுடைய மீள்குடியேற்றம் பூரணப்படுத்தப்படாவிட்டால் இந்த அரசுக்கும் ஏமாற்றும் அரசியல் தலைவர்களுக்கு எதிராகவும் மாபெரும் போராட்டத்தில் ஈடுபட போவதாக அவர்கள் அறிவித்துள்ளனர். இந்த சந்திப்பில் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் எஸ்.இன்பநாயகம், மீள்குடியேற்ற தலைவர் கி.மனோகரன், வலி. வடக்கு இடம் பெயர்ந்தோர் மீள் குடியேற்ற தலைவர் ந.நவரட்ணராஜா, தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் பெண் செயற்பாட்டாளர் தர்மலிங்கம் சித்திரா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (ம-4)

## மக்களின் வீடுகளை உடைத்து இராணுவம் விடுதி கட்டுகின்றது

### வலி.வடக்கு மீள்குடியேற்ற குழுவின் தலைவர் கி.மனோகரன் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

மயிலிட்டியில் விடுவிக்கப்படாது உள்ள இடங்களில் காணப்படும் மக்களுடைய வீடுகளை இடித்து, அந்த இடிபாடுகளை காங்கேசன்துறையில் இராணுவம் அமைத்துள்ள விடுதியின் கட்டுமான பணி களுக்கு பயன்படுத்துவதாக வலி. வடக்கு மீள்குடியேற்ற குழு தெரிவித்துள்ளது.

இது குறித்து குறித்த குழுவின் தலைவர் கி. மனோகரன் தெரிவிக்கையில்,

எமது மண்ணை விட்டு சென்று இந்த வருடத்துடன் 28 வருடங்களாகின்றது. ஆனால் ஆட்சிக்கு வருகின்ற அரசுகள் எமது நிலத்தை விடுவிக்காது. எமது நிலங்களில் இராணுவம் ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து வருகின்றது. தற்போது அங்கு விடுவிக்கப்படாதுள்ள காணிகளில் உள்ள எமது வீடுகளை இடித்து அதன் இடிபாடுகளை பயன்படுத்தி விடுதியை மேலும் விஸ்தரிப்பு செய்வதற்கு இராணுவம் பயன்படுத்தி வருகின்றது.

இது தவிர விடுவிக்கப்பட்ட இடங்களில் மீள்குடியேற்றம் செய்யப்படுகின்ற மக்களுக்கு வழங்கப்படும் வீட்டு திட்டம் 8 இலட்சம் ரூபாயுக்குதான் வழங்கப்படுகின்றது. ஆனால் இடிக்கப்பட்ட எமது வீடுகளின் பெறுமதி 30 இலட்சம் ரூபாயுக்கு மேற்பட்டவை.

மேலும் அரசு தரும் 8 இலட்சம் ரூபாயில் முழுமையாக ஒரு வீடு கட்ட முடியாது. இது தொடர்பில் எமது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-4)

## யாழ் - கொழும்பு பஸ்கள் மீது நேற்று கல்வீச்சுத் தாக்குதல்

யாழ்ப்பாணம் - கொழும்பு நோக்கி பயணிக்கும் இரு அரைச் சொகுசு பஸ்கள் மீது நேற்று அதிகாலை அநுராதபுர பங்குலகம பகுதியில் வைத்து இனந்தெரியாத குழுவொன்று கல்வீச்சுத் தாக்குதல் நடத்தியுள்ளதாக அநுராதபுர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த தாக்குதலில் பஸ்கள் இரண்டினதும் முன்கண்ணாடிகள் பாரிய சேதம் அடைந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்த தாக்குதலினால் பயணிகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லையென பொலிஸார் அறிவித்துள்ளனர்.

அசம்பாவிதங்களை விளைவிக்க எதிர்பார்த்துள்ள குழுவொன்றினால் இந்த தாக்குதல் இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். தாக்குதல் மேற்கொண்டவர்களைத் தேடி பொலிஸார் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகவும் பொலிஸார் அறிவித்துள்ளனர். (ம)

## உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தமிழ் மக்கள் ஏமாற்றப்படுகின்றனர்

### சிவசக்தி ஆனந்தன்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் மூலம் தமிழ் மக்கள் திட்டமிட்டு ஏமாற்றப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று அவர் வழங்கிய பேட்டியொன்றில் தெரிவிக்கையில்,

சர்வதேசத்தின் அழுத்தங்களின் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரைகுறையான தீர்வுகளை வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றார். (ம)

## இலங்கை உயர்தொழில்நுட்பவியல் நிறுவன 14 ஆவது பட்டமளிப்பு வைபவம் இன்று

(கொழும்பு)

இலங்கை உயர் தொழில நுட்பவியல் நிறுவனத்தின் 14ஆவது பட்டமளிப்பு வைபவம் நேற்று கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகிய அதேவேளை தொடர்ந்து இன்று இடம்பெறும். இதில் யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தைச் சேர்ந்த 220 மாணவர்கள் பல்வேறு துறைகளில் பட்டம் பெறுகின்றனர். உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமாவில் 33பேரும் உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமாவில் 9பேரும் உயர்தேசிய தகவல் தொழில்நுட்ப டிப்ளோமாவில் 47பேரும் உயர் தேசிய ஆங்கில டிப்ளோமாவில் 61பேரும் உயர்தேசிய பொறியியல் (சிவில்) டிப்ளோமாவில் 32பேரும் உயர் தேசிய பொறியியல் (மின்னியல்) டிப்ளோமாவில் 20 பேரும் உயர் தேசிய சுற்றுலாத்துறை மற்றும் முகாமைத்துவ டிப்ளோமாவில் 13 பேரும் பட்டங்களைப் பெறுகின்றனர். ஏனைய தொழில்நுட்ப நிறுவனங்களுடன் ஒப்பிடும் போது யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தை சேர்ந்த பெருமளவு மாணவர்கள் பட்டம் பெற்று வெளியேறுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சான்றிதழ், பரிசு வழங்கல்

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் மகத்தான ஒக்டோபர் ரஷ்ய சோசலிசப் புரட்சியின் நூற்றாண்டை (1917 -2017) முன்னெடுக்கும் முகமாக அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட கவிதை, கட்டுரைப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்றவர்களினது விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இவர்களுக்கான வெற்றிக் கேடயம், சான்றிதழ் மற்றும் பரிசுப் பொதி ஆகியன இன்று ஞாயிற்றுக் கிழமை பி.ப. 3.30 மணியளவில் இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ள பேராசிரியர் க. கைலாசபதி யின் 35 ஆவது ஆண்டு நினைவுக் கருத்தரங்கில் வைத்து வழங்கப்படவுள்ளதாக தேசிய கலை இலக்கியப் பேரவையினர் அறிவித்துள்ளனர். (இ-7)

## புதுவருட சிறப்பு திருப்பலி

(யாழ்ப்பாணம்)

புதுவருடத்தை முன்னிட்டு யாழ்.மரியன்னை பேராலயம் மற்றும் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயங்களில் புதுவருட சிறப்பு திருப்பலி இன்று நள்ளிரவு 11.45 மணியளவில் இடம் பெறும். (இ-10-17)

## விசேட இசை நிகழ்ச்சி இன்று

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீவல்லிபுரஆழ்வார்ஆலயத்தில் மார்கழி உற்சவத்தை முன்னிட்டு பருத்தித்துறை கலாசார மத்திய நிலையத்தினரால் விசேட இசை நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை முற் பகல் 10 மணியளவில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் இடம்பெறும். (இ-10-19)

# மரண அறிவித்தல்கள்



## வேலுப்பிள்ளை சண்முகதேவன் (சந்தனம்)

பருத்திக்கலட்டி சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சண்முகதேவன் (சந்தனம்) நேற்று (30.12.2017) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் கந்தையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, கிருஸ்ணன், ஜானகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் வேணுகா (ஆசிரியை - ஸ்கந்தவரோதய ஆரம்ப பாடசாலை), ராதிகா (கனடா), சந்திரிகா (பிரான்ஸ்), செந்தூரன் (முகாமைத்துவ உதவியாளர் - மோட்டார் போக்குவரத்து திணைக்களம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவகுமார் (யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை), புவீந்திரன் (கனடா), ரவீந்திரதாஸ் (பிரான்ஸ்), உசாநந்தினி (மக்கள் வங்கி - சுன்னாகம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் வம்சினி, சிந்தூரி, ஷஸ்ரிகன், சர்வஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான நாராயணபிள்ளை, சரஸ்வதி, இரத்தினம் - சிவபாக்கியம் மற்றும் கனகசபை - பரமேஸ்வரி, தர்மகுலசிங்கம் - இராஜேஸ்வரி, காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் - கருணேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனருமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்தியால்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (2210)

பருத்திக்கலட்டி,
சுன்னாகம்.

தகவல்: குடும்பத்தினர்
077 735 2840

மரண அறிவித்தல்கள்



## தங்கராசா ஐயர் குகனேந்திரா ஐயர்

### (குகா ஐயா)

சந்நிதி கோவிலடியை பிறப்பிடமாகவும் 3ம் சந்தி கெருடாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா ஐயர் குகனேந்திரா ஐயர் (குகா ஐயா) 29.12.2017 அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கராசா ஐயர் - இராசமணி தம்பதியரின் அன்பு மகனும் சசிகலாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தம்பையா இராசமணி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பொன்மணிஅம்மா, காலஞ்சென்ற சின்னையா, காலஞ்சென்ற கனகேந்திரன் மகேஸ்வரி, காலஞ்சென்ற ரவீந்திரன், அகிலேந்திரா ஐயர், இரத்தினவதனி ஆகியோரின் சகோதரனும் கோடீஸ்வரன், திலீப்குமார் (டோகா) ஆகியோரின் மைத்துனரும் யாழினி, திவ்யா (நியூசிலாந்து), ரவிராஜ், (இலங்கை வங்கி - அச்சுவேலி) சாளினி (கட்டுநாயக்க பொறியியல் துறை மாணவி), தாட்சாயினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் முரளிதரன் (USA), கிருஷ்ணாகரன் (நியூசிலாந்து) ஆகியோரின் மாமனாரும் கல்யாணியின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காட்டுப்புலம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (C-1015)

3ம் சந்தி,
கெருடாவில்.

தகவல்: குடும்பத்தினர்
077 834 0605

மலர்வு:- 06 - 06 - 1932



உதிர்வு:- 29 - 12 - 2017

## திருமதி கமலலோசனி நல்லையா (லோசனா அக்கா)

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் பறாளாய் வீதி, சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலலோசனி நல்லையா 29.12.2017 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து - நல்லையா தம்பதிகளின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான அண்ணாவியார் கிருஷ்ணபிள்ளை - முத்தாச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - நாகமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகளும் தேவகல்யாணி (ஓய்வுநிலை ஆசிரியர் - வட்டு.மத்திய கல்லூரி), தேவரேணுகா (ஸ்ரீலங்கா ரெலிகொம் - மட்டக்களப்பு), தேவசுதன் (பஹ்ரெயின்), தேவதாஸ் (ஜேர்மனி), தேவரமணன் (விவசாய அமைச்சு - வட மாகாணம்), தேவகாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சிவகுமாரன் (ஓய்வுநிலை பிரதி அதிபர் - விக்ரோறியா கல்லூரி) மற்றும் சுந்தரலிங்கம் (ஸ்ரீலங்கா ரெலிகொம் - மட்டக்களப்பு), கோமளா (ஆசிரியர் - யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்), ஆதிரை (ஜேர்மனி), ரதிவதனி, கிருஷ்ணவேணி (கச்சேரி - மட்டக்களப்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற கேசவதாஸ் (சிங்கப்பூர்) மற்றும் சகலகலாவல்லி (ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்), சங்கீத பூசணம் கணபதிப்பிள்ளை (ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் அவர்களின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர், மகேஸ்வரி, சந்திரராசா, சந்திரபூபதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் கிருஷ்ணகுமார், ஹரிகுமார், தரணிதரன், ஸ்ரீதேவி, துளசிதரன், ஸ்ரீபிரியா, ஸ்ரீரதி ஆகியோரின் பெரிய தாயாரும் சிவசுதன், அபிஷாதனா, சம்பிகா, விபீஷன், காயத்திரி, துவாரகன், அட்சரன், அர்த்தனா, தனுஜா, கோசலா, துஷாகரன், யுவன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் பறாளாய் வீதி, சுழிபுரம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பொன்னாலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (2211)

பறாளாய் வீதி,
சுழிபுரம். 021-225 0601

தகவல்:
குடும்பத்தினர்



## முருகேசு கந்தசாமி

கரவெட்டி கிழக்கை பிறப்பிடமாகவும் வட்டக்கச்சி சிவிக்செண்டரை வசிப்பிடமாகவும் கொண்ட வெள்ளை மாமா என அழைக்கப்படும் முருகேசு கந்தசாமி அவர்கள் நேற்று (30.12.2017) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் இராஜேஸ்வரியின் பாசமிகு கணவரும் வாசுகி (தாதிய பரிபாலகி - வவுனியா வைத்தியசாலை), சாந்தன் (எட்டியாந்தோட்டை), ஆதவன் (கனடா), கவிதா (பொதுச்சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர் - மலேரியா தடை இயக்கம், கிளிநொச்சி), நந்தினி (வட்டக்கச்சி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் மயில்வாகனத்தின் (சில்வா வீதி) சிறிய தந்தையும் ஸ்ரீதரன் (வவுனியா), வனிதா (சென்.மேரிஸ் கல்லூரி - எட்டியாந்தோட்டை), வசிதா (கனடா), லிங்கமூர்த்தி (மருந்தக ஊழியர் - கண்டாவளை), பிறேம்குமார் (ஆசிரியர் - கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை) ஆகியோரின் மாமனாரும் சாகித்தியன் (விபுலானந்தா கல்லூரி - வவுனியா), சக்திகா (இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்), சுவேதா (கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி), சுவநிதா (சென்.மேரிஸ் கல்லூரி - எட்டியாந்தோட்டை), நிதர்ஷனா, நிருஷனா, நிந்தனா (கனடா), சங்கவன், சங்கிசை (கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி), கனியிசை (கிளி/வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்), வர்ணிகா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பன்னங்கண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (C-1010)

வட்டக்கச்சி,
சிவிக்செண்டர்.

தகவல்:
குடும்பத்தினர்

## மக்களின் ஆதரவை...

ரிகையாளர் சந்திப்பும் நேற்று பிற்பகல் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் வட்டுக்கோட்டை அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். எங்களுடைய வேட்பாளர்கள் தூய கரங்கள் கொண்டவர்கள் எந்த ஊழல் குற்றச்சாட்டுக்கும் உள்ளாகாதவர்கள். கொள்கையில் உறுதி கொண்டவர்கள். தேசியத்தின் மீது பற்றும் அபிவிருத்தி மீது பெரு விருப்பும் கொண்டவர்கள். ஆனால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்று பெயரை வைத்து கொண்டு தமிழ்த் தேசியத்துக்கு எதிரானவர்களை கூட்டம் சேர்த்து தமிழ் மக்களுக்கு விரோதமாக வெளிப்படையாகவே செயற்பட ஆரம்பித்துள்ளது இன்றைய தமிழ்த் தேசிய கூட்டமைப்பு.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உச்சகட்ட துரோகமாக ஒற்றையாட்சி அரசியலமைப்பை சமஷ்டி முறையிலான அரசியலமைப்பு என்று கூற ஆரம்பித்துள்ளனர். மக்களை முட்டாளாக்கும் அல்லது ஏமாற்றும் வேளைகளில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் தமிழரசு கட்சியும் இறங்கியுள்ளது. ஆகவே இந்த துரோக கூட்டமைப்பை தூக்கி எறிந்து மாற்றத்துக்கான புதிய திருப்பத்தை மக்கள் ஏற்படுத்த வேண்டும். அந்த மாற்றம் தனி நாட்டு கோரிக்கை முன்வைக்கப்பட்ட வட்டுக்கோட்டை மண்ணில் இருந்து ஆரம்பிக்க வேண்டும்.

இன அடையாளங்கள் திட்டமிட்டு அளிக்கப்பட்டு வருகின்ற போதிலும் தமிழ் தலைமைகள் அவற்றை கண்டு கொள்ளாது இருக்கின்றனர். இவ்வாறு அனைத்து வழிகளிலும் தமிழர் தேசம் அழிந்து கொண்டுள்ளது. ஆகவே மாற்றத்தை ஏற்படுத்தும் வரையிலும் தமிழ்த் தேசியம் என்பது கனவாக தான் இருக்கும். வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இறுதியாக விடுத்த அறிக்கையில், தமிழ் மக்கள் பேரவையின் கொள்கைக்கு தான் உடன்பட்டு போவதாகவும், அவ்வாறான கொள்கை உடையவர்களுக்கு மதிப்பளிப்பதாகவும் கூறியிருந்தார்.

எங்கள் கொள்கை தான் தமிழ் மக்கள் பேரவையின் கொள்கையும், அவர்கள் கொள்கை தான் எங்கள் கொள்கையும், ஆகவே முதலமைச்சரும் கொள்கை அடிப்படையில் எம்மோடு இணைந்து பணியாற்ற முன்வர வேண்டும். தமிழ்த் தேசியத்தின் பால் நாட்டமுள்ள அனைவரும் எங்களோடு இணைந்து செயலாற்ற முன்வர வேண்டும் என அழைப்பு விடுத்தார் சட்டத்தரணி சுகாஸ். (ம-4)

## யாழில் இவ் வருடத்தில்...

உள்ளாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இவ்வாறு தொற்றுக்குள்ளானவர்களில் அதிகமானோர் யாழ்.பிராந்தியத்தை சேர்ந்தவர்கள் எனவும் கூறியுள்ளார்.

இவற்றில் ஜனவரி மாதத்தில் 625 பேரும், பெப்ரவரி மாதத்தில் 478 பேரும், மார்ச் மாதத்தில் 863 பேரும்,ஏப்ரல் மாதத்தில் 499 பேரும், மே மாதத்தில் 301 பேரும், யூன் மாதத்தில் 288 பேரும், ஜூலை மாதத்தில் 376 பேரும்,ஆகஸ்ட் மாதத்தில் 290 பேரும், செப்டெம்பர் மாதத்தில் 341 பேரும், ஒக்டோபர் மாதத்தில் 593 பேரும், நவம்பர் மாதத்தில் 509 பேரும், டிசெம்பர் மாதம் 620 பேரும், மொத்தமாக 5 ஆயிரத்து 783 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் இந்த மாதத்தில் மாத்திரம் யாழ்ப்பாணத்தில் 115 பேரும், உடுவிலில் 88 பேரும், கோப்பாயில் 52 பேரும், நல்லூரில் 40 பேரும், தெல்லிப்பழையில் 76பேரும்,பருத்தித்துறையில் 35 பேரும், மருதங்கேணியில் ஒருவரும், கரவெட்டியில் 26பேரும், சாவகச்சேரியில் 88பேரும், சங்கானையில் 24 பேரும், சண்டிலிப்பாயில் 53 பேரும், ஊர்காவற்றுறையில் 9 பேரும்,காரைநகரில் 5பேரும், வேலணையில் 8 பேரும்,டெங்கு காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு இருந்தனர்.

டெங்கு நோயினையும் மலேரியா நோயினையும் பெருக்கும் நுளம்புகள் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாக உள்ளதால், இரண்டுக்கும் எதிராகவும் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். குறிப்பாக வீட்டு கிணறுகளில் மீன்கள் வளர்க்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றோம். இதில் தாமாகவும் ஈடுபட மக்கள் முன்வர வேண்டும். மீன்கள் வளர்ப்பதால் நுளம்பின் குடம்பிகள் அந்த மீன்களால் உண்ணப்படுகின்றது. நீர்த்தாங்கிகளையும் சுத்தமாக வைத்திருக்க மக்கள் முயல வேண்டும்.

மேலும் காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக வைத்தியரை நாடி அது தொடர்பில் உரிய சிகிச்சை பெற வேண்டும். டெங்கு காய்ச்சலால் உயிரிழந்தவர்கள் அனைவரும் காலதாமதமாக வைத்தியசாலை வருவதனாலேயே ஏற்படுகின்றது. ஆகவே உடனடியாக வைத்தியசாலையை நாடுவதன் மூலம் அனியாயமான உயிரிழப்புக்களை தடுக்க முடியும். மேலும் வெளிநாட்டில் உள்ளவர்கள் இங்கு வரும் போது மலேரியா தொற்றுக்கு உரிய இரத்த பரிசோதனை செய்வது நல்லது என்றார் பணிப்பாளர். (ம-4)

## புதிய பேருந்து நிலை...

தொடர்பாக வழக்கொன்று நீதிமன்றத்தில் உள்ளது. இந்நிலையில் வட மாகாண முதலமைச்சரினால் நேற்றுமுன்தினம் புதிய பேருந்து நிலையம் தொடர்பாக கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் எதிர்வரும் முதலாம் திகதியில் இருந்து புதிய பேருந்து நிலையத்திற்கு எம்மையும் செல்லுமாறு தெரிவித்ததுடன் பழைய பேருந்து நிலையத்தினை மூடுமாறு தெவித்துள்ளார்.

இதன்போது எமக்கான சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. எனினும் இவ்விடயத்தில் சம்பந்தப்படாத வேறு பலர் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

1800க்கு மேற்பட்ட தொழிலாளர்களை கொண்ட எமது சங்கத்தினை வெளியேறுமாறு தெரிவித்து முதலமைச்சர் கூட்டத்தை நடத்தியதனால் எம்மை அவமதித்து விட்டார்.

இந்நிலையில் நீதிமன்றத்தில் வழக்கு இருக்கும் போது ஓர் நீதியரசராக இருந்தவர் நீதிமன்றத்தையே அவமதிக்கும் வகையில் செயற்பட்டுள்ளார். கடந்த 53 வருடங்களாக செயற்பட்டு வரும் பழைய பேருந்து நிலையத்தில் இருந்து எம்மை வெளியேற்ற கோருவது நியாயமற்றது.

நாம் 2018ஆம் ஆண்டுக்கான நிதியை நகரசபைக்கு செலுத்தியுள்ளோம்.எனினும் அப்பணத்தை மீண்டும் எமக்கு செலுத்தி விட்டு எம்மை வெளியேற்றுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் புதிய பேருந்து நிலையத்திற்கு செல்லுமாறும் தெரிவிக்கின்றனர்.

எனவே எமது சேவைகளை புதிய பேருந்து நிலையத்தில் இருந்து செயற்படுத்துமாறு தெரிவித்தால் எமது தொழிலாளர்களின் நலன்கருதி முதலாம் திகதியில் இருந்து பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடுவோம் என தெரிவித்தார். (ம)

## விக்னேஸ்வரன் மீது...

முகம் செய்து வைக்கும் நிகழ்வும், பத்திரிகையாளர் சந்திப்பும் நேற்றைய தினம் வட்டுக்கோட்டை அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் ஊடகவியலாளரின் கேள்விக்கு பதிலளித்த, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், மற்றும் தேசிய அமைப்பாளரும் சட்டத்தரணியுமான கே.சுகாஸ் ஆகியோரே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர். முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு பதவி ஆசை இருந்திருந்தால், அவர் சம்பந்தனுக்கு விசுவாசமாகவும், தமிழரசு கட்சிக்கு ஆதரவாகவும் செயற்பட்டிருக்கலாம். ஆனால் அவர் தமிழரசு கட்சியின் துரோகதனத்தை வெளிக்காட்டிஇருந்தார்.

இது தவிர சம்பந்தனுக்கு அடுத்து தலைமை பதவி ஏற்கும் தகுதி முதலமைச்சருக்கு தான் உண்டு, இதை எல்லாவற்றையும் தாண்டி அவர் விமர்சித்தமைக்கு காரணம் மக்கள் மீது கொண்ட அக்கறையினாலேயே. இதனால் தான் தமிழரசு கட்சி அச்சமடைய ஆரம்பித்துள்ளது. மக்களிடையே தலைவராக விக்னேஸ்வரன் உருவாகியுள்ளார். இதனால் தான் அவர் மீது சேறு பூசும் நடவடிக்கைகளில் தமிழரசு கட்சி ஆரம்பித்துள்ளது. இந்த விடயம் குறித்து மக்கள் தெளிவாக இருக்க வேண்டும்.

இது தவிர உள்ளூராட்சி சபை தேர்தல் மூலம் பல்வேறு விடயங்கள் வெளியில் காண்பிக்கப்படவுள்ளன. தமிழரசு கட்சியினர கூறுவது போன்று இது தனியே அபிவிருத்திக்கான தேர்தல் மட்டுமல்ல, தமிழ் மக்களுடைய மனோ நிலையை அறிவதற்கான தேர்தல், வெளிநாடுகளுக்கு செய்தி சொல்வதற்கான தேர்தல். இதில் வெற்றிபெறும் தரப்புக்களே தமிழ் மக்களுடைய எதிர்காலத்தை தீர்மானிக்க போகின்றனர்.

## ஆசிய மட்ட பளுதூக்கல்

# பாண்டியன்குளம் மாணவி சாதனை



மு/பாண்டியன்குளம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவி தர்சிகா தேவராசா மலேசியாவில் நடைபெற்ற ஆசிய மட்ட பளுதூக்கும் போட்டியில் முதலாம் நிலை பெற்று பாடசாலைக்கும் மாவட்டத்துக்கும் நாட்டுக்கும் பெருமை சேர்த்துள்ளார். இன்று தாய்நாடு வரும் இவருக்கான வரவேற்பு நிகழ்வு வலயக்கல்வி பணிமனையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (281)

# த.தே கூட்டமைப்பு சோரம் போகவில்லை

## செல்வம் அடைக்கலநாதன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்த விதத்திலும் சோரம் போகவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ளூராட்சி மன்றதேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தெளிவுபடுத்தும் கூட்டம் நேற்று வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பணத்திற்காகவும் பதவிகளுக்காகவும் சோரம் போகக்கூடியவர்கள் அல்ல. வரவுசெலவுத் திட்டத்திற்கு நாம் வாக்களித்தோம் என்பதற்காக அரசாங்கம் எமக்குப் பணம் தந்ததாக சிலர் கூறிக் கொண்டு திரிகின்றனர்.

அவ்வாறு பணம் பெற்றதாக கூறுவதை நிரூபியுங்கள் நாம் அனைவரும் எமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை இராஜினாமாச் செய்துவிட்டுப் போகின்றோம்.

பணத்திற்காக நாம் சோரம் போகக்கூடியவர்கள் எனில் நாம் எப்போதோ அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொண்டிருப்போம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் விட்டுக்கொடுப்புக்கள் என்றுமே தோற்றுப் போகாது.

ஆனால் இன்றைக்கு இந்த அரசாங்கத்தோடு எமக்கான இனப்பிரச்சினைத் தீர்விற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணைந்து செல்வதால்தான் இன்று நாம் எமது மாவீரர் துயிலும் இல்லங்களில் விளக்கேற்ற முடிந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடந்து கொள்ளும் முறை காரணமாக இன்று அரசாங்கம் எம்மை நோக்கிக் கேள்வி கேட்க முடியாத நிலையில் இருக்கின்றது.

தமிழ் மக்களைக் கூட்டமைப்பு அடமானம் வைத்துவிட்டது என்று கூறுபவர்கள் இறுதிவரை தமிழ் மக்களுக்காகக் கொள்கையுடன் போராடக்கூடிய கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பதை எதிர்வரும் தேர்தலில் கண்டு கொள்வார்கள் என செல்வம் அடைக்கலநாதன் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

ஆகவே தமிழ் மக்கள் இம்முறையாவது நாங்கள் தேசியத்தின்பால் தான் நிற்கின்றோம் என்ற தெளிவான செய்தியை தமது வாக்குகள் மூலம் சொல்ல வேண்டும் என தெரிவித்தனர். இந்த சந்திப்பில் யாழ்.மாநகர சபையின் மேயர் வேட்பாளர் விஸ்வலிங்கம் மணிவண்ணனும் கலந்து கொண்டிருந்தார். (ம-4)

## வீதியிலிருந்து கண்ணீர்...

சாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதன்போது கேப்பாப்பிலவு பகுதியில் 111.5 ஏக்கர் காணிகளும் சீனியாமோட்டை பகுதியில் 21.84 ஏக்கர் காணிகளுமாக மொத்தமாக 133.34 ஏக்கர் காணிகள் கையளிக்கப்பட்டது

காணிகளை பெற்றுக்கொண்ட அரசாங்க அதிபர் குறித்த காணிகள் நில அளவீடு செய்து உரியவகையில் மக்களிடம் கையளிக்கப்படும் எனவும் நாளை 1-ம் திகதி வற்றாப்பளை புதுக்குடியிருப்பு பிரதான வீதியை மறித்து அமைக்கப்பட்டுள்ள இந்த முகாமை அகற்றி பிரதான பாதை திறந்து விடப்படும் எனவும் அத்தோடு மக்களும் தங்களுடைய காணிகளுக்கு செல்லலாம் எனவும் தெரிவித்தார்

இந்நிலையில் நேற்றுமுன்தினம் பிரதேச செயலக காணி உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள் காணிகளை அடையாளம் காட்ட மக்களை அழைத்திருந்தனர். இந்நிலையில் காணிகளை பார்வையிட்டு வந்த மக்கள் இவ்வாறு கருத்து தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

எனது பெயர் பரமேஸ்வரி. எங்கள் காணிகளை விடுவித்துள்ளார்கள் எங்கள் காணி நான்கு ஏக்கர் காணி. எங்கள் காணியில் வேலி ஒன்றும் இல்லை. காடாய் கிடக்கின்றது. நாங்கள் கட்டி இருந்த வீடு அப்படியே இருக்கிறது. கிணறு இடிந்துள்ளது. மற்றும்படி ஒரு பிரச்சினையும் இல்லை. எங்களை போல் மற்றவர்களின் காணிகளும் விட்டு தந்தால் பெரிய உதவியாக இருந்திருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

காணிவிடுவித்த மற்றும் ஒரு வயோதிபர் கருத்து தெரிவிக்கையில், நாங்கள் எங்கள் காணிகளை பார்வையிட்டுள்ளோம். வேறு பகுதிகளில் வீடுகள் கட்டியுள்ளார்கள்.

ஆனால் எங்கள் காணியில் வேலி இல்லை, மலசலகூடம் இல்லை,கிணறு இல்லை, தென்னைமரங்கள் இல்லை, இவ்வாறு தான் என் காணி இன்று கிடக்கின்றது. ஆனால் நாங்கள் எல்லாருமாகத்தான் ஆர்ப்பாட்டம் செய்தனாங்கள். இன்று நாங்கள் ஓரளவுக்கு சந்தோசமாக இருக்கின்றோம். ஆனால் காணி விடுவிக்காத பலர் கவலைப்படுகின்றார்கள். அவர்களின் காணிகளையும் விட்டால்தான் நல்லம். நாங்கள் எங்கள் காணிக்கு போக மற்றவர்கள் வீதியில் இருந்து கண்ணீர்விட நாங்கள் எவ்வாறு வாழ முடியும். அனைவரின் காணியும் விடுவிக்க வேண்டும் என்பதே எமது கருத்து என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-281)

## வைரஸினால் பாதிக்க...

காய்ச்சலில் பாதிக்கப்பட்ட ஜெயனி ஆரம்பத்தில் முல்லைத்தீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவரது நிலைமை ஆபத்தாக இருந்தமையினால் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைக்கு மாற்றி அனுப்பப்பட்டுள்ளார். அங்கு சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்துள்ளார்.

இதே காய்ச்சல் காரணமாக முருகானந்தன் என்ற அந்த பெண்ணின் கணவர் 17 நாட்களுக்கு முன்னர் முல்லைத்தீவு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

இந்த நோய் என்ன என்பதனை அடையாளம் காணுவதற்காக சுகாதார அமைச்சின் விசேட வைத்தியர்கள் சிலர் முல்லைத்தீவு பிரதேசத்திற்கு சென்றுள்ளனர். (ம-281)

## சுகாதார உத்தி...

க்கம்

காணப்படுகின்ற காரணத்தினால் நுளம்பு புகையடிப்பதற்கு கையொப்பமிடுமாறு கோரி அந்த பெண்மணிக்கு அருகே சென்றுள்ளனர்.

அந்த பெண்ணின் தாலிக்கொடியை சாதுரியமாக அறுத்துக்கொண்டு வெளியில் தயார நிலையில் இருந்த மோட்டார் சைக்கிளில் தப்பிச்சென்றுள்ளனர்.

இதற்கு முன்பதாக அயல் வீட்டுக்குச் சென்று நவீல்ட் பாடசாலைக்கு பணம் சேகரிப்பதாக கூறி பணம் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் யாழ்.குடாநாட்டில் அரச உத்தியோஸ்தர்கள், சுகாதார உத்தியோகஸ்தர்கள் போன்று பாசாங்கு செய்து களவு நடவடிக்கையில் ஈடுபடுகின்றமை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படும் நிலையில் மக்களை எச்சரிக்கையாக இருக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றது. (ம-60)

## இன அழிப்புக்கு...

மைச்சர் எம்.ஜி.ஆரின் நூற்றாண்டு விழா நேற்று சனிக்கிழமை முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் எமது தமிழினம் அழிக்கப்பட்டபோது மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து செயற்பட்ட தி.மு.கவினர் எமது ஆட்சியினைக் குறித்து விமர்சனம் செய்து வருகின்றனர்.

இதேபோன்று கச்சதீவைத் தாரைவார்த்துக் கொடுத்த தி.மு.க. அரசு தற்போது அ.தி.மு.க அரசை விமர்சித்து வருகின்றமையும் மிகவும் வேடிக்கையானது என தமிழகத் துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## நாண...

தாள்களை அருகிலுள்ள வங்கிகளில் மாற்றிக் கொள்ளுமாறும். அவ்வாறு குறிப்பிட்ட கால எல்லைக்குள் மாற்றிக் கொள்ளாத பணம் செல்லுபடியற்றதாக கருதப்படும் எனவும் மத்திய வங்கி அறிவித்திருந்தது.

ஏற்கெனவே, டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரையே (இன்று வரை) நாணயத் தாள்களை மாற்றிக் கொள்வதற்கான காலமாக அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)


NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. | மணிக்கூட்டு வீதி, யாழ்.நகர்.
A/L DAY CLASS
கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்
ஆரம்பம் :
02.01.2018 செவ்வாய் 7.00 am
A/L 2020 பிரிவுக்கான
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன

A/L பௌதிகவியல்
பிரத்தியேக வகுப்புக்கள்
தொ.பே: 0783459063
(2203)

A/L - 2018
DAY CLASS
புவியியல் - N.BABU
திங்கள், செவ்வாய், வியாழன் - 7am
ஆரம்பம்: 01.01.2018 - 8am
தொடர்பு: 0779365087
DMI -ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

அண்ணா
வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
EXPRESS Courier Services
அண்ணா பொதிகள் சேவை
976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | வேலணை | சாவகச்சேரி | மிசாலை
முல்லைத்தீவு | கிளிநொச்சி | வவுனியா | திருகோணமலை
(C-944)

விரைவு பொதிகள் சேவை,
விமான பயணச்சீட்டுகள்
விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
(C-788)
UK-550/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.
CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145
077 2931062
follow us cnrworldwideexpress
(த-983)

IT Spot
185, V.M.றோட், பருத்தித்துறை.
ICT
ஆரம்பம்:03/01/2018
ஆங்கில, தமிழ் மொழிமூல வகுப்புக்கள்
தரம்-10, 11 & A/L 2018/19/20/ Day
க.செந்தூரன் (B.Sc (Hons) BIT) 0770871456
(1547)

FALC FRENCH LANGUAGE CENTRE
FRENCH வகுப்புக்கள்
V. ஜெகன் (Trained in France- 2007)
Diploma Classes : DELF A1, A2, B1, B2.
40, பலாலி வீதி, இலுப்பையடி 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் :06.01.18 சனி காலை 10மணி.
181, பிரதான வீதி, நெல்லியடி. 021 320 2973 ஆரம்பம் :08.01.18 மாலை 3.30மணி
திருமணம் முடித்து U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
(C-787)

DCM
கலை, வர்த்தகம் Day Class
ஆரம்பம் : ஜனவரி 02
யாழ்ப்பாணம் 8.00am
சுன்னாகம் 3.00pm
(1012)

Dream of Studying MBBS / MD
100% Full Scholarships Available
CHINA
BELARUS
RUSSIA
MALAYSIA
LATVIA
SLMC Approved
Guangxi Medical University - China
Sichuan University - China.
Zhengzhou University - China
Gomel State Medical University - Belarus
Vitebsk State Medical University - Belarus
Riga Stradins University - Latvia
Segi University - Malaysia
International Medical University - Malaysia
First Moscow Medical University - Russia
Duration: 6 years Medium-English
Colombo : 076 7013060
107, B-1/1 Galle Road, Colombo 06
Jaffna : 077 3013060
77, Clock Tower Road, Jaffna
ICS Study Medicine Abroad
(C-1005)

SLIIT
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நேரடி அங்கீகாரம் உள்ள இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் (SLIIT)
A/L பெறுபேறுகளை பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கு வழங்கும் விசேட பயிற்சி நெறிகள்
பல்கலைக்கழகங்களுக்கு தெரிவான மாணவர்களே...! உங்களுக்கான கணனி மற்றும் ஆங்கில பயிற்சி நெறிகள் ஆரம்பம்
● Auto CAD
● Spoken English
● Spoken Sinhala
● Information Technology - CPITA
A/L 3 "S" சித்தியுள்ள நீங்களும் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற தகவல் தொழில்நுட்ப, முகாமைத்துவ பட்டதாரியாகலாம்
B.Sc (Hons)
★ Software Engineering
★ Information Systems Engineering
★ Cyber Security
BBA (Hons)
★ Human Capital Management
★ Marketing Management
★ Accounting & Finance
A/L 3 "S" சித்திகள் கிடைக்கவில்லையா கவலையை விடுங்கள்...! உங்கள் பல்கலைக்கழக பட்டதாரி கனவை நனவாக்குகின்றோம் நீங்கள் O/L தகைமையுடன் பட்ட படிப்பு அடிப்படை தகைமை ஊடாக நீங்களும் B.Sc, B.B.A, QS பட்டங்களை பெற்றுக்கொள்ளலாம்.
SRI LANKA INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
53, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(ஆரியகுளம் சந்திக்கு அருகாமையில்)
www.sliit.lk 021 720 4204
(C-987)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.12.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka

Viber 076 636 3378


வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 149

வள்ளுவர் ஆண்டு 2048 | 31.12.2017 | தொலைபேசி : 021 222 3378



# நலம்தானா? உடலும் உள்ளமும் நலம்தானா?

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# தமிழ் மக்களின் உரிமைகளை வெல்ல தமிழ்த் தலைமை தவறிவிட்டது

அரசியல் அபிவிருத்தி என்பது ஈழத்தமிழ் மக்கள் மத்தியில் எந்த அளவுக்கு வளர்ச்சி கொண்டிருக்கிறது என்பது அறியப்படாத விடயமாக இருக்கிறதா ? அல்லது கைவிடப்பட்ட ஒரு துறை போல் காணப்படுகிறதா? என்பது சமூக அரசியல் ஆர்வலர்கள் மத்தியில் எழுந்துள்ள கேள்வியாக உள்ளது.

உலகின் பல்வேறு சமுதாயங்கள் அரசியல் நாகரிகம் அடைந்த நிலையை அடையும் பொருட்டு மனித இயல்பிற்கு ஏற்ப, பகுத்தறிவின்பால் உந்தப்பட்டு பொது நோக்கான அரசியல் வளர்ச்சியை அடிப்படையாக கொண்டு இணைந்து செயற்பட எண்ணுவதும், பங்குபற்றல் அரசியலில் ஒன்று சேர்ந்த நிலையை பேணுவதுவும் சமூக அடையாளத்தையும் தனித்துவத்தையும் காத்து நிற்க அத்தியாவசியமானது.

அரசியல் அபிவிருத்தி நோக்கிய சிந்தனை அற்ற போட்டிகளால் சமூக அடையாளமும் தனித்துவமும் சிதைவடைந்து சீரழிந்து **Political decay** என்று குறிப்பிடப்படும் நிலையை அடைய நேரிடும். அது மட்டுமல்லாது அரசியல் தலைவர்கள் சொந்த அரசியல் கள, தளநலன்களையே இழந்து நிற்கும் நிலையை அடைய நேரிடும்.

இதனை அமெரிக்க அரசியல் விஞ்ஞானியும் ஆலோசகரும் சுமார் ஐம்பது வருடங்கள் ஹவாட் பல்கலைக் கழகத்தில் சர்வதேச அரசியல் துறையில் பணியாற்றிய வருமான சாமுவல் ஹன்ரிங்ரன் (Samuel P. Huntington) அவர்களின் ஆய்வு கட்டுரை ஒன்றிலிருந்து பெறக்கூடியதாக இருந்தது.

அரசியல் அபிவிருத்தி என்பது ஒரு சமூகத்தின் பரந்தளவிலான அனைத்து அரசியல் அம்சங்களின் மீதான தாக்கத்தை ஏற்படுத்தவல்ல ஒரு செயற்பாடாகும். தனிப்பட்ட ஒரு அலகு கொண்டு அரசியல் அபிவிருத்தியை அளவிட முடியாது என்பது பொதுவான கருத்தாகும். இது ஒரு சமூகத்தின் பொருளாதார மேம்பாட்டிற்கு அப்பாற்பட்டது.

தற்காலத்திற்குரிய புதுமுறை சமூக அரசியல் வழி நடத்தல் என்பது இங்கே எதிர்பார்க்கப்படுகிறது. சமுதாயத்தின் உள்ளே அரசியல் பகுத்தறிவை உருவாக்குதல், இது தனிநலவாத பார்வையிலிருந்து அப்பாற்பட்டு பொது நலவாதம் குறித்த பார்வையை உருவாக்குவது , சமூகம் ஒன்றின் மத்தியில் இருக்கக்கூடிய பல்வேறுபட்ட அரசியல் சித்தாந்த பார்வையை கொண்டவர்களை ஒரு தளத்திற்கு கொண்டு வருவது மட்டுமல்லாது சமூக அடையாளங்களை கொண்டது என்ற அம்சத்தையும் ஒருங்கிணைத்தல்.

மேலும் ஜனநாயக விழுமியங்களை சமூகத்தின் மத்தியிலே, ஒரு கலாசாரமாக உருமாற்றுதல் என பல்வேறு அம்சங்களை அரசியல் அபிவிருத்தியில், கவனம் செலுத்த வேண்டிய பகுதிகளாக பார்க்கப்படுகிறது.

2009 ஆம் ஆண்டு பாரிய இழப்புகளை சந்தித்ததன் பின்பு தன்னல அரசியல் போக்கின் தரம் அதிகரித்து இருப்பதை தேசிய நலன்களில் ஆர்வம் கொண்டவர்களின் கவலையாக இருக்கிறது.

ஈழத்தமிழ் இனம் இதுவரையில் தமிழர்களின் அபிலாசைகளை மையமாக கொண்டு பொதுநலவாத ஜனநாயக பகுத்தறிவுவாத அமைப்பு ஒன்று உருவாகவில்லை என்பது குறித்தும் தேசியவாதிகள் கவலை கொண்டுள்ளனர்.

இந்த நிலை, தமிழ் மக்கள் மத்தியில் இருக்கக் கூடிய ஒரு பித்த அரசியல் எண்ணக் கிடைக்கை. இதுதான் என்று வெளிப்படையாக ஒரு விடயத்தை கொள்கை நிறைவேற்றம் செய்யமுடியாத சிதைவுறும் அரசியலிற்குள் தள்ளி விட்டிருக்கிறது.

அரசியலில் போட்டி என்றாலே சுயநலலை மையமாக கொண்டதுதான் என்பது இங்கே பலரதும் எண்ணப்பாடாக இருக்கலாம். சுயநல போட்டி அரசியலின் வரம்புகள் தேசியம் என்ற எல்லைக்கோடுகளால் வரையறை செய்யப்படுகிறது.

தேசியத்தின் வரம்புகளை மீறி செயற்படுவது ஏற்றுக் கொள்ள முடியாதது ஆகும். உதாரணமாக இலங்கை நிறுவனங்கள் வடக்கு-கிழக்கு பகுதிகளை இராணுவ மயமாக்கலில் ஈடுபடுவதை கண்டும் காணாது விடுவது.

மீள் குடியேற்றம் என்ற பெயரில் தமிழர் தாயக பகுதிகளை அரசியல் பலநிலையை நீர்த்துப்போகச் செய்கிறது என்று தெரிந்தும் பாராமுகமாக இருப்பது.



உள்ளூர் வன்முறைகள், போதைப்பொருள் பாவனை, கலாசார சீர்கேடுகள் எனப் பல்வேறு மறைமுக செயற்பாடுகள் மூலம் இடம்பெறும் மத்திய அரசின் சட்ட ஒழுங்கு மென்மைபோக்கு மூலம் இளைய சமுதாயத்தை சீர்கெட வைப்பது ஆகியன இனக் கட்டமைப்பு அழிப்பு என்ற வகையிலேயே நோக்கப்படுகிறது.

மேலும் புதிய அரசியல் அமைப்பு சீர்திருத்தம் என்ற வகையில், இவை அனைத்தும் நசுக்கப்படும் இனத்தாலேயே ஏற்றுக் கொள்ளப்பட்டது என்ற எண்ணப்பாட்டை சர்வதேச அளவில் கொண்டு செல்வது இலங்கை அரசின் நோக்கமாக தெரிகிறது.

இந்த நிலையை சர்வதேச அனுபவத்திலிருந்து ஒப்பீட்டு ஆய்வுத் தத்துவ முறையில் பார்ப்போமேயானால் பல்லின சமுதாய நாடுகளில் இடம்பெறும் இன முரண்பாடுகளுக்கான தீர்வுகள் குறித்து ஆராய்ந்து, பிரசித்தி பெற்ற **ArendLijphart** என்ற ஜேர்மானிய அரசியல் விஞ்ஞானியின் பார்வை மிகப்பொருத்தமானதாக தெரிகிறது.

**Lijphart** அவர்களின் ஆய்வில் புதிய பிராந்திய பிரிவுகளை கொண்ட இன குழுமங்கள் பிரதான ஒரு இன குழுமத்தின் மத்தியில் உருவாக்கப்படும் பொழுது மேலும் புதிய சமூக அதிருப்திகள் உருவாக வாய்ப்புகள் ஏற்படும். இதனால் மத்திய ஆட்சியின் ஆதிக்கத்தை தொடர்ந்து வைத்திருக்க வேண்டிய தேவை ஏற்படும்.

அதாவது, ஒரே மரபுவழி தொடர்பற்ற சமுதாயங்கள் காணப்படும் பிரதேசங்களில் பன்முகப்படுத்தப்பட்ட அரசியல் அதிகாரங்கள் மூலம் தீர்வுகாண முடியாது.

ஆக, குடியேற்றத் திட்டங்கள் மூலம் ஏற்கனவே மொழி ரீதியாக ஒரே மரபுவழித் தொடர்புகளைக் கொண்ட தமிழர் தாயகப் பகுதிகளை சிதைவடையச் செய்வது என்ற அரச திட்டத்துடன் பன்முகப்படுத்தப்பட்ட அதிகாரங்கள் இல்லாத புதிய அரசியல்யாப்பு மாற்றத்தை ஏற்றுக் கொண்டு செல்வது என்பது தேசியத்திற்கு எதிராக செயற்படுவது போலாகிறது.

**Lijphart** அவர்களின் பார்வையில் உள்நாட்டு யுத்தத்தின் பின்னால், ஆழமான பிரிவினையை கண்டு விட்ட சமுதாயங்களிடையில் அதிகாரப்பரவலாக்கல் மூலமே சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த முடியும். பெரும்பான்மை ஜனநாயகம் பல்லின சமுதாயத்திற்கு ஒருபோதும் ஏற்றதல்ல.

அதேவேளை சர்வதேச நாடுகளின் பார்வையில் தமிழினத்திற்கு உரிய பன்முகப்படுத்தப்பட்ட அரசியல் அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்பதில் நியாயத் தன்மை இருப்பதை மறுதலிக்க முடியாத நிலையிலேயே உள்ளனர்.

ஆனால் சர்வதேச மட்டத்தில் இராஜதந்திரிகள் மத்தியில் தமிழர்களின் வேணவா குறித்து தமிழ் அரசியல்வாதிகளே மிதமாக சொல்வதோ அல்லது வலியுறுத்திக் கூறாது விடுவதோ ஒரு வகையில் தேசிய அழிவுப் பாதை நோக்கிய செயற்பாடாகவே பார்க்கலாம்.

அரசியல் தலைவர்களும் சிந்தனையாளர்களும் இவ்வாறு மத்திய ஒற்றை ஆட்சியை ஏற்றுக் கொண்டு சர்வதேச நாடுகள் மத்தியில் ஏகோபித்த கருத்தை வெளியிடாது சிதைவுற்றுப் போகும் அரசியலை நடத்தி வர முனைவது அரசியல் அபிவிருத்திக்கு ஒருபோதும் ஏற்றதாகாது.

உதாரணத்திற்கு அரசியல் அபிவிருத்தியிலே எண்பதுகளிலும் தொண்ணூறுகளிலும் வன்முறை நிலைமையை சந்தித்த ஏனைய தேசங்களை இன்று எடுத்துநோக்கினால் கிழக்கு திமோர், கம்போடியா, சோமாலியா, ஆப்கானிஸ்தான், மசிடோனியா, கொசவோ, பொஸ்னியா ஆகிய அனைத்து தேசியங்களும் உள்ளூரிலே அரசியல் போட்டிகள் நிலவினாலும் தமது தேசியம் குறித்தும் அதன் தேவைகள் குறித்தும் மிகத்தெளிவாகவே உள்ளனர்.

இதனால் பாதிக்கப்பட்டுள்ள இனங்கள் கூட தமது ஒருமித்த குரல்களின் புலனாக அதிகாரப்பரவலாக்கலை தமது பக்கம் கையகப்படுத்துவதில் பிரதான கவனமாக இருக்கின்றனர். இங்கே அதிகாரப்பரவலாக்கலும் ஜனநாயகமும் ஒரே சம்மான பாதையில் செல்ல வேண்டும் என்ற நியதியை உருவாக்குவதில் கவனமாக செயற்பட்டுள்ளனர்.

இதன் பிரகாரம் பெரும்பான்மைவாத ஜனநாயகம் எதேச்சாதிகாரமே அன்றி அது ஜனநாயகமாக கருத முடியாது என்பது இனமுரண்பாடுகள் ஏற்பட்ட ஆசிய, ஆபிரிக்க , ஐரோப்பிய நாடுகளில் நசுக்கப்பட்ட இனங்களின் மத்தியில் இருக்க வேண்டிய கொள்கையாகும்.

இந்த நிலையிலே தமிழ் தலைவர்கள் மட்டும் தம்மத்தியிலே அகங்காரத்தையும் தன்னலப் போக்கையும் வளர்த்துக் கொண்டு மக்களின் அபிலாசைகளை பெரும்பான்மைவாதத்தின் கைகளில் விட்டு விடுவது நியாயமானது அல்ல.

ஆக, அரசியலில் அபிவிருத்தி அடைந்த நிலையை அடைய வேண்டுமானால் சர்வதேச தளத்தில் இருக்கக் கூடிய பொதுப்பண்பான யுத்தத்தின் பின்னான நிலைமாறுகால அரசியலில் தீர்வு தேடும் பிளவுபட்ட சமூகங்களிடையே அதிகாரப்பகிர்வு மட்டுமே ஒரே தீர்வாக இருக்க முடியும்.

பெரும்பான்மைவாத ஜனநாயகம் பொருத்தமற்றது. இதுவே மேலைத்தேய இராஜதந்திரிகளதும், சர்வதேச அரசுகளின் பொதுச்சேவை நிர்வாக அலுவலர்களதும் சமூகக்கல்வி ஆய்வாளர்களினதும் இறுக்கமான கருத்தாகும்.

இதற்கு ஏற்ப நிறுவன மயப்படுத்தப்பட்ட சமூக அரசியல் நகர்வுகள் முக்கியமானதாக தெரிகிறது. ஆனால் 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற பேரழிவின் பிற்பாடுகூட, இலங்கை அரசின் நகர்வுகளை திசை திருப்பும் வகையில் எந்த ஒரு சக்திமிக்க அமைப்பும் உருவாகவில்லை என்பது மிக வருத்தப்படக் கூடிய விடயமாகும்.

லோகன் பரமசாமி

# உடைவு உறுதி!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் எண்ணிக்கை மூன்றாகக் குறைவடைந்துள்ளது.

ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலகிய நிலையில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்.)யும் விலகியுள்ளது.

அதேவேளை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தான் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியுடன் இணைந்து போட்டியிடும் இறுதித் தேர்தல் என்று தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) அறிவித்துள்ளது.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) தொகுதிப் பங்கீட்டின் போது ஏற்பட்ட மனக்கசப்பு காரணமாக இனி தமிழ் அரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடும் வாய்ப்பை நாடாது என நம்பலாம்.

வடக்கு அரசியல் களம் இவ்வாறு இருக்கும் சூழ்நிலையில் தெற்கிலும் தேசிய கட்சிகளின் அரசியல் நகர்வுகள் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேனவுக்கு அக்கட்சியுடன் இணைந்து செயற்படுவதில் தர்மசங்கடமான நிலையேற்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்து அக்கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரான மைத்திரிபால, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார்.

மகிந்தவின் அமைச்சரவையில் அங்கம் வகித்தவர்கள் மைத்திரியை எதிர்த்து மகிந்தவுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்தனர்.

தற்போது இந்நிலை முற்றாக மாறியுள்ளது. மகிந்த, ஐ.தே.கவுடன் கூட்டுச் சேரவில்லை. ஆனால், கூட்டு எதிரணியை உருவாக்கி மைத்திரி அரசிற்கு எதிராகச் செயற்பட்டு வருகிறார்.

ஐ.தே.கவுடன் கூட்டுச் சேர்ந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிராகச் செயற்படுகிறார் என்று மைத்திரிக்கு எதிராக வசைபாடியவர்கள், ஆட்சி மாறியதும் அணிமாறி அமைச்சர்களாயினர்.

மைத்திரிக்கு ஆதரவளித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியுடன் உயர் அங்கீகாரமும் கிடைத்தது.

நோய்வாய்ப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனை, நிறைவேற்று ஜனாதிபதியாக 10 ஆண்டுகள் ஆட்சி செய்த மகிந்த ராஜபக்ஷ, தனது மகன் நாமலுடன் நேரில் சென்று நலம் விசாரித்தார்.

எதிர்கால அரசியலுக்காக சம்பந்தனை மகிந்த சந்திக்கவில்லை; மனிதாபிமான அடிப்படையில் சந்தித்தார் என்று கூறப்பட்டாலும் எதிர்காலத்தில் மகிந்தவுடன் சம்பந்தன் இணைய வாய்ப்பில்லை என்று இப்போது கூறமுடியாது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியோ தனித்து ஆட்சி அமைக்க முடியாத தற்போதைய இக்கட்டான சூழ்நிலைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முக்கிய காரணம்.

ஏனெனில், இணைந்து செயற்படவும் முடியாது. தனித்து ஆட்சி அமைக்கவும் முடியாது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டையும் மாற்றமுடியாது இரண்டு கட்சிகளும் முரண்பட்டுக் கொண்டிருக்கின்றன.

மகிந்தவின் ஆட்சியைக் கவிழ்க்க மைத்திரியை களமிறக்கிய ஐ.தே.க. தற்போது மைத்திரியால் கவிழும் நிலையில் உள்ளது.

ஊழல், மோசடிகள் இல்லாத தூய்மையான அரசியலை உருவாக்க வேண்டும் என்பதே தனது இலக்கு எனவும் இதற்கான நடவடிக்கைகளின் போது தனது வாளுக்குள் சிக்கப்போவது யார் என்பது தெரியாது எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எச்சரித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் செயற்றிட்டங்கள் வெளியீட்டு நிகழ்வு கடந்த 28 ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது. இதன்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு எச்சரித்தார்.

உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்பாக ஐக்கிய தேசியக் கட்சியினர் மீது அதிரடி நடவடிக்கை எடுத்தால் மகிந்தவின் ஆதரவுடன் தேர்தலில் போட்டியிடும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியலுக்கும் வேட்டு வைக்கலாம் என்று ஜனாதிபதி கருதுவதால் ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கும் அதிரடி நடவடிக்கையில் இறங்கியுள்ளார்.

ஆக, உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் வடக்கு அரசியலிலும் தெற்கு அரசியலிலும் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தப் போவதை யாரும் தடுக்க முடியாது.

மத்திய அரசுடன் இணங்கிச் செயற்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தத் தேர்தலில் வெற்றிபெற்றால் வடக்கு மக்கள் தமது அரசியல் நிலைப்பாட்டை ஆதரிக்கின்றனர் எனவும் தமது தற்போதைய அரசியல் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படாது எனவும் அக்கட்சியினர் உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்துவர்.



> உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்பாக ஐக்கிய தேசியக் கட்சியினர் மீது அதிரடி நடவடிக்கை எடுத்தால் மகிந்தவின் ஆதரவுடன் தேர்தலில் போட்டியிடும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியலுக்கும் வேட்டு வைக்கலாம் என்று ஜனாதிபதி கருதுவதால் ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கும் அதிரடி நடவடிக்கையில் இறங்கியுள்ளார்.

தேர்தலில் தோல்வி ஏற்படுமானால் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை இரா.சம்பந்தன் இராஜினாமா செய்யும் நிலைகூட ஏற்படலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், எதிர்க்கட்சித் தலைவராக பதவி வகிக்கின்ற போதும் ஆளும் தரப்பிற்கு ஆதரவாகவே உள்ளார்.

அதேவேளை தமது கட்சியினருக்கும் ஆளும் தரப்பிற்கு ஆதரவான நிலைப்பாட்டை மாற்ற வேண்டாம் என்றும் அறிவுறுத்தி வருகிறார்.



வரவு- செலவுத் திட்டம், அமைச்சர்களுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள், பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட போது ஆட்சியில் அங்கம் வகிக்கும் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பின்னுக்குத் தள்ளி (ஐ.தே.கவுக்கு) அரசிற்கு ஆதரவளித்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

மைத்திரி - ரணில் தலைமையிலான இந்த அரசு தொடர்ந்து ஆட்சி நடத்த வேண்டும் என்பதில் ஐ.தே.க.- சு.கவுக்கு இல்லாத அக்கறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உள்ளது என்று கூறுமளவிற்கு அரசிற்கான ஆதரவை நல்கி வருகிறது.

அதேவேளை புதிய அரசியலமைப்பு உருவாக்கத்திலும் அதிக அக்கறை காட்டிவருகிறது.

புதிய அரசியலமைப்பின் இடைக்கால அறிக்கையை தோதல் விஞ்ஞாபனமாகப் பயன்படுத்தி அதன் ஊடாக ஆதரவைப் பெறும் முயற்சியிலும் அக்கட்சியினர் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கான அறிவுரையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் வழங்கியுள்ளார்.

யாழில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அக்கட்சியின் வேட்பாளர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டத்தின் போதே இவ்வாறு கூறியுள்ளார்.

புதிய அரசியலமைப்பின் இடைக்கால அறிக்கையை தமிழர்கள் முற்றாக நிராகரித்துள்ள நிலையில் அதையே தேர்தல் விஞ்ஞாபன அறிக்கை போன்று தமிழ்க் கூட்டமைப்பு முன்வைத்துள்ளது.

வடக்கு அரசியலில் தவிர்க்க முடியாத சக்தியாக உருவெடுத்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்காலத்தை தீர்மானிக்கப் போவதைப் போன்றே, தெற்கில் நல்லாட்சியின் எதிர்காலத்தையும் உள்ளூராட்சித் தேர்தல் தீர்மானிக்கப் போகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி அதிக இடங்களில் வெற்றிபெற்றால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவிக்கு ஆபத்து நேரிடும்.

அதேவேளை மகிந்த அணி வெற்றிபெற்றால் ஆட்சிக்கே ஆபத்து நேரிடும்.

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியது அல்ல.


இருப்பினும் ஆட்சி அதிகாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் களமாக நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தல் உருவெடுத்துள்ளது.

**எஸ்.ஆர்.கரன்**




ஹாய் குட்டீஸ்!
எமது சிறுவர் அரங்கம் பகுதியில் உங்கள் ஆக்கங்கள் இடம்பெற வேண்டும் என்றால் உங்கள் சுய ஆக்கங்களை அனுப்பி வையுங்கள்.

## ஏமாந்த சிறுத்தை



ஒரு நாள் சிறுத்தை பசியுடன் உணவைத் தேடியது. அப்போது ஒரு கறுப்பு மானையும் புள்ளி மானையும் கண்டது.


அவை இரண்டும் மலையடிவாரத்தில் மேய்ந்து கொண்டிருந்தன. சிறுத்தை மிகுந்த எச்சரிக்கையுடன் மலையடிவாரத்தருகே சென்றது. ஆனால் எதனைத்தாக்குவது என அது முடிவு செய்யவில்லை.

அதேநேரத்தில் சிறுத்தையைப் பார்த்த மான்கள் இரண்டும் வேகமாக ஓடின. பிறகு அவை இரண்டும் ஒரு இடத்தில் இடது வலது பாதைகளில் ஓடின.

சிறுத்தை அந்த இடத்துக்கு வந்தது. 'எதைத் துரத்தலாம்' என்று தயங்கி நின்றது. பிறகு, 'சரி.. கறுப்பு மானைத் துரத்தலாம். அதன் இறைச்சிதான் சுவையாக இருக்கும்' என்று முடிவு செய்து கறுப்பு மானைத் துரத்தத் தொடங்கியது. ஆனால் அதற்குள் அது தொலை தூரம் ஓடிப் போய் விட்டது. உடனே சிறுத்தை "அது வேகமாக ஓடக் கூடிய மான். அதைப் பிடிக்க முடியாது. பசி வேறு அதிகமாகி விட்டது. சரி. புள்ளி மானைப் பிடிக்கலாம்" என்று தீர்மானித்து மற்ற பாதையில்ஓடியது. ஆனால் புள்ளிமான் எப்போதோ பஞ்சாய்ப் பறந்துவிட்டிருந்தது.

**நீதி : இதுதான் சொல்லுறது இருக்கிறதை விட்டிட்டு பறக்கிறதுக்கு ஆசைப்படக்கூடாது.**

மறைந்திருக்கும் உருவத்தைக் கண்டுபிடிப்போமா?



## பொது அறிவு

1. புகைப்பிடித்தால் என்ன நோய் வரும்?
புற்றுநோய்

2. புகைக்கும் பொருட்கள் எதனால் செய்யப்படுகிறது?
புகையிலை

3. உலகில் உள்ள பறவைகளில் மிகப் பெரியது எது?
தீக்கோழி

4. தொலைக்காட்சி எந்த ஆண்டு கண்டுப்பிடிக்கப் பட்டது?
1930

5. மாம்பழத்திற்கு புகழ்பெற்ற நகரம்?
சேலம்

6. தேனீக்களில் எத்தனை பிரிவுகள் உள்ளன?
3 (இராணித் தேனீ, ஆண் தேனீ, வேலைக்காரத் தேனீ)

7. புவியில் காணப்படும் நீரில் கடல் நீரின் அளவு?
97.3%

8. யோகா முறையின் தந்தை என்றழைக்கப்படுபவர்?
பதஞ்சலி முனிவர்

9. தீக்குச்சி தயாரிக்கப் பயன்படும் மரம்?
பைன்

10. கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் மிக உயரிய போட்டி?
விம்பிள்டன்

## விடுகதைகள்

1) குண்டு முழி ராசாவிற்கு குடலெல்லாம்பல். அது என்ன?

2) ஊசி நுழையாத கிணற்றில் ஒரு ஆழாக்கு தண்ணீர். அது என்ன?

3) உயரப்பறக்கும். ஊன்றுகோலில்நிற்கும். அது என்ன?

4) நடைக்கு உவமை, நளனின்தூதுவன். அது என்ன?

5) மூடிய அரங்குக்குள் முத்துச்சிப்பிகள். அது என்ன?

6) திரவமாகப் பிறந்தான். புகையாய் மறைந்தான். அது என்ன?

7) இருட்டு வீட்டில் முரட்டுச் சிப்பாய். அது என்ன?


8) பகலில் துயிலுவான், இரவில் அலறுவான். அது என்ன?

9) பாடத் தெரிந்தவனுக்கு ஆடத் தெரியாது. ஆடத்தெரிந்தவனுக்குப்பாடத் தெரியாது. அது என்ன?

10) பதுக்கி வைத்த முத்துக்கள் எங்கே. பவள வாய் திறந்து பார்ப்போமா?. அது என்ன?


**விடைகள்:**
1) மாதுளம் பழம் 2) இளநீர் 3) கொடி
4) அன்னம் 5) வாய், பற்கள்
6) பெற்றோல் 7) பூட்டு
8) ஆந்தை 9) மயில், குயில்
10) பற்கள்

## சகாரா பாலைவனம்



சகாரா அல்லது சஹாரா பாலைவனம் என்பது ஆபிரிக்காவின் வடபகுதியில் அமைந்துள்ள உலகின் மிகப் பெரிய சுடு பாலைவனம் ஆகும். குளிர் பனிப் பாலை நிலமாக அண்டார்ட்டிக்காவைக் கொண்டால் சகாரா பாலைவனம் இரண்டாவது மிகப் பெரிய பாலைவனம் ஆகும். இதன் பரப்பளவு 9,000,000 சதுர கிலோமீற்றர்களாகும் (3,500,000 சதுர மைல்கள்). இப்பரப்பானது ஏறத்தாழ ஐக்கிய அமெரிக்க நாடுகளின் அளவுக்கு பெரியதாகும். இப்பாலைவனம் மத்திய தரைக்கடல் கடற்கரையின் வளமான பகுதிகள், மக்ரேபின் அட்லஸ் மலைகள், எகிப்து மற்றும் சூடானில் உள்ள நைல் ஆற்றுப் பள்ளத்தாக்கு ஆகியவற்றில் வளமான பகுதியைத் தவிர்த்து, வட ஆபிரிக்காவின் பெரும்பகுதியைக் கொண்டுள்ளது. இது கிழக்கில் செங்கடலில் இருந்து நீண்டும், வடக்கே மத்திய தரைக்கடலும், மேற்கில் அட்லாண்டிக் பெருங்கடலையும் எல்லைகளாக கொண்டு, இதன் நிலப்பரப்பு கடற்கரையை நோக்கிச் செல்லச்செல்ல படிப்படியாக பாலைவனத்திலிருந்து கடலோர சமவெளியாக மாறுகிறது. தெற்கில், இது நைல் நதி பள்ளத்தாக்கு மற்றும் ஆபிரிக்காவின் துணை சகாராவின் வெப்பமான பகுதிக்கு அருகிலுள்ள அரைப் பாலைவன வெப்பமண்டல சவன்னாவை பட்டாயாச சுற்றியுள்ளது. சகாராவை மேற்கு சஹாரா, நடு அஹாகர் மலைகள், திபெஸ்டிக் மலைகள், ஏய்ர் மலைகள், டெனெரெ பாலைவனம், லிபிய பாலைவனம் போன்ற பல பிரதேசங்களாக பிரிக்கலாம். இப்பாலைவனம் ஏறத்தாழ 2.5 மில்லியன் ஆண்டு பழைமை வாய்ந்தது. அதற்கு முன் இங்கே ஏரிகளும் ஆறுகளும் இருந்தன. இப்பாலைவனம் செங்கடலில் ஆரம்பித்து நடுநிலக் கடற்பகுதி, அத்திலாந்திக்குப் பெருங்கடல் ஆகிய நீர்ப்பரப்புக்களை இணைக்கின்றது. இங்குள்ள சில மணற் குன்றுகள் கிட்டத்தட்ட 180மீ. உயரம் வரை இருக்கும்.







# வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்)
021 567 1532



## முற்றவெளியில் தேரரின் உடல் எரித்தது பற்றி?

## தேர்தல் பிரசாரத்திற்கு தமிழ் தலைமை எப்படி வீடு தேடி வரப்போகிறது?

## முதலமைச்சரை எதிர்ப்பவர்கள் பற்றி?

**கலை — மருசுவில்**

ஒரு ஊரில் ஒரு பாட்டி இருந்தாவாம்...? மிகுதியைச் சொல்லுங்கள்?

ஒரு ஊரில் ஒரு கட்சி இருந்துதாம். அவயள் எல்லாருமாச் சேர்ந்து உப்புச் சப்பு இல்லாத ஒரு வடை சுட்டினமாம். சுட்ட வடையை ஊர் ஊராக கொண்டு திரிஞ்சு இதுதான் வடை. இந்த வடைக்குள்ள தரமான உழுந்து, நாங் களே விதச்ச வெங்காயம், மிளகாய், எங்கட கடல்ல விளஞ்ச உப்பு எல்லாம் சேத்திருக் கிறம். அத்தோட இதை அதிதிறம் எண்ணெ யில பொரிச்செடுத்திருக்கிறம் எண்டு தம்பட்டம் அடிச்சிச்சினமாம்.

(ஆனா அந்த வடையில ஒண்டுமில்லை யெண்டு அவர்களுக்கு நல்லாத் தெரியுமாம். இந்த ஒண்டுமில்லாத வடையைக் கூட அவங்களுக்குக் கொடுக்கக் கூடாது எண்டு நரிகள் கூச்சல் போட்டுதாம்)
இப்பவும் இவர்கள் வாயால வடை சுட்டுக் கொண்டே இருக்கினமாம். (யாவும் கற்பனை)

**தயா — இணுவில்**

யாருக்காவது எங்கள் கொள்கையை மாற்றலாமா?

நல்லது நடக்கும் என்றால் மாறுவதில் தவறில்லை. நமக்குமட்டும் நல்லது நடக்கும் என்பதற்காக மாறியதால் தானே தமிழினம் இந்தப் பாடுபடுகிறது.

**மதுசுதன் — கல்வயல்**

ஜோக் ஒன்று சொல்லுங்கள்?

மனைவி கேட்டாள். என்னங்க நான் திருமணத்தன்று என்ன கலர் புடைவை கட்டினேன் சொல்லுங்கள் பார்ப்போம். கணவன் சொல்கிறான் தற்கொலை செய்ய ரெயின் தண்டவாளத்தில படுத்திருக்கும் போது என்ன கலர் ரயில் வருதுன்னு பார்க்க முடியுமா?

**சயன் — யாழ்ப்பாணம்**

முதலமைச்சரை எதிர்ப்பவர்கள் பற்றி?

வடிவேல் ஒரு திரைப்படத்தில் சொல்லுவார் புள்ளைப்பூச்சிக்கெல்லாம் கொடுக்கு முளைக்கும் என்று நான் கனவாடா கண்டேன் என...

**சத்தியா — மந்துவில்**

அறிவுக்கும் திறமைக்கும் என்ன வித்தியாசம்?

மனைவியை அழகி என்று சொல்வது அறிவு. அதையே பத்து வருடங்கள் கழிந்த பின்பும் சொல்லுவது திறமை.

**அனி — யாழ்ப்பாணம்**

உங்கள் மனைவியின் பிறந்தநாள் நினைவிருக்கிறதா?

சும்மா இருங்கள். நேற்றுத்தான் என் திருமண நாளை மறந்து வாங்கிக் கட்டி விட்டு இருக்கிறேன். அதற்குள் அடுத்த ஆப்பு வைக்காதீர்கள்.

**தர்சன் — யாழ்ப்பாணம்**

உங்களுக்குப் பிடித்த தமிழ் அரசியல்வாதி?

அச்சமின்றி, கூச்சமின்றி துணிந்து சொல்லுவேன் முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள். அப்படிச் சொல்வதற்கு ஒருவரேனும் இருக்கிறாரே என்று எண்ணி பெருமை கொள்கின்றேன்.

**நிசான் — வல்வெட்டித்துறை**

சம்பந்தனை மகிந்த சந்தித்தாரே?

ஒரு படத்தின் ஹீரோவும் வில்லனும் படப்பிடிப்பிற்காக அடிபடுவார்கள். அது முடிந்ததும் அணைத்துக்கொண்டு தேநீர் குடிப்பார்கள். அது போலத்தான் இதுவும். என்ன இருந்தாலும் ஐயாவின் பால்ய சிநேகிதர் அல்லவா!




**மீரா — விசுவமடு**

கல்லும் கண்ணாடியும் சந்தித்தால்?

இந்தக் கல் இருக்கிறதே அதற்கு கண்ணாடிகளிடம் தான் தன் வீரத்தைக்காட்ட முடியும். அதே வீரத்தை மடத்தல்களிடம் காட்டமுடியாது. அப்படிக்காட்டினாலும் அந்த வீரம் நிலைக்காது. எந்தப் பெரிய வீரன் என்றாலும் யாரிடமாவது தோற்றே ஆவான்.

**ஜீபா — கரவெட்டி**

தேர்தல் பிரசாரத்திற்கு தமிழ் தலைமை எப்படி வீடு தேடி வரப்போகிறது?

சூடு சுரணை இருந்திருந்தால் அவர்களால் மாட மாளிகைகள் கட்டவோ சொகுசு கார்கள் வாங்கவோ முடிந்திருக்குமா?

நீங்கள் என்ன சொன்னாலும் அது எருமையில பெய்த மழைபோல். உதறி எறிந்துவிட்டு வருவார்கள்.

**நந்தகுமார் — மானிப்பாய்**

அனைவரும ஒன்றுபடுங்கள் என எம் அரசியல் தலைவர்கள் சொல்கிறார்களே?

இது ஒரு பகிடிதான். ஆனால் இதைவிடப் பெரும் பகிடி நேற்று முன்தினம் நடந்த கூட்டமொன்றில் எங்களுக்குள் நடக்கும் சண்டை குடும்பச் சண்டை போன்றது எனக் கூறியது தான்.
குடும்பச் சண்டை என்றால் அது நான்கு சுவருக்குள் நடக்க வேண்டியது. அதை நடுவீதியில் நடத்தி விட்டு குடும்பச் சண்டை எண்டு சொல்லி பயனேதும் வந்து விடப் போகிறதா? எல்லாம் கடவுளுக்குத்தான் வெளிச்சம்.

**தீபன் — பருத்தித்துறை**

முற்றவெளியில் தேரரின் உடல் எரித்தது பற்றி?

கிழக்கில் ஒரு பொது இடத்தில் இந்து, கிறிஸ்தவ அல்லது முஸ்லிம் மதத்தலைவரின் உடலை எரிக்க அனுமதி தரட்டும். அதன் பின் இதைப் பற்றி பேசுவோம்.

**மீரோன் — மன்னார்**

அரசியல்வாதிகள் மக்களை ஏமாற்றுகின்றனரா?

ஒருவர் ஒரு தவறு செய்யும் போது கையும் களவுமாக பிடிபட்டால்கூட அவனது குற்றம் நிரூபிக்கும் வரை அவன் சந்தேக நபரே. ஆதலால் இவர்களை ஏமாற்றுக்காரர் என்று சொல்லக் கூடாது. இவர்கள் சந்தேக நபர்கள்.

**சுதன் — குப்பிளான்**

கூட்டமைப்பு பதியப்பட்டிருந்தால் தீர்வு கிடைத்திருக்குமா?

தமிழரசுக்கட்சி இந்த ஆட்டம் ஆடாது.

**நிலாஜினி — சுழிபுரம்**

வெல்லப்போவது யார்?

தமிழ் மக்களின் தலைகளை தாங்கள் நலனுக்காக அடகு வைப்பவர்கள் வெல்வார்களாக இருந்தால் இனித் தமிழரின் நிலை கவலைக்கிடம்தான்.

தந்தை செல்வா சொன்னார் தமிழனை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று.

வியாசர் சொல்கிறேன் கடவுளாலும் காப்பாற்ற முடியாது. அவ்வளவுதான்.

**புவனா — வரணி**

பெண்கள் ஆண்களை சீதனம் கொடுத்து வாங்குகிறார்களே?

பெண்கள் ஆண்களை விலைக்கு வாங்குவதில்லை. ஆண்களால்தான் பெண்களிடம் லஞ்சம் வாங்கப்படுகிறது. தாலி கட்ட கூலி கேட்கிறார்கள்.




## மூதேவி மனிதர்

பார் பிழைத்த பூமியிலே
ஏர் பிடிக்க ஆளில்லை
தேர் இழுக்கும் கூட்டமொன்று
தெருத் தெருவாய்த் திரிகிறது

ஊரழைத்து உறவழைத்து
உலகெங்கும் தானழைத்து
பேரெடுத்த கூட்டமொன்று
பெருமை கொள்ளும் நாளிது

பாதாளம் வரை பாயும்
பணமூடை சுமந்தவர்கள்
பாவாடை கட்டியபடி
பவனி வரும் காட்சி பாரீர்

வேதாளக் கதைபோல
மீண்டும் முருங்கையிலே
மூதேவிகள் ஏறி நிற்க
சீதேவி எப்படி வரும்?

பாவிகள்தான் நாம் பரமனே!
நோகாமல் நொங்கு குடிக்க
ஒரு பெரும் கூட்டம்
வீடு தேடி வருகிறது...

கரடியைப் பிடித்த கதைபோல
விட்டுவிட்டோம் கையை
அது நம்மை விடுவதாயில்லை

இனியென்ன...?
மீண்டும் தொடங்கும் மிடுக்குப்போக
மீண்டும் வீட்டில் முடங்கிவிடும்
மூதேவி மனிதர் நாம்

**மாவை. நா.கஜேந்திரன்**

## தேர்தல் திருவிழா

தேர்தல் திருவிழா
திருந்தாத மனிதர்களின்
பெருவிழா
திக்கெட்டும் பொய் பரப்பி
திரிந்திடுவார் திரைமெல்லாம்
செய்யாததையும் செய்ததாய்
காட்டிடுவார்
வாக்குக்காய் வஞ்சனைகள்
செய்திடுவார்
செய்ய இயலாததையும்
செய்யப் போவதாய்
பிதற்றிடுவார்
திருவிழாக் கடைகளாய்
இவர்கள் முகம்
ஓடியே மறைந்திடும்

**மதிதீ**
**அளவெட்டி**

## நல்லது விளையாட்டு

அம்மா பாடுவது "தாலாட்டு"
அடுத்தவர்க்கு மகிழ்வுதரும் "பாட்டு"
அப்புக்காத்து போடுவது "கோட்டு"
அண்டினோர்க்கு வையாதே "வேட்டு"
வாழும்போதே நல்லதைச் செய்து "காட்டு"
வயது போனால் தேய்ந்து போகும் "மூட்டு"
வீட்டைப் பாதுகாக்கும் "பூட்டு"
வீதியோரங்களில் மரங்களை "நாட்டு"
தேர்தல் வருகுது போடவேணும் "ஓட்டு"
திருந்திவாழ்பவனுக்கு இல்லை "மாட்டு"
எதற்கும் சொல்லாதே "சாட்டு"
எப்போதும் வாங்காதே "கையூட்டு"
குழந்தைக்கு நல்லபெயர் "சூட்டு"
கூடாதோரிடம் வையாதே "கூட்டு"
வட்டிக்குப் பணம் கொடுப்பான் "சேட்டு"
வாழவேண்டும் சங்கீதம் "கேட்டு"
ஆராரோ பாடிப்பிள்ளையை "ஆராட்டு"
அவனை தொட்டிலிட்டுச் "சீராட்டு"
நல்லவற்றை எப்போதும் "பாராட்டு"
நம் உடலுக்கு நல்லது " விளையாட்டு"

**கந்தபேரின்பம்**
**தீவான்**

## வருகிறார் வேட்பாளர்!

வருகிறார் வேட்பாளர்...!
வாயெல்லாம் பற்களாய்...!
வாழ்த்துகிறோம் நாமவரை
வாழவைக்க வேண்டுமென...
வாக்குப்பிச்சை வாங்கும்படலம்
தேர்தல் நதியைக் கடக்கும் வரைக்கும்...!
ஆற்றைக் கடந்தால் நீ யார்? நான் யார்?
தோற்ற இனமாய் தொடரும் சோகம்
அத்தனை பிள்ளைக்கும் அயல்நாட்டில் கல்வி
சொத்துக்கள் வாங்கி சொர்க்கபுரி வாழ்வு
நல்லாட்சியே நடக்கிறதாகவே
நாடெங்குமோடி நயம்படவுரைப்பார்
விதவைகள் வாழ்வு வினாக்களாய் தொடர...
சிறைகள் தோறும் இளமைகள் வேக...
ஈழமை நீறென அருந்துதல் தொடர...
வாழ்ந்த மண்ணினைக் கனவிலே காண...
மீண்டுமொரு தேர்தல் அறிவிப்பாலே
மீண்டு வருவார் வேட்பாளர்...!
வாயெல்லாம் பற்களாய் வணங்கும்வரை
வாழ்த்துவோம் நாமே! தமிழின் பெயராலே...

**இரா.ஜெயக்குமார்**



## குழம்பி நிற்கின்றது தமிழர் நெஞ்சங்கள்

குறுக்கு வழியில் அரசியலில்
பதவி பெற்று...
நிலைத்து வாழ நினைப்போரே!
உங்கள் தவறுகள் தெரிந்தும்
தெரியாதது போல்...
களத்தில் இறக்கிவிட்ட
எமது அரசியல் தலைமைகளை
என்னென்று சொல்வது...
அரசியலில் குத்துவெட்டுக்கள்
சகஜமென்று மனதிற்குள்
திருப்தியடைவோரே...!
நீங்கள் சமூகத்தில் செய்கின்ற
பாவச் செயல்களுக்கு
பட்டியலிட்டு உங்கள்
முகத்திரையைக் கிழிப்பதற்கு
இளையோர் கூட்டமொன்று
களத்தில் இறங்குவது
காலத்தின் தேவையென்பதை
என்றுதான்
உணரப் போகிறார்களோ...
என்பதைப் புரியாது
குழம்பி நிற்கின்றது
தமிழர் நெஞ்சங்கள்...

**வ.ச.செல்வராசா**
**திருநாவலூர்**

# மௌனத்தின் தேடல்- 383

## வேசம் கலைந்த வேடதாரி

அரசியல் களமதனில்
அபேட்சகராய் போட்டியிட்டு
எம் வாக்குகளைப்
பெறுவதற்காய்
உம் வாக்குறுதிகளை
அள்ளி வீசுகின்ற பிரமுகரே!
வெள்ளை உடைதனில் நீர்
புள்ளியிடத் தூண்டிவிட்டு
வெற்றிபெற்ற அதே கணம்
வேறு திசையில் பயணிக்கிறீர்
வேசம் கலைந்த வேடதாரியாய்..

**பீ.மேரிசிந்துஜா**
**மிருசுவில்**

## கிளிக்கூண்டு

ஓர் சுதந்திர
தடைப்பொருளான
கிளிக்கூண்டிற்கா
இவ்வளவு நிறப்பூச்சு
ஆஹா!
ஏன் இந்தக் கொலைவெறி
எஜமானே
இதன் பாவவினை
யாவனவும் உன்னோடே
இதற்காக நிந்தித்திருக்கும்
உன் மனதை இத்தோடே
விட்டு விடு

**நி.தனுசன்**
**அல்லாரை**

## ஊரும் உறவும்

வண்ணம் தீட்டி வரையும் ஓவியம்
வடிவமைத்துக் காட்டுது
வளையும் கூட்டினை
குருவி கலைந்து போனது
கூடு இங்கே வாடுது
வாழ்வு கலைந்து
வாடும் மனிதர்போல
எழுதிடும் ஓவியம்
எமக்குரைத்திடும் பாடம்
உனக்குள்ளே நீ
உறுதியை வளர்த்திடு
உடையும் தடை யாவும்
ஊரும் உறவும் நலமாகும்

**சி.திவ்வியா**
**யா.ப.மெ.ம.வி.**

## வரையறை

ஒரு காகிதத்தில்
வர்ணம் வரைவதற்கே
வரையறை வைத்த இறைவன்-இன்று
மானிட வாழ்விலே- இவ்
வரையறையை அழித்துவிட்டானே
மனிதனுக்கு பணத்தின் மீது ஆசை
அதை உழைத்துப் பெறுவதில்லை
பதவிமீது ஆசை அதை
படித்துப் பெறுவதில்லை
படித்தவன் இன்று தெருவில்
வியர்வை சிந்தி
உழைத்தவன் வறுமையில்
ஏன் இப்படி?
ஓ இறைவா!
அந்தோ பரிதாபம்
மனித வாழ்வின் வரையறையை
நேர்த்தியாக்க இனியாவது உன்
நெற்றிக் கண்களைத்
திறந்திடுவாய்

**அ.அகிலன், கரவெட்டி**

## வர்ணக்கூண்டு

கூண்டிற்கு வர்ணம்
தீட்டுகிறார் பெரியவர்
இந்தக் கூண்டுக்குள்
அகப்பட்டு அவஸ்தைப்படப்
போகிறவர் யாரோ?
கூண்டிற்கு வெளியில் நின்று
வேடிக்கை பார்க்கலாமா?
சிறகு முளைத்த
பறவையென
பறந்து திரியலாம்
சுதந்திரக் காற்றைச்
சுவாசிக்கலாம்
ஐயகோ!
வர்ணக்கூண்டு
அழைக்கிறதா?
ஜாக்கிரதையாய்
செயற்படுவோம்

**அபி குலமாலிகா**
**சங்கானை**

# மௌனத்தின் தேடல் -384



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.


எனும் முகவரிக்கு 03.01.2018 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

ம.நிரேஸ்குமார்

சிறுகதை



# மரணித்துப்போகும் மனிதங்கள்

வாழும் காலத்தில் எதையாவது சாதிக்க வேண்டும். நாம் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் நிலைத்திருக்க வேண்டுமென்ற இலட்சியத்துடன் உடலை வருத்திக் கடமைகளைச் செய்கின்ற வேளையில், எம்மையும் தமது கூட்டத்துடன் சேர்ப்பதற்கான முயற்சியாய் பல் விதமான கட்டுக் கதைகளையும் பொய்ப் பிரசாரங்களையும் அவிழ்த்து விடுகின்ற 'நண்பர்களை' நண்பர்களாகப் பெறுவதென்பது வாழ்க்கையின் ஒரு வகையான சாபக்கேடு. வாழ்க்கையின் முன்னால் நாம் போடுகின்ற கணக்கின் தோல்வி.

இன்றும்கூட அவ்வாறான ஒரு கணக்கின் தோல்விதான் நெருக்கடியான பேருந்தினுள் தொங்கிக் கொண்டு பிரயாணம் செய்யக் காரணமாக அமைந்தது. ஒரு கையில் சூட்கேசுடன்...மற்றைய கையை எங்காவது பிடித்துவிடும் என் முயற்சியும் வெற்றியளிக்கவில்லை.

கடமை நிமித்தம் பாடசாலைகளுக்குச் செல்லுகின்ற வேளைகளில் ஒரு நாளேனும் நெருக்கடியென நினைத்து பேருந்தினுள் ஏறாமல் விடுவதில்லை. யாரேனும் ஒரு ஆசிரியரோ, மாணவனோ அல்லது ஏதேனுமொரு பாடசாலைக்கு அண்மையில், என்னைக் கண்டிருந்த ஒருவரோ எனக்கொரு ஆசனம் தருவார் என்ற நம்பிக்கைதான் அதற்குக் காரணம். என்னுடைய நம்பிக்கை இன்றைய நாளில்தான் முதல் முறையாக பொய்த்துப் போயுள்ளது.

ஒரு மணி நேரம் நின்றவாறு பிரயாணம் செய்ய முடியாத அளவிற்கு நான் ஒன்றும் வயதானவனோ அல்லது பலவீனமானவனோ அல்ல.

மனைவி எப்படித்தான் சுவையாகச் சமைத்தாலும் 'அம்மா சமைக்கிற கறி போல இல்லை' என்று அவளைச் சீண்டிச் சீண்டி சாப்பிட்ட சாப்பாடு, அம்மாவின் கையால் சாப்பிடுகின்ற இட்லி, தோசை, -கோழி இறைச்சி சமைத்தால்- பின்னேரம் 4 மணிக்கு திரும்பவும் ஒரு சாப்பாடு... இவையெல்லாவற்றையும் இரண்டு வருடங்களாக இழந்து உடம்பு இளைத்து விட்டது.

"சேர் டை அடிக்கிறதுதானே"

சிகையலங்கரிப்பாளர் ஒவ்வொரு மாதமும் மறந்தவர் போலக் கேட்கத் தவறுவதில்லை.

"இல்லை... வேண்டாம்... பதினாறு வயதிலேயே நரைத்துவிட்டது... பழகிவிட்டது"

நானும் தொடர்ந்து அதே பதிலைத்தான் சொல்லி வருகிறேன்.

"அம்மாவுக்குத் தலைமுடி நரைக்கேல... அப்பாவுக்குத்தான் நரைச்சுப் போச்சு" என் செல்ல மகனின் ஏக்கத்தைப் போக்குவதற்காக 'டை அடித்தால் என்ன?' என்ற எண்ணம் சில வேளைகளில் தோன்றுவதும் உண்டு.

வயதான தோற்றத்தை நான் விரும்பி ஏற்றுக்கொள்வதற்கு காரணமும் இல்லாமல் இல்லை. என் ஆசிரியப் பயிலுநர்கள் அனைவரும் 19 தொடக்கம் 23 வயதிற்கு இடைப்பட்டவர்கள். மதில் மேல் பூனை வயதுடையவர்கள்! கிணற்றுக் கட்டின் மீது நடக்கும் சாகசக்காரர்கள்!!

ஒரு ஆசிரியருக்கும் மாணவர்களுக்குமான உறவு, ஒரு தாய்க்கும் மகனுக்குமான உறவு என்பதை வலுவாக நம்புபவன் நான். அதனால்தானோ என்னவோ என் பணியின் காத்திரத்தை மேற்சொன்ன என் நண்பர்களால் குறைக்கவும் முடிவதில்லை.

"பொம்பிளைப் பிள்ளைகளுடன் பழகும் போது, உங்கள் மனம் ஒரு நாளும் தடுமாறியது கிடையாதா? அவர்களை 'வேறு மாதிரியான' எண்ணத்துடன் ஒரு நாள் கூடப் பார்த்தது கிடையாதா?"

என் நண்பர் ஒருவர் நேரடியாகவே கேட்டார்... நான் திகைத்துத் தடுமாறக் கூடுமென்றே அவர் நினைத்திருக்கக் கூடும். ஆனால் என் பதிலால் அவர்தான் திக்குமுக்காடிப் போனார்.

"நாம் வணங்குகின்ற தெய்வங்களில் பெண் தெய்வங்கள்தான் அதிகம். லக்சுமி, சரஸ்வதி, துர்க்கை, பராசக்தி, காளி, பார்வதி... இப்படி எத்தனையோ பெண் தெய்வங்கள்..

ஆனால் எந்தவொரு மனிதனும் அப்பெண் தெய்வங்களின் ஆடைகளை அகற்றி... கற்பனை செய்து பார்ப்பதில்லையல்லவா? அது போலத்தான் எனக்கு என் பெண் மாணவிகள்"

இந்தப் பதிலால் யார்தான் திகைத்துப் போகமாட்டார்கள்?

"அது ஏன்ன தாய்க்கும் மகனுக்குமான உறவு? தந்தைக்கும் மகளுக்குமான உறவு என்று சொல்லலாமே?" இது இன்னொரு நண்பனின் கேள்வி. அதற்கும் பதில் என்னிடம் தயாரா கவே இருந்தது.

"மகளைத்தவ றாக நடத்துகின்ற தகப்பன்மாரும் இருக்கத்தானே செய்கிறார்கள்? என்று வாதிடக் கூடிய உங்களைப் போன்ற 'உளநோயாளிகள்' இருப்பதால் தான் அப்படிச் சொல்வதில்லை"



அன்றிலிருந்து அவர் என் முகத்தில் விழிப்பதில்லை.

சில்லென்று சாரல் வந்து மோத சிந்தனையிலிருந்து விடுபட்டு சாளரத்தினூடாக வெளியே நோக்குகின்றேன். 'குயின்ஸ்பேரி நெருங்கியிருக்க வேண்டும்' என்ற என் எண்ணம் பொய்க்கவில்லை.

என்னை வழிப்படுத்திய, இன்றும் துரோணாச் சாரியராக என்னை நெறிப்படுத்திக் கொண்டிருக்கிற பேராசிரியரிடம் நான் இதைப் பற்றிக் கதைத்திருக் கிறேன்.

"தம்பி காய்க்கின்ற மரம் கல்லெறிபடும். நீ கலங்காதே. கல்லெறிபவர்களுக்கும் பழம் கொடுப்பாய்" அவரது அந்த வார்த்தைகள் தான் என்னை இன்றுவரை இயங்க வைத்துக் கொண்டிருக்கிறது.

நாவலப்பிட்டியில் பேருந்தினுள் ஏறும்போது 'கசகச'வென்று வேர்த்துக் கொட்டும் உடம்பு, குயின்ஸ்பேரி நெருங்கியதும் சில்லென்று குளிரத் தொடங்கும். இயற்கையின் அதிசயம். சில கிலோ மீற்றர் தூரத்தினுள் அப்படியொரு சீதோஷ்ண மாற்றம்.

பேருந்தினுள் ஏறும்போது நிச்சயம் ஒரு தெரிந்தவர் இருப்பார் என்ற நம்பிக்கை இருந்தது. இன்று பார்த்து யாரும் இல்லை. குயின்ஸ்பேரியில் யாராவது இறங்குவார்கள் என்று பார்த்தால் அதுவும் நடக்கவில்லை. இருந்தாலும் அந்தக் காலநிலையில் நிற்பது கூட இதமாகத்தான் இருக்கிறது.

மீண்டும் என் மனம் பின் நோக்கித் தாவுகின்றது.

அப்படி நான் என்ன தவறு செய்தேன்?

மாலை நேரத்தை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துவது தவறா?

மாணவர்களின் இணைப் பாடவிதான செயற்பாடுகளில் அவர்களுக்குப் பக்கத் துணையாக நிற்பது தவறா?

பயிலுநர்களையும் என் சொந்தப் பிள்ளைகள் போல் மதித்து நடத்துவது தவறா?

எனக்குப் புரியவில்லை.

என் மனவேதனையை நம்பிக்கையான பலரிடம் கொட்டியிருக்கிறேன்.

"உங்களுக்கேன் தேவையில்லாத வேலை?"

"பேசாமல் எல்லாரையும் போல இருங்கோ!"

"ஒருத்தரும் நன்மை சொல்ல மாட்டார்கள்!!"

"பிள்ளைகளே நன்றி மறந்து விடுவார்கள்!!!"

இவற்றில் எதை நான் ஏற்பது?

என் மனைவி இதற்கும் ஒரு படி மேலே சென்று விட்டாள்.

"நான் இஞ்ச பிள்ளையளோட தனியக் கிடந்து கஷ்டப்படுறன். நீங்கள் உங்கயிருந்து ஏன் கெட்ட பேர் எடுக்கிறீங்கள்? மெடிக்கலைக் குடுத்து 'டிரான்ஸ்பர்' எடுத்துக்கொண்டு வாங்கோ"

அவள் சொல்வதிலும் ஒரு நியாயம் இருப்பதாகத் தான் படுகிறது.

என் பிரச்சினைக்கான தீர்வைச் சிந்தித்து சிந்தித்தே என் 'பிரஷர்' பல வேளைகளில் அதிகரித்து விடுகிறது.

இரண்டேயிரண்டு வழிகள்தான் இருக்கிறது.

ஒன்று நானும் 'குட்டையில் ஊறிய மட்டையாய்' மாறுவது.

மற்றது...

ஆம் அதுதான் சரி. நான் இங்கிருந்து இடம் மாற்றம் பெறுவது.

நாய் குரைப்பதற்காக சந்திரன் தன் பணியை நிறுத்தக் கூடாதல்லவா!

எங்கோ ஓர் இடத்தில் ஒளி வீசத்தானே வேண்டும்?

"ஐயோ சாரு நிக்குறாரு. இம்புட்டு உக்காருங்க சாரு"

நான் குரல் வந்த திசை நோக்கிப்பார்க்க, ஒரு வயதான அம்மா - எண்பது வயதிருக்கலாம் - சிரமப்பட்டு இருக்கையிலிருந்து எழும்ப முயற்சிக்கிறார்.

"வேண்டாம் அம்மா. நீங்கள் இரு ங்கோ... நான் கிட்டத்தான் போறன்"

"பத்தனைக்கு தூரம் இருக்கு சாரு. உக்காருங்கோ"

"வேண்டாம் அம்மா. நீங்கள் இருங்கோ நான் நிக்கிறன்"

அந்த அம்மாவை இருக்கச் செய்வதற்குள் எனக்குப் 'போதும் போதும்' என்றாகிவிட்டது.

பேருந்து அடுத்த திருப்பத்தில் வளைந்து திரும்பி, நிறுத்தப்பட சில பிரயாணிகள் இறங்கப் பலர் ஏறுகிறார்கள். நான் இருப்பதற்காகப் பார்த்துக் கொண்டிருந்த ஆசனத்தில் ஒருவர் அவசரமாய் அமர்கிறார்.

"சாரு... வாங்க சாரு. வந்து உக்காருங்க. ஓங்களுக்காகத்தான் எடம் புடிச்சேன்"

அந்த நடுத்தர வயது மனிதர் எழுந்து பௌவியமாக நிற்க, நான் அமர்ந்து கொள்கிறேன். என் சிந்தனைக் குதிரை திரும்பவும் பின் னோக்கித் தாவுகின்றது.

அந்த நாள் இன்றும்கூட பசுமையாக எனக்கு நினைவிருக்கிறது. தங்கள் இரண்டு வருடக் கற்கை நெறியை நிறைவு செய்த ஆசிரிய மாணவர்கள் கல்லூரியிலிருந்து புறப்படுவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்த நேரம். இரண்டு வருடங்களாக ஒன்றாகப் படித்து, உணவருந்தி, பொழுது போக்கி, படுத்துறங்கி... அப்படி வாழ்ந்தவர்கள் ஒருவரை விட்டொருவர் பிரியப் போகிறோமே என்ற தவிப்புடன் அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தார்கள்.

அவர்கள் என்னைச் சூழ்ந்து நின்று அழுதபோது என் கண்களும் கலங்கியது உண்மைதான். அந்த பெண் மாணவி சொன்ன அந்த வார்த்தை... என் பிறவிப் பெரும் பயனை நான் அடைந்துவிட்ட திருப்தியைக் கொடுத்த அந்த வார்த்தை...

"சேர் அப்பா மாதிரி எங்களப் பாத்துக்கிட்டீங்க சேர்... அப்பாவோட இருக்கிற மாதிரியே இருந்தோம் சேர்... இங்க இருக்கேக்க..."

எனக்கு இது போதும்! யார் என்ன சொன்னால் எனக்கென்ன? என் மாணவர்கள் என்னைப் புரிந்து வைத்திருக்கிறார்கள்.

மலையக மக்களின் 'மனித'ப் பண்புக்கு முன்னால் என் நண்பர்கள் எல்லோரும் தோற்றுப் போய்க் கூனிக் குறுகி நிற்கும் காட்சி என் மனதில் தோன்றி நிலைக்கிறது. என் 'டிரான்ஸ்பர்' எடுக்கின்ற எண்ணம் இரண்டு வருடங்கள் தள்ளிப் போக, பேருந்து தேயிலை மலைகளினூடாக பயணித்துக்கொண்டிருக்கிறது.

# நான், என் கணவர், மகள் மூவரும் ஒன்றாக வாழவேண்டும் நான் சமைத்து என் மகளுக்கு ஊட்டியபடி ஒன்றாய் சாப்பிடவேண்டும் என் குழந்தைக்கு கல்யாணம் நல்லபடியா முடிக்க வேண்டும்

'என் மகள் அரித்ரா திருமண வயதை அடைந்து விட்டாள். 'என் அம்மா, அப்பா என் திருமணத்துக்கு வருவதற்கான சூழ்நிலை அமைந்தால் மட்டுமே நான் திருமணம் செய்து கொள்வேன்' என்று பிடிவாதமாக இருக்கிறாள். நாங்களும் எங்களுக்கு பரோல் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இருக்கிறோம். அரசும் நீதிமன்றமும் எங்களுக்கு உதவிசெய்ய வேண்டுகிறோம். என் மகள் திருமணத்தை நல்லபடியாக நடத்த வேண்டும். உறவினர்கள் அனைவரையும் ஒருசேரப் பார்க்க வேண்டும்" - நளினியின் வார்த்தைகளில் தவிப்பு மிகுந்திருக்கிறது. ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனைக் கைதியான நளினி, 26 வருடங்களாகச் சிறையிலிருக் கிறார். 21 வயதில் சிறைக்குச் சென்றவருக்கு இப்போது 47 வயதாகிறது.

-ஜூனியர் விகடன்-

### "26 வருடங்களுக்கு முன்பு, நளினி என்பவர் யார்?"

"ஒரு நடுத்தரக் குடும்பத்துப் பெண். வில்லிவாக்கத்தில்தான் எங்கள் வீடு இருந்தது. என் தாத்தா காந்தியவாதி. என் அம்மா செவிலியர், அப்பா பொலிஸ் அதிகாரி. எனக்கு ஒரு தங்கை, ஒரு தம்பி. 21 வயதில், இந்த வழக்கில் சிக்கி விட்டேன். அந்தக் காலத்தில் ஈழத் தமிழர்களுக்குத் தமிழகத்தில் ஆதரவு இருந்தது. என் தம்பியும் அப்படித்தான் இருந்தான். அவனது தொடர்பின் மூலம் ஈழத்திலிருந்து வந்து இங்கு தங்கியிருந்த முருகனை காதலித்தேன். 1991 ஏப்ரல் 22இல், கோயிலில் வைத்து அவர் எனக்குத் தாலி கட்டினார். அது என் வீட்டுக்குத் தெரியாத நிலையில், நான் என் அம்மா வீட்டிலேயே தங்கிவந்தேன். ஒரு மாதத்துக்குள்ளாக, மே 21ஆம் திகதி ராஜீவ்காந்தி கொல்லப்பட, சூழ்நிலை மோசமானது. என் திருமணம் பற்றி வீட்டில் தெரிய வந்தபோது பிரளயமே வெடித்தது. எனது 21 வயதில் வழக்கில் சிக்கி நான் கைதியானேன்."

### "சிவராசனை எப்படித் தெரியும்?"

'இலங்கை பிரதமர் ஜெயவர்த்தனவின் தலையீட்டால் இந்திய அமைதிப்படையின் வருகை சண்டையாக மாறிப்போனது. அதனைச் சரிசெய்ய இந்தியத் தலைவர்களுக்கு மாலை அணிவித்து உறவை வளர்த்துக்கொள்ளலாம்' என்று சிவராசன் என்பவர் இங்கு வந்திருப்பதாகவும், முடிந்தால் என்னை உதவச்சொல்லியும் என் கணவர் கேட்டார். அவர் எங்கள் வீட்டு முகவரியை சிவராசனுக்குக் கொடுக்க, 1991ஆம் ஆண்டு மே மாதம் 3ஆம் திகதி என்னை வந்து சிவராசன் சந்தித்தார். அப்போது அவருடன் இரண்டு பெண்களும் வந்திருந்தார்கள். அவர்கள்தான் சுபாவும் தனுவும்.

நலம்விசாரித்து விட்டு, தனுவுக்குக் காய்ச்சல் அடிப்பதாகவும் பார்த்துக் கொள்ளும்படியும் வாசலில் நின்றபடியே சொல்லி விட்டு சிவராசன் போய் விட்டார். நான் தனுவைக் கவனித்துக்கொண்டேன். அடுத்த நாள் வெளியில் சென்றோம். பொருட்கள் வாங்கிக் கொண்டார்கள். தனுவும் சுபாவும், 'படத்துக்கு போலாம் அக்கா' என்று கேட்டுக்கொண்டே இருந்ததால், படத்துக்குச் சென்றோம். முதன்முதலாக அன்றுதான் அவர்கள் திரையரங்குக்கு வருவதாகச் சொல்ல, எனக்குக் கண்கலங்கிவிட்டது. மறுநாள் காலை சிவராசன், அவர்கள் இருவரையும் அழைத்துக் கொண்டு போய் விட்டார். அப்படித்தான் சிவராசனை முதன்முதலில் சந்தித்தேன்."



### "மே 21ஆம் திகதி என்ன நடந்தது?"

"என் கணவர் இலங்கைக்குச் சென்றுவிட்டுத் திரும்பி இந்தியா வந்து இரண்டு நாட்களாகியிருந்தன. ஆனாலும், அவரை என்னால் பார்க்க முடியவில்லை. நான் அப்போது கர்ப்பமாக இருந்தேன். அது குறித்து என் கணவரிடம் பேச வேண்டும் என்று நினைத்தேன். ஆனால், முடியவில்லை.

21 ஆம் திகதி நான் என் அலுவலக மேலாளரிடம் விடுப்பு அனுமதி பெற்று, என் கணவரைப் பார்க்க அவர் வீட்டுக்குச் சென்றேன். அங்கு அவர் இல்லை. ராஜீவ் காந்திக்கு மாலை அணிவிக்க வேண்டும் என்று, சிவராசன் என்னை ஏற்கனவே அழைத்திருந்தார். 'சரி, அங்கு கிளம்புவோம்' என்று சுபா, தனுவுடன் ஸ்ரீபெரும்புதூர் சென்றோம். நிகழ்வு முடியும்வரை எதுவும் சாப்பிட முடியாது என்று கூறி சிவராசன் எங்களுக்கு உணவு வாங்கித்தந்தார். நான் ராஜீவ் காந்தி போன்றவொரு தலைவரை அருகில் இருந்து பார்க்கப் போகும் ஆவலிலிருந்தேன். விழா அரங்குக்குச் சென்ற போது, அங்கிருந்த பல தலைவர்களை சிவராசனுக்குத் தெரிந்திருந்ததை அறிந்துகொண்டேன்.

சிவராசன், தனுவை வி.ஐ.பி-க்கள் இருக்கும் இடத்தில் உட்கார வைத்துவிட்டு, ஓர் ஓரமாக நின்றுகொண்டார். நானும் சுபாவும் அங்கு நிகழ்ந்த இசைக்கச்சேரியைப் பார்த்துக் கொண்டிருந்தோம். பின்னர், ராஜீவ் காந்தி வரும் வேளையில் சுபா என்னைத் தரதரவென இழுத்துக்கொண்டு நடக்கத் தொடங்கினார். 200 அடி நடந்த பிறகு ஒரு பெரிய வெடிச் சத்தம் கேட்டது. கூடவே ஓலங்களும் கேட்கத் தொடங்கின. என்னையும் சுபாவையும் அழைத்துக்கொண்டு சிவராசன் ஓர் ஆட்டோவில் ஏறி, யாரோ ஒருவரின் வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்தார். 'தனு எங்கே?' என்று கேட்டதற்கு, 'அவள் பத்திரமாக வந்துவிடுவாள்' என்று கூறினார். வீட்டுக்குச் சென்றதும் சுபா அழுதார். அதைப்பார்த்து நானும் அழுதேன்.

மறுநாள், முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட செய்தியை பேப்பரில் பார்த்தேன். நாங்கள் வீட்டிலேயே முடங்கிக் கிடந்தோம். என் மனதுக்குள் ஏதோ குழப்பமும் பயமும் ஓடியது. என் வேண்டுதல் எல்லாம் வயிற்றில் இருக்கும் என் குழந்தையைப் பற்றியதாக இருந்தது. அங்கிருந்து கிளம்பி, ராயப்பேட்டையில் இருந்த என் அம்மாவின் வீட்டுக்குச் சென்றேன். என் கணவரும் அங்கு வந்திருந்தார். குண்டு வெடிப்பு நிகழ்வு பற்றிக் கேள்விப்பட்டு, அங்கு சென்றிருந்த எனக்கு ஏதாவது ஆகிவிட்டதா என்று அவர் பதறிப்போயிருந்தார்."

### "சிறைக்குச் சென்றது எப்போது?"

'நான் ஜூன் 15 ஆம் திகதி கைது செய்யப்பட்டேன். அப்போது இரண்டு மாதம் கர்ப்பமாக இருந்தேன். பொலிஸ் எங்களைத் தேடியதால் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகி ஏழு நாட்கள் சாப்பாடு இல்லாமல் இருந்ததில், எனது உடல் மிகவும் பலவீனமாகியிருந்தது. நான் கைது செய்யப்பட்டு, கையில், காலில் விலங்குமாட்டி வைக்கப்பட்டிருந்தேன். மசக்கையில் அந்த இடத்தி லேயே வாந்தியெடுத்து, அதே இடத்திலேயே படுத்துறங்கினேன். எனது துன்பத்தைச் சொல்ல வார்த்தைகள் இல்லை."

### "உங்கள் குழந்தையும் சிறைவாசத்தில் தன் வாழ்க்கையை ஆரம்பித்திருக்கிறதே..."

'ஆம்... பிரசவத்துக்காக செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது, வழியிலிருந்த பிள்ளையார் கோயிலில் வேண்டிச் சென்றேன். பிரசவம் முடிந்து சிறைக்குத் திரும்பிய பின்னர், குழந்தை பால் குடிக்க வில்லை. அதைச் சரிசெய்வதற்கான கவனிப்புகள் கொடுக்க முடியாமல், குழந்தை பசியால் அழும்போதெல்லாம் நானும் என் கணவரும் சேர்ந்து அழுவோம். எனக்குப் பிள்ளையார் இஷ்ட தெய்வம் என்பதால், மகளுக்கு 'அரித்ரா' என்று பெயர்வைத்தேன். என் கணவர், 'மேகரா' என்று அழைப்பார்.

நாங்கள் அடைக்கப்பட்டிருந்த 10X12 அளவுள்ள அறைதான், அரித்ராவுக்கு உலகமாக இருந்தது. சில பொம்மைகளை வைத்திருந்தோம். அவற்றுடன் விளையாடுவாள். சிறையிலிருந்த கோவை சுசீந்திரன், ராபர்ட் பயாஸ், என் தம்பி பாக்கியநாதன் அறைகளுக்கெல்லாம் சென்று அவர்களுடன் விளையாடுவாள். அவளுக்கு இரண்டு வயதான போது, பெண் காவலர்களின் வளையல், செயினை எல்லாம் வாங்கி, நகையில்லாமல் இருக்கும் எனக்குப் போட்டு விடு வாள். மாலை லாக்கப் நேரத்தில், எங்காவது மறைந்து கொள்பவளைத் தேடிப் பிடித்து என்னுடன் சேர்த்து லாக்கப் செய்வார்கள். சில நேரங்களில் லாக்கப் கம்பிகளுக்குள் புகுந்து வெளியேறி விடுபவளை மீண்டும் கம்பி வழியாக அறைக்குள் கொண்டுவர நாங்கள் பாடுபடுவோம்'

### "உங்கள் குழந்தையைச் சிறையிலிருந்து வெளியே அனுப்ப எப்போது முடிவெடுத்தீர்கள்?"

'ஒரு முறை சேலம் சிறைக்கு என்னை மாற்றினார்கள். அங்கு சென்றபோது, சேலம் சிறையின் நுழைவாயிலுக்கு அருகே பசுக்களும் கன்றுகளும் கட்டப்பட்டிருந்தன. அதைப் பார்த்த என் மகள், 'அம்மா இதெல்லாம் என்ன?' எனக் கேட்டாள். உலகத்துக்கு எவ்வளவு அந்நியமாக அவள் வளர்ந்துகொண்டிருக்கிறாள் என்று நான் உணர்ந்த நொடியில் உடைந்துவிட்டேன். இனியும் என் மகள் சிறைக்குள் வளர வேண்டாம் என்று, இரண்டரை வயதில் அவளை, கோவைக்கு எங்கள் உறவினர் சுசீந்திரன் வீட்டுக்கு அனுப்பிவைத்தோம்."

### "சிறை வாழ்க்கையில் ஏதாவது மாற்றங்கள்..?"

'சிறையில் எனக்கு தெய்வமாக இருந்து, எனக்கும் என் குழந்தைக்கும் உதவிசெய்தவர்கள் இருக்கிறார்கள். நான் கர்ப்பிணியாக இருந்தபோது சில பெண் காவலர்கள் அவர்களுடைய வீட்டிலிருந்து எடுத்துவந்த உணவைக்கொடுத்து, 'சீக்கிரம் சீக்கிரம்...சாப்பிடு' என்பார்கள். அப்போது என் கருவைக் கலைக்க பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்பதால், நான் அதை உண்ண மறுத்தேன். அந்த உணவை தாங்கள் சிறிது சாப்பிட்டுவிட்டு, 'இப்போவாச்சும் நம்பு, சாப்பிடு' என்பார்கள் கண் கலங்கியபடி. அவர்களெல்லாம் தெய்வம்தான் எனக்கு.

சிறையில் எனக்கு வேலை தருவதில்லை. அதனால் சம்பளமும் இல்லை. என் கணவர் வேலைசெய்து மாதா மாதம் சம்பாதித்து வைத்துள்ளார். எனக்குப் பார்வைப் பிரச்சினை உள்ளது. சிரமப்பட்டு செய்தித்தாள் படிப்பேன். அதில் வரும் சமையல் குறிப்புகளை எனது நோட்டில் எழுதி வைத்துக் கொள்வேன். சமையலறைக்குச் செல்லும்போது என் துன்பங்கள் எல்லாம் மறந்து சமைக்க ஆரம்பித்து விடுவேன்."

### "இப்போது உங்கள் விருப்பம் என்ன?"

'நான், என் கணவர், மகள் மூவரும் ஒன்றாக வாழ வேண்டும். நான் சமைத்து, என் மகளுக்கு ஊட்டிவிட்டபடி நாங்கள் மூவரும் ஒன்றாகச் சாப்பிட வேண்டும். என் குழந்தைக்குக் கல்யாணம். அதை நல்லபடியாக முடிக்க வேண்டும்."

# திருப்பு முனையான தினகரன் வெற்றி அடுத்த நகர்வு எப்படி இருக்கும்?

ஆயிரம் சர்ச்சைகளுக்கு மத்தியில் நடந்த ஆர்.கே.நகர் இடைத்தேர்தல் முடிவு பெரும் அதிர்வுகளுடன் வந்திருக்கிறது. ஓர் இடைத்தேர்தலில் சர்வ பலம் பொருந்திய கட்சிகளையெல்லாம் வீழ்த்தி, சுயேச்சை வேட்பாளர் வெற்றி பெற்றிருப்பது சமகாலத் தமிழகத் தேர்தல் வரலாற்றில் நடந்திராதது. உண்மையாகவே சாதித்திருக்கிறார் தினகரன்.

மாநில ஆளுங்கட்சி, பிரதான எதிர்க்கட்சி, மத்திய ஆளுங்கட்சி என்ற முப்பெரும் கட்சிகளுக்கு எதிராகப் பெற்றிருக்கும் வெற்றியைப் 'பணத்தால் பெற்ற வெற்றி' என்று மட்டும் சுருக்குவது சரியாக இருக்காது. ஆளுங்கட்சி பணத்தோடு முழு அதிகாரத்தையும் பிரயோகித்துப் போட்டியிட்டதை நாம் மறந்துவிடலாகாது. ஆக, இந்த முடிவுக்குப் பின்னால் பல நுட்பமான அம்சங்கள் இருக்கின்றன.

பணப்பட்டுவாடா காரணமாக இரத்துச் செய்யப்பட்ட ஆர்.கே.நகர் இடைத்தேர்தல் மீண்டும் எப்போது நடத்தப்படும் என்ற கேள்வி எழுந்தபோதெல்லாம் தேர்தல் ஆணையம் சொன்ன பதில், "இடைத்தேர்தலை நேர்மையாக நடத்துவதற்கு ஏற்ற சுதந்திரமான சூழல் வரும்போது நடத்தப்படும்" என்பதுதான். பல மாதங்களாக இழுபறியாக இருந்த இரட்டை இலை விவகாரத்தில் ஒரு முடிவு எட்டப்பட்டு, 'பழனிச்சாமி-பன்னீர்செல்வம் தரப்புக்கு சின்னம் ஒதுக்கப்பட்ட மறுநாள் இடைத்தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டது. தேர்தல் ஆணையம் சொன்ன 'சுதந்திரமான சூழல்' இதுதானா என்று எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பின.

## 'சின்ன' சிக்கலும் தேர்தல் களமும்

இரு அணிகளும் இணைந்துவிட்ட நிலையில், அ.தி.மு.கவின் வேட்பாளராகக் களமிறங்கப்போவது பழனிச்சாமி ஆதரவாளரா?, பன்னீர்செல்வம் ஆதரவாளரா? என்ற சர்ச்சையும் உருவானது. இறுதியில் பன்னீர்செல்வத்தின் கை ஓங்கி, மதுசூதனன் நிறுத்தப்பட்டார். தனிக்கட்சி தொடங்கமாட்டேன், சுயேச்சையாகப் போட்டியிடுவேன் என்று சொல்லிக் களமிறங்கினார் தினகரன். தி.மு.க. தனது பழைய வேட்பாளர் மருதுகணேஷையே மீண்டும் நிறுத்தியது. பாஜக, நாம் தமிழர் உள்ளிட்ட கட்சிகளும் களத்தில் இருந்தன.

சுயேச்சை வேட்பாளர் தினகரனுக்கு அவர் ஏற்கனவே போட்டியிட்ட தொப்பி சின்னத்தை ஒதுக்கக்கூடாது என்று பா.ஜ.கவினர் உள்ளிட்ட சிலர் எதிர்ப்பு தெரிவித்தனர். தவிரவும், வேறு சில வேட்பாளர்களும் தொப்பி சின்னத்தைக் கோரவே, விசில், கிரிக்கெட் மட்டை என்று நகர்ந்தார் தினகரன். இறுதியில், குக்கர் சின்னம் கிடைத்தது. "எதிரிகளின் 'பிரஷ'ரை அதிகரிக்கச் செய்யவே 'பிரஷர் குக்கர்' சின்னத்தைப் பெற்றோம்" என்றார் தினகரன்.

இடைத்தேர்தல் பிரசாரம் தொடங்கும்போது களத்தை மூன்று அம்சங்கள் சூழ்ந்திருந்தன. ஒன்று, அணிகள் இணைந்து, இரட்டை இலைச் சின்னமும் கிடைத்துவிட்ட நிலையில், ஆர்.கே.நகரில் வெற்றிபெற்றே தீர வேண்டும் என்ற நெருக்கடி பழனிச்சாமி - பன்னீர்செல்வம் தரப்புக்கு இருந்தது. இரண்டு, ஜெயலலிதா இல்லாத, அ.தி.மு.க. பிரிந்து கிடக்கின்ற நிலையில் வெற்றி பெறாவிட்டால் எப்போது தி.மு.க. வெற்றிபெறும் என்ற நெருக்கடி நிரம்பிய கேள்வியோடு தேர்தலில் இறங்கியது தி.மு.க. கட்சி, ஆட்சி, சின்னம் எதுவுமே கையில் இல்லை என்றாலும்கூட தன்னால் வெற்றி பெறமுடியும் என்பதை நிரூபிக்க வேண்டிய நிலையில் களமிறங்கினார் தினகரன்.



### மாறிய காட்சிகள்

ஓகி புயல் குமரி மாவட்டத்தில் கடும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்த சமயத்தில்கூட ஆர்.கே.நகரில் முதல்வரும் துணை முதல்வரும் சூறாவளிச் சுற்றுப் பயணத்தில் ஈடுபட்டனர். தி.மு.கவும்மண்ணின் மைந்தர் மருது கணேஷ் என்று சொல்லிப் பிரசாரத்தில் "இறங்கியது. ஆனால் இவர்களை எல்லாம் மிஞ்சும் வகையில் தினகரன் களத்தில் இறங்கினார். சொந்த ஊரில் இருந்தெல்லாம் தொண்டர்களை அழைத்துவந்து, அவர்களைத் 'தொழில்நுட்ப' ரீதியிலான களப் பணிகளில் ஈடுபடுத்தினார். ஆரம்பத்தில் தி.மு. க, அ.தி.மு.க வுக்குமான போட்டிக் களமாக இருந்த ஆர்.கே. நகர் மெல்ல மெல்ல அ.தி.மு.க - தினகரனுக்கான போட்டிக்களமாக மாறியது.

இந்த இரு தரப்பும்தான் பணப்பட்டுவாடாவில் அதிக அளவில் ஈடுபடுவதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்தன. நான்காயிரம், ஆறாயிரம், பத்தாயிரம் என்றெல்லாம் வித விதமாக தொகை பற்றிப் பேசப்பட்டது. இருபது ரூபாய் நோட்டுகள் 'டோக்கன்'களாகப் பயன்படுத்தப்படுகிறது என்றார்கள். இன்னும் இன்னும் பல நூதன வழிகள். ஒருகட்டத்தில், பணப்பட்டுவாடாவைத் தடுக்காவிட்டால் தேர்தல் நடக்காது என்றார் தமிழிசை. இடைத் தேர்தலையே நிறுத்த வேண்டும் என்றும் குரல்கள் எழுந்தன.

> தினகரனின் அணுகுமுறை
> உண்மையில், இந்தத் தேர்தலில் தினகரன் எடுத்த துணிகர முயற்சி என்பது 'இரட்டை இலையை வீழ்த்துவேன்' என்று சொன்னதுதான். எம்.ஜி.ஆர், ஜெயலலிதா விசுவாசிகளின் எதிர்வினைக்கு உள்ளாவோம் என்றெல்லாம் கவலைப்பட்டு ஒதுங்கி நிற்காமல், மாநில ஆளுங்கட்சியின் தலைமையில் இருக்கும் வெற்றிடம், பிரதான எதிர்க்கட்சியிடம் இருக்கும் சுணக்கம், மத்திய ஆளுங்கட்சியின் அதிகார பலத்துக்குப் பொருந்தாத களபலம் ஆகியவற்றைக் கணக்கிட்டு, இரட்டை இலையை வீழ்த்தி இரட்டை இலையை மீட்பேன் என்று தினகரன் சொன்னது முக்கியமான நகர்வு.

### தினகரனின் அணுகுமுறை

உண்மையில், இந்தத் தேர்தலில் தினகரன் எடுத்த துணிகர முயற்சி என்பது 'இரட்டை இலையை வீழ்த்துவேன் என்று சொன்னது தான். எம்.ஜி.ஆர், ஜெயலலிதா விசுவாசிகளின் எதிர்வினைக்கு உள்ளாவோம் என்றெல்லாம் கவலைப்பட்டு ஒதுங்கி நிற்காமல், மாநில ஆளுங் கட்சியின், தலைமையில் இருக்கும் வெற்றிடம், பிரதான எதிர்க் கட்சியிடம் இருக்கும் சுணக்கம், மத்திய ஆளுங்கட்சியின் அதிகார பலத்துக்குப் பொருந்தாத களபலம் ஆகிய வற்றைக் கணக்கிட்டு, இரட்டை இலையை வீழ்த்தி இரட்டை இலையை மீட்பேன் என்று தினகரன்சொன்னது முக்கியமான நகர்வு. அது அவருக்கு வெற்றியைக் கொடுத்திருக்கிறது.

சரி, ஆர். கே. நகர் இடைத் தேர்தலில் தினகரன் வெற்றி பெற்றுவிட்டார். அடுத்தது என்னவாக இருக்கும்?

மூன்று மாதங்களில் பழனிச்சாமி அரசை வீட்டுக்கு அனுப்புவேன் என்று சொல்லியிருக்கிறார் தினகரன். தேர்தலுக்கு முன்பும் இதைத்தான் சொன்னார். ஆனால் அதை அவரால் சாதிக்க முடியவில்லை.

தற்போது நிலைமை வேறு. கண்ணுக்குத் தெரிந்த, கண்ணுக்கு எட்டாத எதிரிகளையெல்லாம் தாண்டி அவர் பெற்றிருக்கும் வெற்றி அ.தி.மு.க தொண்டர்களை, முக்கியமாக, அ.தி. மு.க. எம்.எல்.ஏக்களை யோசிக்க வைக்கும். அ.தி.மு.கவின் எதிர்காலம் தினகரன்தான் என்று அவர்கள் மனங்களில் நம்பிக்கைக் கீற்று தென்பட்டால், அவர்கள் அணி மாறுவதற்கு அரை நொடிகூட அதிக அவகாசம்தான். அணி மாற்றம் நிகழ்ந்தால் அடுத்தது ஆட்சிக் கவிழ்ப்பு தான்.

### இனி என்ன?


இங்கே கவனிக்க வேண்டிய அம்சம், இந்த நிமிடம் வரை ஆட்சி மாற்றம் பற்றிப் பேசும் தினகரன், அந்த நிலைப்பாட்டில் தொடர்ந்து உறுதி காட்டுவாரா என்பதுதான். ஆட்சியே கவிழ்ந்தாலும், அடுத்து வரும் தேர்தலில் ஆட்சியைப் பிடிக்க முடியும் என்பதற்கு அவ்வளவு உத்தரவாதமில்லை. அதற்குப் பதிலாக, 'நாங்களெல்லாம் ஒரு தாய் மக்கள்' என்று சொல்லி முதல்வருடன் கைகுலுக்கினால் அது ஆகப் பெரிய அரசியல் திருப்பமாக அமையும். தேர்தலில் தோற்று, மத்திய அரசின் அழுத்தங்களிலிருந்து தப்பிக்க முதல்வரும்கூட அந்த முடிவுக்குத் தயாராகலாம். அவர் வசமுள்ள முதல்வர் பதவி அப்படியே இருக்கும் என்று உத்தரவாதம் கிடைத்தால்!

இந்த இடத்தில் தி.மு.கவின் அடுத்தகட்ட நகர்வு என்னவாக இருக்கும் என்பதும் முக்கியமான கேள்வி. தி.மு.க. கணித்தபடி தினகரனின் வெற்றி அ.தி.மு.கவை மேலும் பலவீனப்படுத்தினால், பிரச்சினையில்லை. வரும் தேர்தலில் வெற்றி எட்டிவிடும் தூரம்தான். பென்னாகரத்தில் டிபோசிட் இழந்த அ.தி.மு.க. உடனடியாக ஆட்சியைப் பிடித்தது வரலாறு. அது தி.மு.கவுக்கும் பொருந்தும். மாறாக, தினகரனின் வெற்றியையே வசமாகப் பிடித்துக்கொண்டு அ.தி.மு.கவில் எல்லா அணிகளும் ஜெயலலிதா சமாதியில் தியானமிருந்துவிட்டு, கோட்டைக்குக் கிளம்பிவிட்டால், தி.மு.கவுக்கான ஆபத்து அடிவாசலை நெருங்கிவிட்டது என்று பொருள். எப்படிப் பார்த்தாலும் தினகரனின் வெற்றி தமிழக அரசியல் களத்தில் ஒரு திருப்புமுனை வெற்றிதான்!

**தமிழகத்திலிருந்து**
**ஆர்.முத்துக்குமார்**

# facebook

# யாரையும் குறைத்து மதிப்பிட வேண்டாம்



ஒரு பிரபல விஞ்ஞானி காரில் பயணம் செய்து கொண்டிருந்தார். வழியில் டயர் பஞ்சர் ஆகி விட்டது. ஆள் நடமாட்டமே இல்லை. பக்கத்தில் கடைகளும் ஏதும் இல்லை.

தானே டயரைக்கழற்றிஸ்டெப்னி மாற்ற ஆரம்பித்தார். அனைத்து போல்ட்டுகளையும் கழற்றிவிட்டு ஸ்டெப்னி எடுக்கப் போகும் போது,கால் தடுக்கிக் கீழே விழ, கையில் இருந்த போல்ட்டுக்கள் அனைத்தும் உருண்டு போய் சாக்கடையில் விழுந்தன.

என்ன செய்வது என்று யோசித்த போது கிழிந்த ஆடையுடன் ஒரு வழிப் போக்கன் அந்த வழியே வந்தான்.

அவரிடம் "ஐயா! என்ன ஆயிற்று?" என்று கேட்டான். அந்த விஞ்ஞானி மனதில் இந்த அழுக்கடைந்த சாக்கடையில் இறங்க இவன் தான் சரியான ஆள் என்றெண்ணி அவனிடம்,

இந்தக் சாக்கடையில் விழுந்த போல்ட்டுகளை எடுத்து கொடுக்க முடியுமா......?? எவ்வளவு பணம் வேண்டு மானாலும் தருகிறேன்" என் றார்.....!!

அதற்கு வழிப்போக்கன் இது தான் உங்கள் பிரச்சினையா......? அந்தக் சாக்கடையில் இறங்கி எடுத்துத்தர எனக்கொன்றும் ஆட்சேபனை இல்லை. ஆனால் அதைவிட சுலப மான வழி ஒன்று இருக்கிறது........!!

மூன்று சக்கரங்களிலிருந்தும் ஒவ்வொரு போல்ட்டைக் கழற்றி

இப்போதைக்கு இந்த சக்கரத்தை மாட்டி வண்டியைத் தயார் செய்து கொள்ளுங்கள்.......!!!

வண்டியை ஓட்டிச் சென்று, அருகில் உள்ள மெக்கானிக் கடையில், 4 போல்ட் வாங்கி எல்லா சக்கரத்திலும் மாட்டிக் கொள்ளுங்கள்" என்றான்

விஞ்ஞானிக்குத் தூக்கி வாரிப் போட்டது...!!! நான் இத்தனை பெரிய விஞ்ஞானியாய் இருந்தும், இந்த சுலபமான வழி புலப்படாமல் போனதே.........!!!

இவரைப்போய், குறைத்து மதிப்பிட்டு விட்டோமே... என்று தலை குனிந்தார் விஞ்ஞானி......! உயிருள்ள பறவைக்கு எறும்பு உணவு...!!! உயிரற்ற பறவையோ எறும்புக்கே உணவு.

நேரமும் சூழலும் எப்போதும் மாறலாம். யாரையும் குறை வாக மதிப்பிட வேண்டாம்.

# இப்படியும் ஒரு நட்பு



நேத்து நைட் ஆனந்தை பாக்க போனேன்... தெரு என்டர் ஆகும் போதே... அங்க நிக்றான். அங்கயே ஓரமா நின்று கொஞ்ச நேரம் பேசிட்டு இந்தோம்.

வீடு பக்கத்துலதான் இருக்கு... ஏன் அங்க கூப்பிடாம இங்க நிக்க வெச்சி பேசிட்டு இருக்கான்...? கழட்டி விட பாக்கிறானோ...?

வாடா ஆனந்த்... உன் வீட்டுக்கு போய் பேசலாம்... அது வித்யா ஊருக்கு போயிருக்காடா அதனால என்ன...?

டின்னர்க்கு நாலு சப்பாத்தி தான் சுட்டு வெச்சிட்டு போயிருக்கா...? அட லூசுப்பயலே... இதுக்கா இப்படி யோசிக்கிறே... எனக்கு நட்பு தான்டா முக்கியம்னு வீட்டுக்கு இழுத்துட்டு போயிட்டேன்.

அப்புறம் என்ன... நட்புக்காக வெறும் நாலே நாலு சப்பாத்திய நான் அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டேன்.

ஆனா நான் சாப்பிடும் போது அவனுக்கும் அரை சப்பாத்திய குடுத்தேன்... வேணாம்னு சொல்லிட்டான்... பசிக்கலை போலிருக்கு நல்லவேள... நான போகலைன்னா நாலு சப்பாத்தி வேஸ்ட்டால்ல போயிருக்கும்... ஹி... ஹி... ஹி...

டிஸ்கி : என் ப்ரெண்ட்டை பட்டினியா தூங்க விட்டுடு வேனா... ஹோட்டல்க்கு வற்புறுத்தி கூட்டிட்டு போயி... அவன் ரெண்டு தோசை... நான் நாலு தோசை சாப்பிட்டோம்ல... (அவன் காசுல... நான் காசு குடுக்கிறேனு சொன்னா... கோவப்படுவான்...

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1292

Search for people, places and things

**ராஜா**

நாம தேடிப்பிடிச்சு ஒரு மொபைல் வாங்கியதற்கு அப்புறமாதான் புதுப்புது மொடல் எல்லாம் கண்ணுக்குத் தெரியுது...



**ராஜேஷ்**


எங்கப்பா அம்மா சொன்ன பேச்சை நான் சின்ன வயசிலிருந்தே கடைப்பிடிச்சுட்டு வாரேன்
அப்படியா... சின்ன வயசுல என்ன சொன்னாங்க?



நீ உருப்படவே மாட்டேன்னாங்க...

**ராஜு**

மாசமானா செல்லுக்கு ரீசார்ஜ் பண்ணவே நாக்கு தள்ளிடுது...



அதுக்கு போய் எவன்டா சுஸினு பேர் வைச்சது...

**ரவி**

கல்யாணமாகி 25 வருஷத்துல ஒரேயொரு தடவைதான் உங்க கணவர்கிட்ட சண்டை போட்டீங்களா... ஆச்சரியமா இருக்கே...



ஆமா... சண்டையில அவர் வீட்டை விட்டுப் போனவர்தான் 25 வருஷமா திரும்பியே வரலையே...

**ராம்**


ஒரு செருப்பு மட்டும் காணோம்னா கண்டிப்பா நாய் எடுத்திருக்கும்...



ரெண்டு செருப்பும் காணோம்னா கண்டிப்பா எந்த நாயோதான் எடுத்திருக்கும்

**ராமன்**

இந்த உலகத்தில் உசைன் போல்ட்டுக்கு அப்புறம் அதிவேகமாக ஓடுவது...



இந்த Sunday

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.



# சத்தமில்லாமல்

## சச்சின் சாதனையை நெருங்கும் குக்

சச்சின் சாதனையை கோலி முறியடிப்பாரா, ஸ்மித் முறியடிப்பாரா என்று பட்டிமன்றம் நடத்திக்கொண்டிருக்கிறது கிரிக்கெட் உலகம். அவர்களின் ஒவ்வோர் இன்னிங்ஸையும் கிரிக்கெட் பேட் பிடிக்கத் தெரியாதவர்களிலிருந்து நிபுணர்கள் வரை எல்லோரும் அலசிக்கொண்டிருக்கின்றனர். இருவரும் சச்சினின் டெஸ்ட் ஓட்டக் கணக்கிலிருந்து சுமார் ஆயிரம் ஓட்டங்கள் தொலைவில் இருக்கின்றனர். அவ்வளவு தொலைவிலிருந்தும் அவர்களைப் பற்றியே உலகம் பேசக் காரணம் - அந்த இலக்கை நோக்கி புயல் வேகத்தில் முன்னேறிக் கொண்டிருக்கின்றனர்.


இவர்களின் மீதான மோகத்தில் உலகம் மறந்த ஒருவர், சச்சினின் சாதனையை சத்தமில்லாமல் நெருங்கிக்கொண்டிருக்கிறார். இவரை ஜாம்பவான் என்று யாரும் கொண்டாடியதில்லை. தலைசிறந்த பேட்ஸ்மேன் என்று பெரிய அளவில் புகழ்ந்ததில்லை. சச்சினுக்கு நெருக்கமாக வைத்துப் பேசியதில்லை. ஆனால், சச்சினை நெருங்கிக்கொண்டிருக்கிறார். அலெய்ஸ்டர் குக் - கிரிக்கெட்டைக் கண்டுபிடித்த இங்கிலாந்தின் தலைசிறந்த ஓப்பனர்... நிச்சயம் கொண்டாடப்பட வேண்டியவர்!

டெஸ்ட் போட்டிகளில் 31 சதமடித்திருந்த குக், மெல்போர்ன் மைதானத்தில் ஒரு சதம் கூட அடிக்காமல் இருந்தார். அங்கு 3 போட்டிகள் ஆடியிருந்தார். இரண்டு அரைசதங்கள் மட்டும் அடித்திருந்தார். மெல்போர்னில் என்ன, கடந்த 10 இன்னிங்ஸ்களாக எந்த மைதானத்திலுமே சதமடிக்க முடியாமல்... ஏன், அரைச்சதமே அடிக்க முடியாமல் திணறிக்கொண்டிருந்தார். ஆண்டு தொடக்கத்தில் கப்டன் பதவியிலிருந்து விலகியவரால், சிறப்பாக ஆடமுடியவில்லை. ஆஷஸ் தொடரில் அவுஸ்திரேலியாவின் ஆதிக்கத்தைத் தடுக்க கொஞ்சமும் உதவ முடியவில்லை. பெர்த்தில் தோல்வி. ஆஷஸ் தொடரையும் இழந்தாயிற்று. மெல்போர்ன் வந்தது இங்கிலாந்து அணி. 11 ஆண்டுகளாக குக் சதமடிக்க முடியாத மெல்போர்ன் மைதானத்துக்கு...

முதல் 3 போட்டிகளில் அவர் அடித்திருந்தது என்னவோ 83 ஓட்டங்கள்தான். ஓப்பனிங் பார்ட்னர்ஷிப்பும் 6 இன்னிங்ஸ்களில் ஒருமுறைதான் ஐம்பதைக் கடந்திருந்தது. அதனால், 327 என்ற முதல் இன்னிங்ஸ் ஸ்கோர், ஸ்மித்துக்கு 'குறைவாகத் தெரிந்திருக்காது. ஏனெனில், 3 போட்டிகளின் முதல் இன்னிங்ஸ்களில், அதிகபட்சமாக இங்கிலாந்து எடுத்த ஸ்கோர் 302 தான். ஒருமுறைகூட அவர்கள் முன்னிலை பெற்றதில்லை. இங்கிலாந்தின் இந்த மோசமான ஃபார்மும், குக்கின் தடுமாற்றமும் ஆஸி பௌலர்களுக்கு நம்பிக்கை தந்திருக்கும். ஆனால், குக்...

150 போட்டிகளில் ஆடியவர், தான் ஆடிய ஒவ்வொரு நாட்டிலும் சதம் அடித்தவர், எளிதில் சோடைபோய்விடுவாரா? அதுவும், அவுஸ்திரேலிய மண்ணில், மெல்போர்ன் அரங்கில் இன்னொரு டெஸ்ட் மேட்ச் ஆடிட முடியுமா? தெரியாது. இதுவே கடைசி வாய்ப்பாக இருக்கலாம். மைதானத்திலிருந்த 88,000 ரசிகர்களுக்கும் தன்னை நிரூபிக்கவேண்டும். நிரூபித்தார். இரண்டாம் நாள் ஆட்டம் முடிந்து பெவிலியன் திரும்பியபோது, மூன்றாம் நாள் ஆட்டம் முடிந்தபோது... அதுவரை பார்த்திராத ஒன்றைப் பார்த்தார். பல கிரிக்கெட் ஜாம்பவான்களும் அரிதாக நினைக்கும் அந்த மைதானத்தில், அந்த ஸ்பெஷல் தருணத்தை உணர்ந்தார். மெல்போர்ன் மைதானத்தில் அலெஸ்டர் குக் சதம் அடித்துவிட்டார். அதுவும் இரட்டைச் சதம்!

ஒருவழியாக, அந்த 20 ஆண்டு சாதனைக்கு முற்றுப்புள்ளி வைத்து. **'England's all time leading run scorer'** என்ற கௌரவத்தை தன்வசப்படுத்தினார் குக். வெறும் வீரர்களை உருவாக்கிய தேசத்தில் பிறந்த போராளி அவர். அதனால்தான் அத்தனை ஆண்டுகள், கப்டனாக இருந்துகொண்டு, தொடக்க வீரராகவும் களமிறங்கிக்கொண்டு அவரால் சிறப்பாக செயற்பட முடிந்தது. டெஸ்ட் போட்டியில் முதல் இங்கிலாந்து வீரராக 10,000 ஓட்டங்களைக் கடக்க முடிந்தது. ஒரே போட்டியில் மகிளா ஜெயவர்தனே, சந்தர்பால், பிரையன் லாரா ஆகியோரைப் பின்னுக் குத்தள்ளி டெஸ்ட் கிரிக்கெட் ரன் ஸ்கோரர்கள் வரிசையில் ஆறாம் இடத்துக்கு முன்னேற முடிந்தது.







டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்கள் அடித்துள்ளவர்கள் வரிசையில் முதல் 10 இடத்தில் இருப்பவர்கள் - சச்சின், பாண்டிங், காலிஸ், டிராவிட், சங்கக்கார, குக், லாரா, சந்தர்பால், ஜெயவர்தனே, ஆலன் பார்டர், ஸ்டீவ் வாஹ். அவர்களுள் 9 பேர் மிடில் ஆர்டர் பட்ஸ்மேன்கள். ஒரேயொரு ஓப்பனர் - அலெஸ்டர் குக்! பட்டிங் செய்த 273 இன்னிங்ஸ்களில், 260 முறை ஓப்பனராகக் களமிறங்கியவர். ஓப்பனராகவே 11,000-க்கும் மேல் ரன் குவித்தவர்.

ஓப்பனிங் பட்ஸ்மேன்கள் ஒரு கோலத்தின் முதல் புள்ளியைப் போல! அந்த அணியின் இன்னிங்ஸ் பெரும்பாலும் அவர்களையே மையப்படுத்தியிருக்கும். டெஸ்ட் போட்டியின் முதல் நாள்... முதல் செஷன் - ஆட்டத்தின் போக்கை நிர்ணயிப்பது அந்த 30 ஓவர்கள்தான். ஓப்பனர்கள் எப்படி பௌலிங்கை எதிர்கொள்கிறார்கள் என்பதைப் பொறுத்து மிடில் ஆர்டர் பட்ஸ்மேன்கள் தங்களைத் தயார்படுத்திக்கொள்வர். ஓப்பனர்களுக்கு அப்படியில்லை. ஆடுகளம் ஸ்விங் ஆகிறதா, எவ்வளவு பௌன்ஸ் ஆகிறது, சூழலுக்கு ஒத்துழைக்கிறதா என்பதை அவர்கள்தான் அறிந்து கொள்ள வேண்டும். சில போட்டிகளில் ஜொலிக்க முடியும், சில போட்டிகளில் பௌலர்கள் வென்று விடுவார்கள்.

சேவாக், ஹெய்டன், லேங்கர், ஜெயசூர்யா போன்ற ஓப்பனர்கள், பல பெரிய இன்னிங்ஸ்கள் ஆடினாலும், ஒட்டுமொத்தமாக பெரிய ஸ்கோர் அடிக்க முடியாததன் காரணம் அதுதான். குக், ஆரம்பம் முதல் கடைசி வரை ஓப்பனராகவே ஆடினார். இன்னும் அப்படியே ஆடிக்கொண்டிருக்கிறார். முப்பதைத் தொட்டதும் சோர்ந்து விடவில்லை. இந்த இரண்டு ஆண்டுகளிலும் சேர்த்து 2,000 ஓட்டங்களுக்கு மேல் அடித்துள்ளார். அவ்வப்போது கொஞ்சம் தடுமாறுகிறார். ஆனால், இப்படியொரு அசத்தல் ஆட்டம், அவரை மீட்டுவிடுகிறது. சோர்ந்துபோன ஒரு பட்ஸ்மனால் மெல்போர்னில்... அதுவும் ஆஷஸ் தொடரில் இரட்டைச் சதம் அடித்திட முடியுமா என்ன..?

2012-ல் ஆண்ட்ரூ ஸ்ட்ராஸ் சர்வதேசக் கிரிக்கெட்டிலிருந்து விலகினார். அதன்பிறகு இந்த 5 ஆண்டுகளில் காம்ப்டன், கார்பெரி, சாம் ராப்சன், ஆடம் லித், ஹேல்ஸ், டக்கட், ஹசீம் ஹமீத், கீடன் ஜென்னிங்ஸ், ஸ்டோன்மேன் எனப் பல ஓப்பனர்களை பரிசோதித்துவிட்டது இங்கிலாந்து. போதாக்குறைக்கு ரூட், டிராட், மொயீன் அலி போன்றவர்களையும்கூட ஓப்பனராக்கினர். இன்றுவரை அவர்களுக்குப் பதில் இல்லை. நல்ல பார்ட்னர்ஷிப் அமையாமல், டெஸ்ட் போட்டிகளில் ஒரு பட்ஸ்மனால் ஜொலிக்க முடியாது. டாப் 10 ரன்ஸ்கோரர்களில் டிராவிட் - சச்சின், ஜெயவர்தனே - சங்கக்கார... மிகச்சிறந்த பார்ட்னர்ஷிப் அமைத்தவர்கள்!

5 ஆண்டுகளாக சரியான பார்ட்னர் இல்லை. அது குக்கை எந்த வகையிலும் பாதிக்கவில்லை. ஒருபுறம் அவர்கள் வீழ்ந்தாலும், தன்னுடைய ஆட்டத்தை அவர் இழக்கவில்லை. இந்த 5 ஆண்டுகளில் 4,800 ஓட்டங்களுக்கு மேல் எடுத்துள்ளார். அந்த **'short term'** ஓப்பனர்கள் சொதப்பிய போதெல்லாம், அரணாக நின்று அணியைக் காத்துள்ளார். ஒரு முழுமையான பட்ஸ்மேனாக இல்லாமல் இருந்திருந்தால், நல்ல பார்ட்னர் அமையாதபட்சம் அந்த வீரரையும் அது பாதித்திருக்கும். குக் - ஒரு கம்ப்ளீட் பட்ஸ்மேன். ஆம், சாதனைகள் படைக்க முடியாத இங்கிலாந்து பட்ஸ்மன்களுக்கு மத்தியில், மகத்தான சாதனையை நெருங்கும் அவர் கம்ப்ளீட் பட்ஸ்மன்தானே!

ஸ்டீவ் ஸ்மித்தைப் போல ஒவ்வொரு டெஸ்ட் போட்டியையும் ஆட்சி செய்ததில்லை. கோலியைப் போல் சதங்களாக அடித்துக் குவித்ததில்லை. ஆனால், குக் "எலைட்" பட்ஸ்மன்களின் வரிசையில் நிற்கிறார். வேகவேகமாக அல்ல, நின்று நிதானமாக... 32 வயது ஆகிவிட்டது. இந்த இங்கிலாந்து போர்டை சமாளித்து எத்தனை ஆண்டுகள் அவரால் ஆடமுடியும் என்று தெரியவில்லை. இன்னும் ஒரு நான்கைந்து ஆண்டுகள் ஆடிவிட்டால், சச்சினின் சாதனையை ஒரு கை பார்த்துவிடலாம். உண்மையைச் சொல்லப்போனால், சச்சினின் சாதனையை இப்போதைய வீரர்களால் முறியடிக்க முடியுமெனில், அது இவரால்தான் முடியும். ஆம், குக்கால் முடியும்!(ம)

# காலத்தால் அழியாத கானங்கள்

படம் : தை பிறந்தால் வழி பிறக்கும்
இசை: கே.வி.மகாதேவன்
பாடியவர் : ரி.எம்.சௌந்தரராஜன், பி.சுசீலா
இயற்றியவர்: மருதகாசி



தை பொறந்தா வழி பொறக்கும் தங்கமே தங்கம்
தங்கச் சம்பா நெல் விளையும் தங்கமே தங்கம்
தை பொறந்தா வழி பொறக்கும் தங்கமே தங்கம்

ஆடியிலே வெதை வெதைச்சோம் தங்கமே தங்கம்
ஐப்பசியில் களையெடுத்தோம் தங்கமே தங்கம்
கார்த்திகையில் கதிராச்சு தங்கமே தங்கம்
கார்த்திகையில் கதிராச்சு தங்கமே தங்கம்
கழனியெல்லாம் பொன்னாச்சு தங்கமே தங்கம்
தை பொறந்தா வழி ...
கன்னியரின் மனசு போலே தங்கமே தங்கம்
கல்யாணமாகுமடி தங்கமே தங்கம் ஆமா
கன்னியரின் மனசு போலே தங்கமே தங்கம்
கல்யாணமாகுமடி தங்கமே தங்கம்
வண்ண மணி கைகளிலே தங்கமே தங்கம்
வண்ண மணி கைகளிலே தங்கமே தங்கம் ஆமா
வளையல்களும் குலுங்குமே தங்கமே தங்கம்
தை பொறந்தா வழி ...
சுத்தச் சம்பா நெல்லு குத்தி தங்கமே தங்கம்
முத்ததிலே சோறு பொங்கி தங்கமே தங்கம்
குத்து வெளக்கேத்தி வச்சு தங்கமே தங்கம்
குத்து வெளக்கேத்தி வச்சு தங்கமே தங்கம்
கொண்டாடி மகிழ்ந்திடுவோம் தங்கமே தங்கம்
தை பொறந்தா வழி...

# “அன்பமுதூறும் அயலார்”

ஓர் விடுமுறை நாள் மாலைப் பொழுதை மனநிறைவாகவும் பயனுள்ளதாகவும் களிக்க ஏதாவது சந்தர்ப்பங்கள் கிடைக்குமா? என்று எண்ணுகையில் நண்பர் ஒருவர் நாடகம் ஒன்று நடைபெறுவதாக தெரிவித்தார். அதைப் பார்க்கலாம் என்று தீர்மானித்தேன்.

புலம்பெயர்ந்து சென்ற காலம் தொட்டு சொந்த ஊர் வரும்போதெல்லாம் இவ்வாறான பொது நிகழ்வுகளில் பங்குபற்றுதல் எமது மக்களையும் ஊரின் நிலைமைகளையும் அறிய நல்லதோர் வாய்ப்பாக அமைவதால் நண்பர்களிடம் நிகழ்வுகள் பற்றி அறிந்து கொண்டு செல்வது வழக்கம். அந்தப் பழக்க தோசத்திலேயே “அன்பமுதூறும் அயலார்” நாடகத்தை பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது.

நாடகம் நடைபெற்ற இடம் ஓர் கலையரங்கு அல்ல. திருமண மண்டபம். நாடகம் தொடங்க இருபது நிமிடங்களுக்கு முன்பே அங்கு சென்று விட்டோம். மிகக்குறைவான பார்வையாளர்கள் அமைர்ந்திருந்தார்கள். சிலர் வந்து கொண்டிருந்தார்கள். ஏன் பார்வையாளர்கள் குறைவு “டிக்கெட்” என்றபடியாலோ எனக் கேட்டேன் நண்பரிடம். ச்சீ…நூறு ரூபா தானே. அது பிரச்சினையில்லை. நாடகத்துக்குச் சனம் வராது” என்று பதில் தந்தார். அந்தப் பதிலுக்குள் பல சமூக நிலைமைகள் மறைந்திருப் பதை படிப்படியாக உணர்கிறேன். இப்போது மேடையின் இருள் அகன்று ஒளிபரவத் தொடங்கும் போது ஓர் பத்தடி உயரமான நிலையில் ஒருவர் அமர்ந்திருக்கிறார். பின்னர்தான் அது ஓர் மலை உச்சி எனத் தெரிகிறது. “அன்பமுதூறும் அயலவர்கள்” பல மலையின் அடி வாரத்தில் காத்திருக்கின்றனர். உச்சியில் அமர்ந்திருப்பவர் மெதுவாக அசையத் தொடங்கும் நேரம் அயல வர்களான மக்கள் மத்தியில் கடும் கூச்சல் குழப்பம். ஏன் என நோக்கு கையில் உச்சியில் நிற்கும் மனிதன் குதித்து தன்னை மாய்த்து கொள்ளத் தயாராக நிற்பதும் அயலவர்கள் அதனை நேரடியாகக் கண்டுகளிக்கக் காத்திருப்பதும் நகைப்புக்கும் வியப்புமாக அமைகிறது.

ஒரு மணித்தியாலம் நீண்ட அந்த நாடகத்தில் மனித உணர்வு



களை, உணர்ச்சிக் கனிவை வியாபாரமாக்குவோர்களையும் அதை உணராத அப்பாவி மக்களின் நிலையைச் சித்திரித்து இறுதியில் மனதை நெருடும் முடிவோடு நிறைவடைகிறது.

பாத்திரங்கள் ஒவ்வொன்றும் கச்சிதமாகப் படைக்கப்பட்டு போட்டி போட்டுக் கொண்டு பார்வையாளர்

## ஒரு விமர்சனப் பார்வை

மனதில் இடம்பிடிக்க முனைகின்றனர். ஆனால் பல சந்தர்ப்பங்களில் அவர்களின் குரலும் வசன உச்சரிப்பும் சில நடிகர்களுக்கு பலவீனமாக உள்ளதை உணர முடிகிறது.

அதிகாரம்செய்யும் படைத்துறைப் பெண் அப்பாவி முதியவர், பிள்ளை களை தன் பிடிக்குள் வைத்து அல்லோலகல்லோலப்படுத்தும் தந்தை அவரின் பிள்ளைகள், கணவனைத் தேடும் சீமாட்டி அவரின் மகள், பரபரப்பூட்டும் பத்திரிகையார், புகைப்படக் கலைஞர்கள் என மேடையை நிறைக்கும். பல வயதை ஒத்த நடிகர்கள் வியக்க வைக்கிறார்கள்.



நடிப்பால் நாடகத்தின் இயல்பான இசை குறிப்பிட வேண்டியது கட்டாயம். நாடகத்தின் ஓட்டத்தோடு நாடகத்தின் பாதியில் வரும் நடிகர்களாக இசைக் கலைஞர்கள் இருவர் கச்சிதமாக இசை வழங்கி நாடகத்தில் வரும் ஒரே ஒரு பாடலை பாடுகின்றனர். பாடலின் இசை எங்கோ கேட்டது போன்ற உணர்வைத் தந்தாலும், கதைக்கும் நாடகம் வெளிப்படுத்தும் காலத்திற்கு ஏற்றதாக இசை அமைகிறது.

நல்லதோர் நாடகத்தை பார்த்த உணர்வு நாடகக் குழுவுடன் உரையாடத் தூண்டியது. அதன் பயனாக சில முக்கிய தகவல்களைப் பெற்றுக் கொண்டேன். இந் நாடகம் 1905 ஆம் ஆண்டு எழுதப்பட்டதாக கருதப்படுகிறது. ரஷ்ய மொழியில் லியோனிட் அனட்ரெய்வ் எழுத அதனை தோமஸ் செல்ட்சர் ஆங்கிலத்தில் மொழி மாற்றம் செய்திருக்கிறார். 2005 ஆம் ஆண்டு ஈழத்தின் சிறந்த நாடக ஆசிரியரும் நெறியாளருமான கலாநிதி குழந்தை ம. சண்முகலிங்கம் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். அவரும் அன்றைய தருணம் நாடகத்தை பார்வையிட்டுள்ளமை மகிழ்ச்சிக்குரிய விடயம். சீலன் மற்றும் லோகாநந்தன் என இருவர் நெறியாள்கை செய்திருந்தனர். அவர்களின் ஆற்றல், அனுபவம் அரங்கு பற்றிய புரிதலுக்கு பாராட்டப்பட வேண்டியவர்களே.

செம்முகம் ஆற்றுகைக்குழு மற்றும் ஆரோகணா கலைக் கல்லூரி இதனை வழங்கியிருந்தது.

சமகால தமிழ்ச் சமூகத்தில் நம்பிக்கையீனம், விரக்தி, பண்பாட்டுப்பிறழ்வு என்பன இளைஞர்களை ஆட்கொண்டிருக்கும் விசச் சூழல் உருவாகியுள்ள இத் தருணத்திலே நாடகத் தன்னார்வலர்களின் கூட்டிணைவுடன் அன்பமுதூறும் அயலார் நாடகம் படைக்கப்பட்டு அரங்கம் காண்கிறது.

தவமதன்
கோண்டாவில்
(கனடா)

# அக அமைதி

(நிமிடக்கதை)

அன்பான சங்கு நாத வாசகர் களுக்கு ஜிம்மிக்குட்டியின் இனிய ஞாயிறு வணக்கம். அற்புதங்களை வாரி வழங்கி விட்டு அமைதியாக விடைபெறும் பதினேழாம் ஆண்டுக்கு அன்புடன் விடை கொடுத்து ஆனந்தங்களையும் ஆரோக்கியத்தையும் அள்ளித்தர வருகின்ற இனிய பதினெட்டுக்கு நல்வரவு கூறி வையத்தில் வாழ்வாங்கு வாழ் பிரதிக்ஞை எடுப்போம் என்று இதய பூர்வமாக உறுதிப்பூணுவோம். என்ன அதிசயமாப் பார்க்கிறியள்? இந்த நாய்ப் பிறப்புக்கு இப்படியெல்லாம் யோசிக்கவும் சொல்லவும் எங்கையிருந்து அறிவு சுடர்விடுது என்று ஆச்சரிப் படுறியள் போல... உங்களுக்கு ஒண்டு சொல்லுறன்...கவனமாக் கேளுங்கோ....

“கற்றிலனாயினும் கேட்க’ எண்டு பெரியவர் அடிக்கடி சொல்லுறவர். அவரின்ர கால் மாட்டிலை நித்திரை கொள்ளுற மாதிரிப் படுத்துக்கொண்டு அறிதுயில் கொள்ளுதலை எனக்கும் இப்ப கொஞ்சம் கொஞ்சம் அறிவு வளருது. புலமைப்பரிசில் சோதினை செய்யிற ஆசையெல்லாம் துளிகூட கிடையாது பாருங்கோ ... மனிசரைப் படிக்கிற அறிவு கிடைச்சால் போதும்... ம்...01.01. 2017ஐ எல்லோரும் குதூகலமாகக் கொண்டாடும் இந்த நேரத்திலை வழமை போல விறாந்தையிலை அறிவாராய்ச்சி மகாநாடு ஆரம்பிச்சிட்டுது. கொஞ்ச நாளாத் திருவள்ளுவர் தாத்தா அடிக்கடி வந்து போறார்... ம்...அமைதியா இருந்து கேப்பம். கங்காதான் ஆரம்பிக்கிறா...

“தாத்தா ‘முரண்’ என்டால் என்ன...? மோதுகையென்டால் என்ன? கொஞ்சம் சொல்லுங்கோ..”

பெரியவர் சின்னப்பிள்ளை மாதிரிச் சிரிக்கிறார்...

“இதென்ன மகள்...நாடகம் ஏதாவது போடப் போறியோ? அருமையான விசயத்திலை ஆரம்பிக்கிறாய் ... ம்... கேள்... ‘முரண்’ என்பது எண்ணக் கருவாகக் கருத்து நிலையில் தோன்றி எண்ணத்தில் வெளிப்படும். அது ஒரு கருத்துக்கு எதிராக ஒவ்வாத தன்மையுடன் நினைப்பளவில் தோற்றம் பெறும்.

தோன்றியதும் மறையலாம், தொடரலாம் நிலைத்தும் இருக்கலாம். ஆனால் மோதுகை என்பது முரணின் செயல் நிலையில் வெளிக்காட்டப்படும். இப்ப உதாரணமாக....

ஒருவரைப் பிடிக்கவில்லை என்னும் நினைப்பு மனதில் எழும் போது முகத்திலோ செயலிலோ வெளிப்படாமல் அதை மறைத்துக்கொண்டு இயல்பாகச் சிரிக்கலாம், கதைக்கலாம். ஆனால் முகத்தைச் சுழித்தோ ஒரு கோபமூச்சு விட்டோ முகத்தைத் திருப்பிக்கொள்ளும் நிலை மோதுகை வெடித்துவிட்ட நிலையாகும். பலருடைய உள்ளங்களிலும் எழுகின்ற அக முரண்கள் அனைத்தும் மோதுகையாக வெடிப்பதில்லை. அது கால நேர மின்னலாகக் கூட சடுதியாகத் தோன்றி மறைந்து விடலாம். அகத்திலே அமைதி இருந்தால் அக முரண்கள் கூடுகட்டி வாழாது. எவன் ஒருத்தன் தன் தயத்தோடு முரண்படாத வாழ்வு வாழ்கிறானோ அவன் பிறருடனும் அதே தன்மையையே வெளிக்காட்டுவான். அவனது முகம் அழகாக தேஜஸ் பொங்க தெய்வீகப் பொலிவு பெறும். பாலா அடுத்த கேள்வியைக் கேக்கிறார்.

“அக அமைதி ஏன் சேர் அடிக்கடி கலையுது...!” பெரியவர் தலையாட்டிக் கொண்டே தொடர்கிறார்.

“மகன்...மனிதர்களின் இயல்பு வாழ்க்கையில் திருப்தி என்பது இலகுவில் ஏற்படாது. எப்போதுமே ஒப்பீடு செய்யிற பழக்கம் எல்லோரிடமும் இருக்கும். பிறரைப் பார்த்து அவரைப் போல வாழவேண்டும் என்று பேராசைப்படும் உள்ளங்கள், தங்கடை இயலுமை பற்றி யோசிக்காமலே அவாக்கொள்வது மிகப் பெரிய நோய். நிறைவேறாத ஆசைகளால் மனது ஏக்கம் கொள்ளும். பொறுமை, சகிப்புத்தன்மை குறையக் குறைய அமைதி பறிபோய் விடும். செல்வத்தைத் தேடித் தேடி வளர்த்துப் பாதுகாப்பதென்பது எந்நேரமும் பயந்து பயந்து வாழும் நிச்சயமற்ற தன்மையைக்கொண்டு வந்து விடுகிறது. அழிக்க முடியாத, அபகரிக்க முடியாத கல்வியை, நற்பண்பை அளவிட முடியாத அளவிற்குத் தேடிச் சேர்த்து வைத்தால் தன்னம்பிக்கை, கௌரவம், கம்பீரம் என்பன எம்மோடு நிரந்தரமாகக் குடிவந்து விடும். இளையோர் மனங்களில் இந்த விடயங்களை வளர்க்க வேணும். நல்ல நல்ல முன்மாதிரிகளைப் பின்பற்றி வாழ வேண்டும் என்ற அறிவு சிறுவயதிலேயே பதிக்கப்பட வேண்டும். பெரியவர்களும் வாழ்ந்து காட்ட வேண்டும்...” பெரியவரின் மகன் இப்ப தொடங்கிறார்...

“ஏனப்பா யாராவது ஏதாவது சொன்னால் மனம் அமைதியிழக்கிற நிலையை எப்படித் தவிர்க்கிறது?”

பெரியவர் எல்லாரையும் சுற்றிப் பார்க்கிறார்– தொடருகிறார்.

“மகன்...அற்புதமான தமிழில் எத்தனை எத்தனை இனிய சொற்கள் கொட்டிக் கிடக்குது. ஆனால் சிலபேர் வேணுமென்றே மற்றவரைப் புண்படுத்திறதுக்கெண்டே பிறந்த மாதிரிப் பிறப்புக்கள், சுடு சொற்களைக் கொட்டி விடுங்கள்... ஆனால் நீங்கள் அந்தக் குப்பைகளை எல்லாம் பொறுக்கிச் சேர்த்து சுமந்து கொண்டு திரியிறியள். போதாக் குறைக்கு தீயினால் சுட்ட புண் என்று பெரிசா திருக்குறளையும் துணைக்குக் கூப்பிடுவியள்.... ஆனால்... அதே திருவள்ளுவர் தான் பொறையுடை என்ற அதிகாரத்திலை... பாருங்கோ.

“உண்ணாது நோற்பார் பெரியவர். பிறர் சொல்லும் இன்னாச் சொல் நோற்பாரின் பின்” என்று நெறி தவறிய கீழ் மக்களின் சொற்களைப் பொறுத்துக் கொள்ளும் ஆற்றலுடையவர் உணவைத் தவிர்த்து நோன்பிருந்து கடுந்தவம் செய்யும் துறவியரை விடத் தூய்மையானவர் ஆவார் என்று அற்புதமாச் சொல்லி இருக்கிறார்”

கங்கா குறுக்கிட்டுச் சொல்லுறா...

“ஏன் தாத்தா இதே அதிகாரத்திலை செருக்கு மிகுதியால் நமக்குத் தீங்கு செய்தவர்களையும் நாம், நம்முடைய பொறுமையான செயல்களால் வென்று விட வேண்டும் என்று பொருள்படக் கூறியிருக்கிறார்தானே. எப்பவும் எங்கள் மனங்களின் தாங்கு திறன் அதிகரிக்க அதிகரிக்க எமது மனம் அற்புதமான அமைதித் தடாகமாக, நந்தவனமாகப் பலருக்கும் ஆறுதல் கொடுக்கும் இனிய தளமாக நிறைவாக இருக்கும். இதுவே பெரிய செல்வம்!”

“அருமை அருமை இதை வெறும் வார்த்தையாக மட்டும் நினைக்காதையுங்கோ...மகாவாக்கியம் இது”

ம்...ஆராய்ச்சி மகாநாடு முடிஞ்சுது. சாப்பிட்டுட்டுப் படுக்கப் போறார்...

பாரதி கணேஷ்
சுன்னாகம்

# மரண அறிவித்தல்

## திருமதி. அரியநாயகம் சேதுப்பிள்ளை (உடுப்பிட்டி, யாழ்ப்பாணம்)

மலர்வு 17 03 1939



உதிர்வு 27 12 2017

உடுப்பிட்டி சந்நிதி வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி அரியநாயகம் சேதுப்பிள்ளை 27.12.2017 புதன்கிழமை காலமானார். இவர் கரவெட்டியைச் சேர்ந்த சின்னத்தம்பி அரியநாயகம் (ஓய்வு பெற்ற மின் அத்தியட்சகர்) அவர்களின் அன்பு மனைவியும் உடுப்பிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற பொன்னையா - மீனாட்சி தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் கரவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்தம்பி - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் திருமகள் *(Pharmacist -* இரத்தவங்கி, கொழும்பு), திருச்செல்வம் *(Quantity Surveyor- Qatar)*, தயாபரன் *(Engineer), Dr.* துஷ்யந்தன் (கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, களுபோவில) ஆகியோரின் அன்புத் தாயாரும் மதன்மோகன் *(Accountant- Print Care PLC)*, ஜீவிதா *(Engineer- Qatar)*, *Dr.*சண்முகப்பிரியா (கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் திருமதி சிவக்கொழுந்து - தங்கச்சிநாச்சி, திருமதி முத்துவேல் - தங்கமுத்து மற்றும் காலஞ் சென்றவர்களான சின்னத்துரை - பொன்னம்மா, வேலாயுதம் (வெக்டர் கணித ஆசிரியர்) ஆகி யோரின் சகோதரியும் அட்சரன், அபிஷ்ணவி, தேனுஜன், ஹரிஸ்மன், ஜெயவைஷ்ணவி, நேத்திரன், தருணிகா ஆகியோரின் பேத்தியும் சிவயோகராஜா (கனடா) இராஜலக்கிய குமாரி *(UK)*, ஸ்ரீபதி *(UK)*, சிவராஜா (கனடா) ஆகியோரின் பாசமிகு சிறிய தாயாரும், நகுலேந்திரா*(UK)*, காலஞ்சென்ற குகேந்திரா, கணேந்திரா *(UK)*, இரத்தினவேல் ஆகியோரின் அத்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் **யாழ்ப்பாணம்** துரை பொன் வாசம், சந்நிதி வீதி, **உடுப்பிட்டி**யிலுள்ள அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 31.12.2017 இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இறுதிக்கிரியை நடைபெற்றதன் பின்னர் உடுப்பிட்டி இந்து பொது மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

T.P : 077 34 94 480, 077 73 81 319 (C-167) தகவல் : குடும்பத்தினர்

# வீதியை முடிக்கும் வீதி விபத்துக்கள்

அழகியதொரு காலைப்பொழுதிலே எனது அம்மாவை அழைத்துக்கொண்டு வைத்தியசாலைக்கு சென்றுவிட்டு மீண்டும் எனது வீடு நோக்கி ஓட்டோவில் பயணிக்கின்றேன். வீதிமருங்கிலும் உள்ள கடை களை பார்த்த வண்ணம் நகரும்போது திடீரென ஒருவீதியில் ஒரே சனக்கூட்டம் எட்டிப்பார்க்க முடியாத ளவு இருந்தது. என்மனதில் ஏதோ ஒரு படபடப்பு. இறங்கிப் பார்த்துவிட வேண்டும் போல் இருந்தாலும் மனதில் ஏதோ ஒரு பதட்டம். முயல்கிறேன் மீண்டும் வேண்டாம்! என்று முடிவு செய்து ஆட்டோவை செலுத்துமாறு கூற ஆட்டோ நகருகின்றது. அந்த விபத்தின் கோரத்தினை வீதியிலே சிந்தி இருந்த இரத்தம் எடுத்துக்காட்டியது

உண்மையில் இவ்வாறான விபத்துக்களை பார்க்கும் போதுதான் இவ்வாறான விபத்துக்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும் போல் உள்ளது.

மரணம் என்பது எல்லோருக்கும் நிச்சயமானது. அதனை எவராலும் மாற்றமுடியாது. வாழ்க்கையில் எமது தேவைகள் ஆசைகள்,விருப்புக்கள் என்பதற்காக எதிர்நீச்சல் அடித்து வாழ்க்கை என்னும் வண்டியை ஓட்டிச் செல்லும் எல்லாமனிதன் உள்ளேயும் இந்த உலகத்தில் சிறப்பாக வாழ்ந்து மரணிக்க வேண் டும் என்பது ஒரு அவாதான். ஆனால் சிலரை எதிர்பாராத விதமாக கோரமான முறையில் மரணம் வந்தடைகின்றது.ஆனால் பல பேர் மரணத்தை நோக்கியே தமது செயற்பாடுகளை மேற்கொள்கிறார்கள் என்பதும் குறிப்பிட்டு சொல்லப்பட வேண்டிய விடயம் ஆகும்.



இன்று உலகளாவிய ரீதியில் பாரிய விளைவுகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கும் ஒரு பிரச்சினையாக இருப்பது வீதி விபத்துக்கள். நாளொன்றிற்கு எத்தனை என்பதனை விட மணித்தியாலத்திற்கு மணித்தியாலம் ஏதோ ஒரு மூலையில் ஒருவர் அங்கவீனராக ஆகிக் கொண்டி ருக்கிறார்.கடந்த 30ஆண்டுகாலமாக இடம்பெற்ற யுத்தத்தினால் நம் நாட்டுக்காக போராடி எத்தனையோ பேர் தமது உடற்பாகங்களை இழந்து அங்கவீனர்களாக மாற்றுதிறனாளிகள் என்று எம்மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.இவர்களுக்கு மத்தியில் கவலை யீனமாக செயற்பட்டு தமது அவயங்களை இழந்து மாற்றுத் திறனாளிகள் ஆகும் ஒருசாரார்! அதுமட்டு மல்லாது இன்னொரு புறம் பெறுமதிமிக்க உயிர்களும் பறிக் கப்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றது என்பதே உண்மை.

வசதிகளும் வாய்ப்புக்களும் அதிகரித்தமையும் மறுபுறம் நாடு அபிவிருத்தியை நோக்கி நகருகின்றபோது பல மாற்றங்களை செய்யவேண்டிய நிலையின் விளை வாலும் கரடுமுரடான பாதைகள் எல்லாம் இன்று காப்பெற் வீதிகளாக வடிவமையப்பெற்றிருப்பதனால் வேகமாக வாகனத்தை செலுத்துவதும் மற்றைய வாகனங்களை முந்திச்செல்வது இலகு என வேகக்கட்டுப்பாட்டை இழந்து பயணிக்கின்றார்கள்.

இப்பொழுது வாகனங்கள் வீதிகளில் பயணிப்பதில்லை. மாறாக பறக்கின்றது. இன்னும் ஆழமாக சொன்னால் ஜெற்றின் வேகத்தினையே தாண்டிவிடும்போல் உள்ளது.

முன்னைய காலங்களில் வாகனம் என்ற ஒன்றைக் காண்பது என்பது அரிது. அவ்வாறான வேளைகளில் கூட சிரமம் என்ற ஒன்றில்லாமல் நடைபயணமாக மக்கள் சென்றார்களே தவிர கடினம் என்று எண்ணவில்லை. இன்று நடைபயணமாக செல்பவர்களை ஏளனமாக பார்க்கும் நவநாகரீக உலகமாக மாற்றம் அடைந்து விட்டது. அவசரதேவை என்றால் மாட்டுவண்டிகளைப் பயன்படுத்தினர்.அந்தக்காலத்து மாட்டுவண்டி இப்போது நாம் பயன்படுத்தும் கார் போன்றதற்குச் சமமாகும். இதன்பின் ஒவ்வொரு காலகட்டத்திலும் நாடுகளுக்கு இடையில் காணப்படும் நட்புநிலையைமேம்படுத்த பண்டைமாற்று மேற்கொள்ளப்பட்டு புதியபுதிய வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டு ஒரே வாகனம் பல பெயருடன் வீதிகளிலே உலாவருகின்றது. நம்மவர்களும் அடித்துப்பிடித்து கொண்டு வாங்குகிறார்கள்.உண்மையில் பல பேருக்கு அது உதவுகின்றது. சில பேரின் உயிரையும் எடுக்கின்றது. வானத்தில் உள்ள நட்சத்திரங்களைக் கூட எண்ணி விடலாம். ஆனால் வீதியில் செல்லும் வாகனங்களை எண்ணி விடுவது என்பது மனிதனுடைய செயற்கை மூளையான கணனியினால் கூடமுடியாது. இதனை விட காலை நேரங்களில் 7 தொடக்கம் 8 மணிநேரம் வீதிக ளில் பயணிப்பதென்பதே ஆபத்தான நேரமாக காணப்படுகின்றது என்றளவு வாகனங்களின் செறிவும் வேகமும் மிரட்டுகின்றது. உலகளாவிய ரீதியில் வருடாந்தம் வீதி விபத்துக்களினால் 1.25மில்லியன் மக்கள் இறப்பதாயும் 20மில்லியன் தொடக்கம் 50 மில்லியன் வரை மக்கள் காயப்படுவதாகவும் சர்வதேச புள்ளிவிபரம் தெரிவிக்கின்றது. அதேவேளை சிறப்பாக, அதிகமான விபத்துக்கள் ஏற்படுவதற்கான பிரதான காரணங்களில் ஒன்று குடித்துவிட்டு வாகனம் செலுத்துவதாகும். அதி வேகம். தலைக்கவசமின்றி மோட்டார வாகனம் ஓட்டுவத்து. இருக்கை பட்டி அணியாமல் வாகனம் ஓட்டுவது, தொலை பேசியை பயன்படுத்திக்கொண்டு வாகனத்தினை ஓட் டிச்செல்வது. இவ்வாறான செயற்பாடுகள் மூலம் விபத்துக்கள் ஏற்படுவதனைக் காணலாம்.அதிலும் முக்கியமாக சாரதிகளின் அலட்சியப்போக்கினால் குறிப்பாக வாகனங்களை முந்திச் செல்ல முற்படுவது,அவசரம் போன்றவற்றால் வீதிகளிலே பயணம் செய்யும் பாதசாரிகளுக்கும் ஆபத்தினை ஏற்படுத்தி விடுகின்றது.

> ஒவ்வொரு பிள்ளைக்குமான சுதந்திரம் என்பது நிச்சயமாக கொடுக்கப்படவேண்டியதுதான்.பரீட்சையில் சித்தியடைந்ததும் கேட்டவுடன் பின்விளைவுகளை பற்றி சிந்திக்காது வாகனங்களை பரிசளிக்கின்றார்கள். இவர்களது விளையாட்டு குணமும், மிகை ஆர்வமும், பின்விளைவுகளைப் பற்றி சிந்திக்காத தன்மையும், வேகமாக வாகனத்தை செலுத்தி தொடர்பு எல்லைக்கு அப்பாலே பயணிக்கின்ற சம்பவங்களை காண முடிகின்றது. எனவே பெற்றவர்கள் கொடுப்பது பரிசை அல்ல மாறாக இரும்பு வடிவில் உள்ள காலனையே என்பதை இன்று எத்தனை பெற்றோர்கள் உணருகின்றார்கள்?

முக்கியமாக தலைக்கவசம் அணிந்து கொண்டு வாகனம் செலுத்த வேண்டும் என இலங்கையில் சட்டம் இருந்தாலும் அதனை பலபேர் கருத்தில்கொண்டு செயற்படுவதில்லை. மாறாக பொலிஸாரிடம் மாட்டிக் கொள்ளாமல் இருப்பதற்காக அணிந்து கொள்கின்றார்கள். தல்லக்கவசம் அணிந்து செல்கின்றபோது தலைப்பகுதிகளில் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைப்பதற்கு மிக முக்கியமாக உதவும் என்பதால் ஆகும்.

இன்னும் ஒரு பாரியகாரணியாக வாகனங்களை செலுத்தும்போது தலைக்கவசத்திற்கும் காதிற்கும் இடையில் தொலைபேசிகளை பயன்படுத்திக்கொண்டு வண்டி ஓட்டுகிறார்கள். இதனால் கவனச்சிதறல் ஏற்படுகின்றது. முன்பு என்னவாகனம் வருகின்றது என்ப தனைக்கூட கவனிக்காது வாகனத்தினை ஓட்டிச் செல்கிறார்கள். இது ஆரோக்கியமான சூழலுக்கு முரண்பாடான தன்மையைக் கொண்டதாகவே காணப்படுகின்றது.

வாகனஓட்டுநருக்கு எந்தளவுதூரம் வீதிகளில் வண்டிகளை ஓட்டிச்செல்ல பொறுப்புள்ளதோ அதேயளவு பாதசாரிகளும் பொறுப்புடன் நடந்துகொள்வது என்பது இங்கு முக்கியமானதொன்றாகக் காணப்படுகின்றது. வீதிகளைக் கடக்கும் போது பல மக்கள் மஞ்சள்கோட்டு பாதைகளை பயன்படுத்தாது குறுக்காக அவசரமாக கடப்பது போன்றன உயிர் ஆபத்தினையே ஏற்படுத்திவிடும்.

இளையோர் மத்தியில் நிதானம் என்பது குறைவாகவே காணப்படுகின்றது.இன்று மோட்டார்சைக்கிள் இல்லாத இளையோரைக் காண்பது. குறைவு அதிலும் பாடசாலை மாணவர்களே இவ்வாறான வீதிவிபத்துக்களில் அதிகம் சிக்குவதும் உண்டு. பெற்றோர்கள் இவ்விடயத்தில் முக்கியமாக கவனத்தில் கொள்ளவேண்டிய விடயம் யாதெனில் ஒவ்வொரு பிள்ளைக்குமான சுதந்திரம் என்பது நிச்சயமாக கொடுக்கப்படவேண்டியதுதான். பரீட்சையில் சித்தியடைந்ததும் கேட்டவுடனும் பின்விளைவுகளை பற்றி சிந்திக்காது வாகனங்களை பரிசளிக்கின்றார்கள். இவர்களது விளையாட்டு குணமும்.மிகை ஆர்வமும், பின்விளைவுகளைப்பற்றி சிந்திக்காததன்மையும், வேகமாக வாகனத்தை செலுத்தி தொடர்பு எல்லைக்கு அப்பாலே பயணிக்கின்ற சம்பவங்களை காணமுடிகின்றது. எனவே பெற்றவர்கள் கொடுப்பது பரிசை அல்ல; மாறாக இரும்பு வடிவில் உள்ள காலனையே என்பதை இன்று எத்தனை பெற்றோர்கள் உணருகின்றார்கள்?

அது மட்டுமல்லாது எத்தனையோ பெண்கள் வீதி விபத்துக்களினால் கைம்பெண்களாக மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இதற்கு காரணம் ஒவ்வொரு ஆணினதும் பொறுப்பற்ற தன்மையே. நண்பர்களுடன் சேர்ந்து குடித்துவிட்டு வாகனங்களை ஓட்டிச்செல்வதும், வேளைக்கு வீட்டுக்கு செல்லவேண்டும் என்று வேகக் கட்டுப்பாட்டையும் வீதிவிதிகளையும் கருத்தில் கொள்ளாது செயற்படுகின்றபோது ஒன்று தங்களைத்தாங்களே மாய்த்து கொள்கின்ற, மறுபுறம் இன்னொரு உயிருக்கும் ஆபத்தை ஏற்படுத்துகிறார்கள். ஆனால் வீட்டில் மனைவியும் .பிள்ளையும் வேலைக்கு சென்ற கணவன் வீட்டிற்கு வருவார்.அப்பா வருவார் என காத்துக்கொண்டிருக்கும் ஒவ்வொரு உயிரும் அல்ட்சியப்போக்கினால் ஏமாற்றப்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றது.

இலங்கையைப் பொறுத்தவரை சட்டங்கள் இன்னும் இறுக்கமாக வலுப்படுத்தப்பட வேண்டும் வாகனம் செலுத்துவோருக்கு சிறந்த பயிற்சி.அதிகளவான வாகன கண்காணிப்பு, வேக அளவீட்டு கருவிகளுடன் அதிகாரங்கள், கண்கானிப்பு கமராக்களின் மட்டில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

குறிப்பாக எந்தவொரு நபர் வீதிக்கட்டுப்பாட்டினை மீறி செயற்பட்டாலும் அவருக்குரிய தண்டனை மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாயும் அதேவேளை தவறுசெய்யத் தூண்டாதது மாக காணப்படவேண்டும். விபத்துக்களால் உயிரிழந்து விட்டார் என்று சாதாரணமாக சொல்கிறோம்.அந்த மரணத்தின் பின்னால் எத்தனையோ விபரிக்கமுடியாத சோகங்கள் புதைந்து கிடக்கிறது. எம்மில் யாருக்குமே புரிவதில்லை.

லோ.அனற்கேசிகா
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
ஊடகக் கற்கைகள்

# திருக்குறள் ஒரு பார்வை

திருக்குறளானது அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் எனும் முப்பிரிவுகளைக் கொண்டுள்ளது. அறத்துப்பாலில் 38 அதிகாரங்களும் பொருட்பாலில் 70 அதிகாரங்களும் காமத்துப்பாலில் 25 அதிகாரங்களுமாக மொத்தம் 133 அதிகாரங்களையும் ஓர் அதிகாரத்திற்கு பத்துக் குறள்கள் வீதம் மொத்தமாக ஆயிரத்து 330 குறள்கள் உள்ளன.

### திருக்குறளில் இறைமை

திருக்குறளில் முதல் அதிகாரமே இறைமை பற்றியது தான். திருக்குறள் உரை நூல்கள் பல. அதற்குக் "கடவுள் வாழ்த்து" எனப் பெயர் கொடுத்திருக்கின்றது.

"ஆதி பகவன்" (குறள்-1)
"வாலறிவன்" (குறள்-2)
"மலர்மிசை ஏகினான்" (குறள்-3)
"வேண்டுதல் வேண்டாமை இலான்" (குறள்-4)
"இறைவன்" (குறள்-05,10)
"பொறிவாயில் ஐந்தவித்தான்" (குறள்-6)
"தனக்குவமை இல்லாதான்" (குறள்-7)
"அறவாழி அந்தணன்" (குறள்-8)
"எண்குணத்தான்" (குறள்-9)

மேலும் சில விடயங்களிலும் இறைமைக் குறிப்புகள் இடம்பெறுகின்றன.

"வகை தெரிவான்"-(குறள்-27)
"சிறப்பென்னும் செம்பொருள்" (குறள்-358)
"அடியளந்தான்" (குறள்-610)
"உலகியற்றியான்" (குறள்-1062)
"தாமரைக் கண்ணான்" (1103)

என்றெல்லாம் வருமிடங்களில் இறைவனின், பெயர் நேரடியாகவோ மறைமுகமாகவோ குறிப்பிடப்படுகின்றன.

### திருக்குறளில் தெய்வம் என்று வரும் இடங்கள்

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல்தான் என்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை" (குறள்-43)
"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்" (குறள்-50)
"தெய்வம் தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை" (குறள்-55)
"தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்" (குறள்-617)
"ஐயப் படாஅது அகத்த துணர்வானைத்
தெய்வத்தோடு ஒப்பக்கொளல்" (குறள்-702)
"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான் முந்துறும்" (குறள்-1023)

### திருக்குறளில் இறைவன் என்று வருமிடங்கள்

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" (குறள்-5)
"பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்" (குறள்-10)

ஆகிய இரு இடங்களில் இறைவன் என்று குறிப்பிடுகின்றார்.

### திருக்குறளில் மக்கள் பெறும் பொதுப்பெயர்கள்

மிசைவான் (குறள்-85), செம்பொருள் கண்டார் (குறள்-01), துப்பாயர் (குறள்-106), தக்கார் (குறள்-114), விழுமியார் (குறள்-201), ஒத்ததறிவான் (குறள்-214), பேரறிவாளன் (குறள்-215), பெருந்தகையான் (குறள்-217), ஆவதறிவார் (குறள்-427), நீரவர் (குறள்-482), நட்டார் (குறள்-679), ஒளியார் (குறள்-714), வில்லெருமுவர் (குறள்-872), நாணுக்குறைபதி (குறள்-1015), போன்ற நிறைமக்களின் பொதுப்பெயர்களும் மக்கட்பதடி (குறள்-196), வன்கணவர் (குறள்-228), மூக்கில் கரியார் (குறள்-277), நுண்மான் நுழைபுலம் இல்லான் (குறள்-407), முதலிலார் (குறள்-449) பொச்சாப்பார் (குறள்-535) கழிபேரிரையான் (குறள்-946) போன்ற குறை மக்களின் பொதுமைப் பெயர்களும்,

வாழ்க்கைத் துணைநலம் (குறள்-51),தோட்டார் கதுப்பினாள் (குறள்-1105), திருநுதல் (குறள்-1123), மென்னீரள் (குறள்-1111) போன்ற நன்மகளின் பொதுமைப் பெயர்களும்

மாயமகளிர் (குறள்-918), பொருட்பெண்டிர் (குறள்-913) போன்ற தீமகளிர் பொதுப்பெயர்களும் உள்ளன.

### திருக்குறளில் பழமொழிகள்

திருக்குறளில் 200 இற்கு மேற்பட்ட தத்துவங்கள் இலங்குகின்றன. இருப்திற்கு மேற்பட்ட பாமர மக்களின் பழமொழிகளையும் காண முடியும்.

"எச்சிற்கையால் காக்கை ஓட்டாதவன்"
"ஈரங்கை விதிரார்..." (குறள்.1077)
"வருமுன் காப்பது நன்று"
"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை..." (குறள்-435)
"கைமுதல் இல்லான் கடைத்தேறுவது எப்படி?"
"முதல் இலார்க்கு ஊதியம் இல்லை..." (குறள்-449)
"கெட்டவர்க்கு நட்டார் இல்லை"
"கெட்டார்க்கு நட்டார் இல்..." (குறள்-1293)
"எண்ணெய் கொண்டு தீயை அணைக்க முடியுமா?"
"நெய்யால் எரிநுதுப்போம்..." (குறள்-1148)
"உலகம் புரண்டாலும் அவன் மாறமாட்டான்"
"ஊழி பெயரினும் தாம் பெயரார்..." (குறள்-989)
"போனா மயிரோ போச்சு"
"தலையின் இழிந்த மயிர் அனையர்..." (குறள்-964)
"செத்த சவத்தைக் கட்டிக்கிட்டு மாரடிச்ச மாதிரி"
"ஏதில் பிணம் தழீஇ யற்று..." குறள்-913)
"காலா காலத்தில் களையைப் பிடுங்கு"
"இளைதாக முள்மரம் கொல்க..." (குறள்-879)
"கையிலே கத்தியை ஒளிச்சி வந்தது போல"
"தொழுதகை உள்ளும் படை ஒடுங்கும்..." (குறள்-828)

### திருக்குறள் உரைகள்

பண்பாட்டில் சீர்குலைந்த மக்களுக்கு பண்டைய தமிழ் இலக்கண இலக்கியங்களை முன்னிறுத்திக் கற்பிக்கத் தொடங்கினர். இதனால் பண்டைய தமிழ் இலக்கண இலக்கியங்களுக்கு உரை காண வேண்டிய தேவை ஏற்பட்டது. தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர் பேராசிரியர், நச்சினார்க்கினியர், நல்லாடர், சேனாவரையர், தெய்வச் சிலையார் போன்றவர்களும் சங்க இலக்கியங்களுக்கு நச்சினார்க்கினியர், பரிமேலழகர் போன்றவர்களும் உரை வகுத்தனர்.

"தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர் பரிமேலழகர்
பருதி- திருமலையர் மல்லர் பரிப்பெருமாள் காலிங்கர்
வள்ளுவர் நூற் கெல்லையுரை கண்டாரிவர்"

எனும் தனிப்பாடல் கூறுகின்றது. மணக்குடவரே திருக்குறளுக்கு உரை வகுத்த முதல் உரையாசிரியராகத் திகழ்கிறார். திருக்குறளுக்கு உரை வகுத்த பதின்மருள் மணக்குடவர், பரிப்பெருமாள், காலிங்கர், பரிதியார், பரிமேலழகர் ஆகிய ஐவர் உரைகளே கிடைத்துள்ளன. இவற்றுள் காலத்தால் பிற்பட்டதான பரிமேலழகர் உரையே மிகச் சிறந்த உரையாகச் சான்றோர்களால் கருதப்படுகின்றது.

பண்டைய தமிழ் இலக்கியங்கள் யாவும் ஓலைச் சுவடிகளிலேயே எழுதப்பட்டு வந்தன. தாளும் அச்சு இயந்திரமும் கண்டு பிடிக்கப்படாத காலத்தில் எழுத்தாணி கொண்டு எழுதுவது கடினமான பணியாகும்.


எனவே அக்காலச் சான்றோர் பெருமக்களில் சிலர் மட்டும் தமிழ் இலக்கியங்களை ஓலைச்சுவடிகளில் எழுதிப் பாதுகாத்து வைத்திருந்தனர். பெரும்பாலானோர் யாவற்றையும் மனனம் செய்தே வைத்திருந்தனர். ஆயினும் பிற்காலச் சந்ததியினரின் கல்வியறிவின்மையாலும் அறியாமையாலும் இலக்கியங்கள் கால வெள்ளத்தில் அழிந்து போயின. முதன் முதல் அச்சில் வெளிவந்த திருக்குறள் பதிப்பு கி.பி. 1812 இல் "திருக்குறள் மூலப் பதிப்பு" எனும் பெயரில் பதிப்பிக் கப்பட்டது. முதன் முதல் அச்சில் வெளிவந்த திருக்குறள் உரை நூலாக திருத்தணிகை சரவணப் பெருமாள் ஐயரின் உரை திகழ்கிறது. 1838 இல் சென்னையில் வெளியிடப்பட்டது. அச்சேறிய முதல் உரை என்பது குறிப்பிடத்தக்கது.

1849 இல் சென்னை எம் வீராசாமிப்பிள்ளை அவர்களால் முதன் முதலாகப் பரிமேலழகர் உரை முழுவதும் பதிப்பிக்கப்பட்டது. முதன் முதலாக அச்சில் வெளிவந்த பரிமேலழகர் உரை இதுவேயாகும்.

### திருக்குறளின் பல்வேறு பெயர்கள்

திருக்குறளுக்கு வழங்கும் பெயர்களையும் அப்பெயர்களிட்டு அழைத்த சான்றோர்களும் வருமாறு, அறம்- புலவர் ஆலத்தூர் கிழார்.

- உத்தரவேதம்- ஆறுமுகநாவலர்.
- எழுதுண்டமறை- கம்பர்.
- குறளமுது- புலவர் பொன் கோதண்டராமன்.
- தமிழ் மறை- ச. தண்டபாணிக தேசிகர்.
- பொதுமறை- கு. மோகனராசு.
- வான்மறை-மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.
- திருமறை-கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை.
- திருவள்ளுவப் பயன்- நச்சினார்க்கினியர்.
- திருவள்ளுவர். சாமிநாத தேசிகர்.
- தெய்வமாமறை-சோடாசவதானம்சுப்பராய செட்டியார்.
- பழமொழி- அருணகிரிநாதர்.
- பொய்யாமொழி- வெள்ளிவீதியார்.
- பொருளுரை- சீத்தலைச் சாத்தனார்.
- முப்பால்- கல்லாடர்.
- வள்ளுவமாலை- வேங்கடசுப்ப பாரதியார்.
- வள்ளுவர் வாய்மொழி - மாங்குடி மருதனார்.
- வள்ளுவன் வாய்ச்சொல்- இறையனார்.
- குறள் வெண்பா- கோவூர்கிழார்.
- உலகப் பொதுமறை- வீ. முனிசாமி.
- திருக்குறள்- மறைமலையடிகள்.



### திருக்குறள் பற்றிய தனிச்சிறப்புக்கள்

- தமிழ் நெடுங்கணக்கின் அகரத்தில் தொடங்கி னகரத்தில் முடியும் நூல்.
- திருக்குறளில் "தமிழ்" என்ற சொல் பயன்படுத்தவில்லை
- திருக்குறளில் உள்ள அதிகாரங்கள்- 133
- திருக்குறள் அறத்துப்பாலில் உள்ள குறட்பாக்கள்-380
- திருக்குறள் பொருட்பாலில் உள்ள குறட்பாக்கள்- 700
- திருக்குறள் காமத்துப்பாலில் உள்ள குறட்பாக்கள்- 250
- திருக்குறளில் உள்ள மொத்தக் குறட்பாக்கள்- 1330
- திருக்குறளில் உள்ள சொற்கள்- 14000
- திருக்குறளில் உள்ள மொத்த எழுத்துக்கள்- 42194
- திருக்குறளில் தமிழ் எழுத்துக்கள் 247 இல் 37 எழுத்துக்கள் மட்டும் இடம்பெறவில்லை
- திருக்குறளில் இடம்பெறும் இருமலர்கள்-அனிச்சம், குவளை
- திருக்குறளில் இடம்பெறும் ஒரே பழம்- நெருஞ் சிப்பழம்
- திருக்குறளில் இடம்பெறும் ஒரே விதை- குன்றின்மணி
- திருக்குறளில் இடம்பெறும் இரண்டு மரங்கள்- பனை, மூங்கில்
- திருக்குறளில் இருமுறை வரும் ஒரே அதிகாரம்- குறிப்பறிதல்
- உலகமொழிகளுள் பைபிளுக்கு அடுத்து மிக அதிகமான மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட நூல்.
- மறை மலையடிகள் அறிவித்த திருவள்ளுவர் ஆண்டு இன்று உலகம் முழுவதும் தமிழர்களால் தமிழ் ஆண்டாகக் கணக்கில் கொண்டு பின்பற்றப்படுகின்றது.
- மொழி, இனம், காலம், இடம், கடந்து எல்லாச் சமயத்தினராலும் உலகப் பொதுமறையாகப் போற்றப்படும் ஒரே நூல்,

"அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்"

என்று ஔவையாரும்

"கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுக்க தறித்த குறள்"

என்று இடைக்காடரும்

"ஆலும் வேலும் பல்லுக்குறுதி
நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி"

என்று பழமொழியும் செப்புகின்றது.

குறட்பாவில் அமைந்துள்ள எழுசீர் வார்த்தைகளில் ஒரு வார்த்தையைக் கூட வேறு மாற்று வார்த்தை போட்டு அதே பொருள் வரும்படி நிரப்பி விட முடியாது. அந்த விற்கு சொற்சொட்டாகச் சுருக்கமாகப் பொருட் செறிவோடு வார்த்தைகளை ஏற்றி வள்ளுவர் பாவமைத்திருக்கிறார்.

ஜெயம் ஜெகன்

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 115

## பித்தவெடிப்புக்கான நிவாரணம்



**எனக்கு வயது 34. எனது இரண்டு குதிக்கால்களிலும் ஏற்பட்டுள்ள பித்த வெடிப்பால் ஏற்படும் வலியினால் எனது அன்றாட வேலைகளைச் செய்ய முடியாமல் மிகவும் கஷ்டப்படுகிறேன். எனது பித்த வெடிப்புக் குறைவதற்கு ஏதாவது நிவாரணம் உள்ளதா?**

முதலில் பித்த வெடிப்பு என்றால் என்ன? பித்தவெடிப்பு எவ்வாறு ஏற்படுகின்றது? என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

பித்த வெடிப்பானது பெரும்பாலும் கால்களில் பொதுவாகக் காணப்படும் பிரச்சினைகளில் ஒன்றாகும். பித்தவெடிப்புகள் கால்களின் அழகைக் குறைப்பது மட்டுமல்ல மிகுந்த வலியையும் ஏற்படுத்துகின்றன. எமது உடலின் நிறை எமது கால்களாலேயே தாங்கப்படுகிறது.

தொடர்ச்சியாக நீண்ட நேரம் நிற்றல், நடத்தல் போன்றவற்றினால் பாதங்களின் சருமம் கடினமாகவும் தடிப்புத் தன்மையாகவும் மாறுகின்றது.



உடலின் நிறையினால் மேலிருந்து கீழாக அழுத்தம் பிரயோகிக்கப்படுகின்றது. இவ்வாறு அழுத்தம் பிரயோகிக்கப்படும் போது கால்களிற் காணப்படும் தோலின் கொழுப்புப்படை விரிவடைகின்றது. இவ்வாறு விரிவடையும் தன்மை குறைவடையும் போது பாதங்களிற் பித்த வெடிப்பு ஏற்படுகின்றது.

### பித்தவெடிப்பு ஏற்படக் காரணங்களாவன

கால்களின் சருமத்தின் உலர்ந்த தன்மை (xerosis), குதிக்கால் தோல் தடித்துக் கடினமாகக் காணப்படுதல் (callus), உடல் நிறைச்சுட்டி அதிகரித்தல் (BMI), நீண்ட நேரம் நிற்றல், நடத்தல், தோலின் வளையும் தன்மை குறைவாக இருத்தல், குதிக்கால் மூடப்படாத செருப்பு வகைகளை அணிதல், அருந்தும் நீரின் அளவு குறைதல், குளிரான காலநிலை, உங்கள் வீட்டினுள் வளியின் ஈரப்பதன் குறைவாக இருத்தல், முதிர்ச்சியடைதல், தைரொயிட் சுரப்பி நோய்கள் (Hypothyroidism), நீரிழிவு நோய் (Diabetia Autno neuropathy), தோல் வியாதிகளான psoriasis, Eczema போன்றவை உங்கள் கால்களிற் பித்த வெடிப்பை ஏற்படுத்தும் காரணிகளாகும்.



### பித்தவெடிப்பு ஏற்படும்போது கால்களின் சருமத்திற் காணப்படும் அறிகுறிகளாவன

தோல் சிவந்து நிறம் மாறுதல், வலி ஏற்படுதல், தோல் தடித்துக் கரடுமுரடாகுதல், தோல் உரிதல், அரித்தல், இரத்தக் கசிவு ஏற்படுதல்.

பித்த வெடிப்பானது ஏற்படும் வகைகளைக் கொண்டு அவற்றைச் சிறியளவான; தற்காலிகமான பெரிய பித்தவெடிப்புகள், என வகைப்படுத்தலாம். சிறியளவான, தற்காலிகமான பித்த வெடிப்புகள் காலநிலை மாற்றங்களினாலும் உடலின் நீர்த் தன்மை பற்றாக்குறையினாலும் ஏற்படுகின்றது. இவ்விரு வகையான பித்தவெடிப்புகளும் தானாகவே மறைந்துவிடும் தன்மையுள்ளவை. வலியோ, இரத்தக் கசிவோ ஏற்படுவதில்லை.

இவ்வகையான பித்த வெடிப்புகள் வேறு எந்த பெரிய விளைவுகளையும் ஏற்படுத்துவதில்லை. ஆனால் பெரிய பித்த வெடிப்புகள் நீண்டநாட்களாக வலியையும், வேதனையையும் கொடுக்கும். அத்துடன் ஆழமான பித்தவெடிப்புகள் இரத்தக் கசிவை ஏற்படுத்துவதோடு கிருமித்தொற்றுதலுக்கும் உள்ளாகின்றன. (fungal infection) பித்த வெடிப்பைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது முற்றாக குணமாக்குவதற்கு நீங்கள் பாதணிகள் உங்கள் கால்களுக்கு மென்மைத் தன்மையை கொடுக்கக் கூடியதாகவும் கால்களை மூடக்கூடிய விதத்திலும் சரியாக அணிதல் வேண்டும். நாளாந்தம் அதிகளவு நீர் அருந்துதல் வேண்டும்.

உங்கள் கால்களைப் பற்தூரிகை கொண்டு சவர்க்கார நீரினாற் கழுவி நன்றாகத் துடைத்து படுக்கைக்குப் போகுமுன் சிறிதளவு எண்ணெய் அல்லது ஈரப்பதன் தரக்கூடிய கிறீம்வகைகளைப் பூசி படுக்கைக்குச் செல்லவும்.




இவ்வாறு நாளாந்தம் செய்து வர பித்தவெடிப்புக்கள் குறைய வாய்ப்புண்டு. அதைத் தவிர நீங்கள் உங்கள் உடல் நிறைச் சுட்டியை விடக் கூடுதலான உடல் நிறை உள்ளவர் எனின் உடல் நிறையைக் குறைக்கும் வழிமுறைகளைக் கைக்கொள்ளவும்.

நீங்கள் தைரொயிட் சுரப்பி நோய் (hypothyroidism) நீரிழிவு தோல் சம்பந்தமான வியாதிகள் உள்ளவராயின் தோல் சிகிச்சை நிபுணரின் ஆலோசனையை நாடுங்கள்

மருத்துவர். சி.கனிமொழி

## நகங்களைப் பாதுகாக்க

**கடந்த ஒரு மாதமாக எனது வலது கையில் உள்ள நகங்களைச் சுற்றியுள்ள தோல் சிவந்துபோய் வீக்கத்துடனும் வலியுடனும் காணப்படுகிறது. நகத்தின் நிறமும் மாற்றமடைந்துள்ளது. இதற்கு நான் என்ன செய்யலாம்?**



இது பரோனைக்கியா (paronychia) எனப்படுகிற நகங்களைச் சுற்றியுள்ள தோல் மடிப்புக்களில் ஏற்படும் ஒருவகை கிருமித் தாக்கம் ஆகும். இது பற்றீரியா அல்லது பங்கசால் ஏற்படலாம்.

இங்கு நகங்களைச் சுற்றியுள்ள தோல்மடிப்புக்கள் மிகவும் வலியுடனும் சிவந்து வீக்கத்துடனும் காணப்படும். சிலருக்கு சீழ் நிறைந்த கொப்புளங்களும் உருவாகலாம். நகத்தின் அமைப்பு, நிறம் மாற்றமடைவதுடன் நகப்படுக்கையிலிருந்து நகம் வேறாகிக் காணப்படலாம். நகத்தைச் சுற்றியுள்ள தோலில் ஏற்படும் காயத்தாலோ அல்லது அதிகநேரம் தண்ணீரில் நகங்கள் இருப்பதாலோ இந்த நோய் ஏற்படலாம்.

இதற்காக நீங்கள் வீட்டில் வெதுவெதுப்பான நீரில் ஒரு நாளைக்கு 2 அல்லது 3 தடவைகள் கை நகங்களை அழுத்தி வையுங்கள். இது உங்கள் நக வீக்கத்தையும் வலியையும் குறைக்கும். பாதிக்கப்பட்ட நகங்களை எப்போதும் உலர்ந்த நிலையில் பேணவும். இந்த நோய் நிலைமையைப் பரிசோதித்து உறுதிப்படுத்தவும். வைத்தியரால் வழங்கப்படும் மாத்திரைகள் அல்லது பூச்சு மருந்துகளைப் பெற்றுக்கொள்வதற்கும் நீங்கள் வைத்தியசாலையை நாடுவது நல்லது. உங்களுக்கு நீரிழிவு இருக்குமாயின் அதனை கட்டுப்பாட்டில் வைத்திருப்பது அவசியமாகும்.

நகங்களையும் அதனைச் சுற்றியுள்ள தோலையும் ஒழுங்காகப் பராமரிக்க வேண்டும். நகங்களிலோ நகங்களைச் சுற்றியுள்ள தோலிலோ காயம் ஏற்படுவதைத் தடுக்கவும். நகங்களைக் கடிப்பதையோ, பிய்ப்பதையோ தவிர்க்கவும். நீங்கள் பாவிக்கும் சலவைத்தூளில் இருந்து நகங்களைப் பாதுகாக்க கையுறைகளைப் பயன்படுத்தலாம்.

### நீரிழிவு உள்ளவர்கள் தமது காலின் உணர்திறனை அறிந்து கொள்ள...

நீரிழிவு நிலை உள்ளவர்களுக்கு அவர்களின் பாதங்களின் உணர்திறன் குறைவடைவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. இந்த நிலை ஆரம்பத்திலேயே கண்டறியப்பட்டால் கால்களில் புண் ஏற்படுதல், கிருமித் தொற்றுகை, அவய இழப்பு, மூட்டுகள் சேதமடைதல் போன்ற பிரச்சினைகளை தவிர்த்துக் கொள்ள முடியும்.

உங்களின் பாதங்களின் உணர்திறனை அறிவதற்கு நீங்கள் கண்களை மூடி கால்களை நீட்டியவாறு இருந்து கொண்டு மற்றுமொருவரை உங்களின் கால் விரல்களின் அடிப்பகுதியை மெதுவாக தொடுமாறு கூறவேண்டும். அவர்கள் தொடுவதை உணர்ந்து கொள்வது உங்களுக்கு கடினமாக இருந்தால் உங்களின் கால்களின் உணர்திறனிலே பாதிப்புகள் இருப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. எனவே இதனை நீங்கள் உங்கள் வைத்தியரை சந்திக்கும் பொழுது தெரியப்படுத்துவது நல்லது. இவ்வாறு சோதிக்கும் முறையை தொடுகைச் சோதனை என்று சொல்லுவார்கள்.

Dr.சி.சிவன்சுதன் (பொது வைத்திய நிபுணர்.)

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்